மச்ச முனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

மெய்ஞானம் பெருநூல் காவியம் - 800



தாமரை நூலகம்
வடபழனி, சென்னை - 26.

மச்ச முனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

மெய்ஞானம்

பெருநூல் காவியம்–800

பதிப்பாசிரியர்

ஆர். சி. மோகன்

தொலைபேசி எண் : 23620249

தாமரை நூலகம்

7. என். ஜி. ஓ. காலனி, 3வது தெரு,
வடபழனி, சென்னை – 26.

தாமரை வெளியீடு எண்-29

முதல் பதிப்பு : ஜூன் 2007

இரண்டாம் பதிப்பு : மார்ச் 2019

நூலைப் பற்றி

நூலின் பெயர்	:	மச்ச முனிவர் பெருநூல் காவியம்-800
பதிப்பாசிரியர்	:	ஆர். சி. மோகன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, என். ஜி. ஓ. காலனி, வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	:	மார்ச் 2019
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	டெமி 1 x 8
தாளின் தன்மை	:	14.4 வெள்ளைத்தாள்
அச்சு எழுத்து	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	132+6
பிரதிகள்	:	1200.
பைண்டிங்	:	செக்ஷன்
விலை	:	ரூ.70/-
அச்சிட்டோர்	:	கிரியேட்டிவ் ஆஃப்செட், சென்னை - 34.

பதிப்புரை

மச்சமுனி பெருநூல்காவியம் 800 எனும் இந்த நூல் திண்டுக்கல் மாவட்டம், பழனி கிரிவீதி அடிவாரத்திலுள்ள சண்முக சேவா சங்கத்தைச் சார்ந்த திரு சின்னசாமி என்பவரால் மனதுவந்து வழங்கப்பட்டதாகும். ஏட்டுப்பிரதியிலிருந்து அப்படியே அச்சிடப்பட்ட இந்நூல் குறைந்த பட்சம் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். எங்கள் வசம் கிடைக்கப் பெற்ற இந்நூலில் உள்ள காகிதங்கள் மிகவும் நைந்து போய் தொட்டால் பொடிபொடியாகும் நிலையில் இருந்தன. மிகவும் சிரமப்பட்டு கணினியில் இதனை பதிவு செய்யப்பட்டது. ஒரு சில பாடல்களில் வார்த்தைகள் மற்றும் வரிகளில் சிதைவு காணப்பட்டன. முடிந்தமட்டும் குறைவான குறைபாடுகளுடன் இந்நூல் தயாரிக்கப் பட்டுள்ளது. வேறு யாரேனும் நல்ல பிரதி வைத்திருந்து நல்மனதுடன் அளித்தால் இதில் உள்ள பிழைகளுக்கு திருத்தம் வெளியிடப்படும் எனவும் தெரிவித்துக் கொள்கிறோம். பல அரிய விஷயங்கள் அடங்கிய இப்பொக்கிஷத்தை வழங்கி இந்த நூலை உயிர்ப்பிப்பதற்கு உதவிய திரு சின்னசாமி அவர்களுக்கு எங்களது நன்றியை காணிக்கையாக்குகிறோம்

ஆர்.சி. மோகன்

பொருளடக்கம்

காப்பு	1
செகவசியமை.	3
வசியமூலிகை	4
வசியத்தகடு	5
மோகனம்	6
ஆக்ருஷணம்	6
உச்சாடனம்	6
தம்பனம்	7
அன்றில்வித்தை	10
கரும்பிறாந்துவித்தை	11
பட்சிசாலம்	11
பாஷாணமை	12
கருநாவிமை	12
சவ்வீரம்	13
வழலைகுரு	13
உப்புநிற தூரிசிநீறு	14
பதினெட்டுமூலிமூலம்	14
மாத்திரைகள் பச்சிலைத்தூள்	15
இராசி பூதமறிய	15
சிரக்காய்லேகியம்	15
சுரமாத்திரை சன்னி 13க்கும்	15
மகாவாடை	16
மருந்துயீடு	17
பிரிந்தார்கூட, கலப்பு	17
பேய்பிடிக்கு	18
அறுகன்புல் மருந்து,	19
அரவு வித்தை, பாம்பராணி வித்தை அதாவது அரணை	19
பல்லிவித்தை சூதமணி	20
இரசக்கட்டு	20
ரசசெந்தூரம்	21
கெடியாடுகிறசிமிட்டுவித்தை	22
மாடன்மந்திரம்	22
சவ்வீரவைப்பு	23
அரிதாரவைப்பு,சூடன்வைப்பு	23
மாயப்பொடி	24
வானம்பாடிக்குருவிவித்தை	24
கெசமோதிரவித்தை	25
மாரனதம்பனம்	26
கும்பநாகவித்தை	27
ரிஷிகள்மரபு தெரிந்தவரலாறு	29
எதிரியை நடக்கவித்தை	30
வருந்திசைப்பார்த்துசொல்லவகை	31
மதியசூது எதிரிக்கு	31
பெண்ணழைக்க	32
திசைவட்டஞ்செய்யுந்தொழில்	32
புவனைவட்டஞ்செய்யுந்தொழில்	33
இராசிகோசரவட்டம்பார்த்துச் சொல்லல்	34
திருடுகளறிய	34
கலைக்கியானவட்டம்	34
அண்டபிண்டவித்தை	35
கபாலவித்தை	36
கடலையில் செய்யுந்தந்திரம்	36
அருபவித்தை, ஆக்ருஷணம்	37
பிரிந்தவர்கூட	38
எடுத்தகாரியஞ்சாதிக்க	38
எண்ணிக்கைவித்தை	39
தெரிசங்கு, சத்துருமாரணம்	40
சோதிவிருட்சம்	40
இலக்கங்கழித்துரைக்க	41
வினாவிகேட்டால்	42
பட்சிக்குப்பச்சிலை	43
பஞ்சபட்சிசெய்யுந்தொழில்	43
எழுத்துமுறை. சரக்கு	44
ஏழுசீலைமண்	45

பேய்கள் வரவழைக்க 46
மாற்றஉபாயம் சீட்டுவித்தை 46
முளைகிடாவ 47
பூதங்கள் வணங்க 47
பிரத்தியான் பணம்பறிக்க 48
பிறவூர்பெண்களுக்குப் பிரமத்தி 48
படைமாற்று விரும்புதலியாதாற்கு
கன்னியைத்திரு, கருவி வாயுஸ்
தம்பனம் செப்படி வித்தை 48
அக்கினிசலத்தம்பனம் 49
பிசாகவூழியக் களஞ்சியம்வாரிவர 49
இதற்கெல்லாஞ்சேர்மானம் 49
பூதப்பிரேதங்களுக்குப்பெலி 50
இதிகலால் வவ்வால்வித்தை 51
கோகரணம் 52
கோகரணமுருமாற்றமை 53
வாய்வுஸ்தம்பம்,பிணிகட்டிமறைய 57
சகலபதார்த்தம் பொரிபணம் காசு
பொய்வித்தை 57
இரசவாதத்தயிலம் 60
சவுக்காரச்சுண்ணம், துருசுக்குரு 61
கோகரணவாடை 62
கொடிகட்ட 63
படைபோட 64
சத்துருசங்காரம் 67
மூட்டுதிர, ஆதிமூலிகைவரலாறு 68
கொடிய வெள்பாஷாணகட்டு
செந்தூரம் 69
பூநாக சிறிசின்னிவித்தை, 69
அரிதாரம் 69
செல்செரி 70
கறுமலைசெம்மலை சத்திவித்தை 71
சிறுகண்ணாகக்கட்டு 72
சவ்வீரக்கட்டு 72
கெந்திவண்ணி மூலிகெற்பம் 73
திருட்டுத்தனங்காண 75
விடையிடைய 76
சொக்குத்தூள், மின்துடரிபின்
துடரி, மோடிதெய்வமந்திரம் 77
லபிமந்திரம், மதிமந்திரம் 78
கறுப்பண்ண அய்யன்பிடாரி 78
காளிசக்கதேவி, குட்டிச்சாத்தி 79
வீரபத்திரன்,அரசன்துதி,மாடன் 79
காட்டேரி, சங்கிலியன் 80
மொட்டையன், காலன் 80
நமன்,பொல்லாதசல்லியக்கயறு 81
ஏகமந்திரம் 82
இரசவாதசாதிவரணக்குறிப்பு 84
அமுர்தமே நவாச்சாரம் - தற்
சனையிற்றோய்த்து - ஆள்
காட்டிவிரல், எழு பூநீர் 88
பேயேது பூதமேது-புதையல்
எடுக்க கண்ணுக்குதெரியும் 89
மிச்ச பூ 7 ம் நாதம்-இந்திரியம்
தயிர்போல் உரையும் 89
வியாதிக்குக் கொடுக்க 95
சுரத்திற்கு சன்னிக்கு அரிதார
செந்தூரம் 97
பன்னிரண்டு வயது 98
சோடசப்பெண் 99
பற்பவகை விபரம் 100
மூலிகை கிஷாயத்திரையம் 100
பொன்னூமத்துசித்தகத்தி 101
கொன்றைசெந்தொட்டிசங்கு 101
அசுபகர்மத்தாளைவெல்ல 101
ஓரை, புருஷலட்சணம் 102
கற்பம், சாயாவிருட்சம் 104
தலைதிரிகிவிருட்சம் 105
இரசாங்கமூலி 107
தொழுகண்ணி 108
அரவுவாட்டிப்பச்சிலை 108
நத்தைச்சூரி, வேளை 109

மேனி, தொட்டால்வாடி	110
வீழி, கருங்காலி	110
பேய்முசுட்டை, தகரை	111
உடைவேற், நெரிஞ்சி	111
எருக்கு, நாயுருவி	111
எட்டி	112
கூடுவிட்டுக் கூடுபாயல்	116
குறளிக்குப்பூசை	118
மைவகை	119
கோல்விடாரம்	124
செப்புமந்திரம், குருமந்திரம்	126
மறவுமை	127
குளநரிகற்பம்	129
மதவானை மண்டை	130
கருங்கழுதைமண்டை	131

உ

கடவுள் துணை

பதினெண் சித்தர்களின் மகா மகத்துவம் பொருந்திய

மச்ச முனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

மெஞ்ஞானம்

பெருநூல் காவியம்

எண்ணூறு

காப்பு

ஆதியந்த வேத வித்தாரத்தை எந்தன்
ஆதிகுருவென்ற தொருபிடி நாக்கீசர்
சோதிபர வெளியான சொரூபானந்தஞ்
சூட்ச சடாதார பீடம் துரியாதீத பீடம்
ஓதுபிரண வாச ரீங்கார பீடம்
உமை முனைக்கே வெகுதூல வாதாரத்தை
பாதி சராசர ரூபவிந்து நாதம்
பர பிரமம் மூல கணேசன் காப்பாமே. 1

மூலரோடு பதினெண் பேர் பரணாதாக்கள் முத்திபெத்த சத்தரிஷி தெசுஷ்ணாயம் ஞாலமிசை தெரிந்துரைத்த பாடல் தேர்ந்து ஞானமொடு வாதவழி செகசாலங்கள் - தூவமது சூட்சமது மவுன பூசை சூட்டி வைத்த வளலை சவுக்காரப் போக்கு பாலமது போட்டாப் போற்திரையைத் தாண்டி பானுமதி பிடிப்பதற்கு மிவ்வெண்ணி பாரே. 2

சீர் பெற்ற தகப்பனெங்கள் பிண்ணாக்கீசர் சிறந்த திரு மூலரெங்கள் செரிய தந்தை - யார் பெற்ற போகரிஷி யெனக் கண்ணாவி யவர் பெற்ற கொங்கணரும் கருவூராரும் - பேர்பெற்ற ரசவாதங் கைகண்டா

ரென்பெருநூல் எண்ணூறு மிது பிசகாமல் தான்-பார் பெற்ற கும்பமுனி பெருநூலும் பரிபட்சம் வைத்த மச்சைமுனி பதினெண்பேரே. 3

பதித்திருந்த ஞானவழி னிதங்காப்பு பதித்திருந்த மறைநாலு வேதங்காப்பு - பாடிய நூல் பதினெண் பேர் பாதங்காப்பு உதித்திருந்த பிரணவத்துக்குள்ளாய் நின்ற - ஓங்கார மூல வினாயகன் காப்பாமே - பதித்திருந்த மறை நூலும் வேதங் காப்பு பாடிய நூல் பதினெண்பேர் பாதங்காப்பே. 4

காப்பாகு மென்குருவே பிடிணாக்கீசர் கைலாச சட்டை முனி மூலனாயன் - கூர்ப்பான சுந்தரனு போகநாதர் கொங்கணருங் கோரக்கர் பிர்ம சித்தர் - வார்ப்பாக அவரவர்கள் கூர்ந்து பார்த்து வாதமொடு ஞானவரை மாற்கமெல்லாம் - தீர்க்காகப் பாடிவைத்தார் தெரியாதப்பா செப்பினேனிந்த யெண்ணூர் தெரிந்துபாரே. 5

பாரப்பா பொதிகைமுனி பெருநூலொன்று பாடினாராயிரத்து யிருநூறாக - நேரப்பாயானுமிந்த யெண்ணூறு சொன்னேன் நேத்திரம் போல தோணுமடா வித்தையெல்லாம் - ஆரப்பா அவனியிலே தொடுக்கப்போறார் ஆதியிலே விட்ட குறை யிருந்தால் கிட்டும் - சீரப்பா பிசகாது ரெண்டு நூலுந் தேர்ந்தவனே மகாசித்து செய்வான்பாரே. 6

செய்வதற்கு செப்புகிறோம் கருவைக்கேளு செகந்தனிலே யுண்டான செடிபூடெல்லாம் - கொய்வதற்கு வேளைகண்டுபிடுங்கிவந்து குருவறிந்தால் மந்திரத்தால் கொடுத்துப் பாரு - நெய்வதற்கு வோடமிட்ட வயணம்போலே நெறிநின்று சகல சித்தும் நிலைக்கப்பாரு - உய்வதற்கு வழிபாரு பொய்பேசாதே யொருநாளுங் குருமொழியை மறுத்திடாதே. 7

மறந்துருகி மனந்தேரி யுபாய மந்திரம் மச்சனென் பேரதற்குமுன்பு மறைக்குலத்தில் - பிறந்திருந்தேன் என்தேசம் மச்சதேசம் பிரம்மனுக்கு தொண்டுசெய்து பிறகுதானே - அறந்தழைக்க வோதிவைத்தார் வித்தையெல்லாம் அவருடைய புண்ணியத்தால் வறையிலேறி - நிறைந்த சித்தராச் சிறந்தனிலே சென்று நிஷ்டையிலே நின்று குருநிலை கண்டோமே.

கண்டவுடன் பிடிணாக்க ரமூர்தமூட்டி கண்மணிபோல் வளர்த்தென்னைக் கருணைகூர்ந்து - அண்டரொடு முனிவர் சபைதன்னில் கூட்டி யாள்படுத்தி யுருவாக்கி வைத்தாரய்யா - மண்டலத்தோர்க் கென்னூலைப் பாடிச் சொன்னோ மவுனகுரு தீட்சையொன்று முன்னே பாடி - கொண்டபின்பு யெண்ணூறென்பதையும் பாடி குறியறிய நிகண்டுமொன்றுங் கூறினேனே. 9

கூறினவன்சிவனாற்கும் பொதிகைமேவும் குருமுனிக்குயென்பாடல் கூறினார்பார் - தேறினாரிருவர்களுங்களிகூர்ந்தன்பாய்ச் செம்மையிது மச்சமுனிசேயென்றார்கள் - ஆறினபேர்க்காமெனது பெருநூலெண்ணூற் அறிவித்தேன்குருவருளாலவனியோர்க்கு - மீறினதோர் பசகளுக்கு ஆகாதப்பா வேதாந்தகுறுவறு ளால்விளம்பினோமே. 10

விளம்பினதோரின்னூலைமனதில்வைத்து வெளிவிடாதடக்கிநல்ல வித்தையெல்லாம் - தளம்பாமல்செய்வித்துவெளியேரப்பா சற்குறுவின்கையாலேதொட்டுக்காட்டக் - குளம்பாதுசகலதொழி லஷ்டகறுமம் குலவரைமேல்தீபமிட்டக் குறிபோற்றோன்றும்- உளங்கனிந்தால் மெய்ஞ்ஞானியாவார்பாரு வொறுத்தறுக் குமென்னூலை கொடுக்கொண்ணாதே. 11

கொடுப்பதுதான்சிவன்வந்துகோலங்கொண்டு கொடுபத்தாவென்றாலும் கொடுக்கவேண்டாம்- விடுப்பது தானுயிரைவிட்டுக் கொடுக்கலாம்பார் விழலானவுயிர்வாழ்க்கை யானதாலே - அடுப்பதுதான் வேதாந்தம்கற்கவந்தா லரனாட்டுமயநாட்டு மயனராட்டு - தொடுப்பது தான்சாகாமலிருக்கசொன்னால் தொண்டனென்று ஒருவித்தைசொல்லலாமே. 12

சொல்லவுமேயார் சொல்வார்நாம்சொன்னோமோ சொன்னமறை சாத்திரங்கள் சொல்லும்பாரீர் - மெல்லவுமேமெய்ஞ்ஞானம் பெறமெய்யானால் வீணிலேயொறுத்தரிடம் நூல்கொடாதே - அல்லவென்று நூல்கொடுத்தால் நரகில்வீழ்வாய் ஆளாகமாட்டாநீ பரத்துக்கப்பால் கொல்லவென்றுயிறுதயத்தில் நினைப்பாயாகில் குற்றம்வறுமுடலுயிறுக் கெல்லாந்தானே. 13

செகவசியமை

தானென்றவசியமினிசொல்லக்கேளு சகலத்திற்குமொருமனதாய் தணதாய்ப்பண்ணு - மானென்ற வெள்ளிமதிதிறண்டகன்னி வஸ்திரத்தில் தாமரைநூல்வளையமிட்டு - மூனென்றகலசத்தில் சலமொன்றிட்டு உதையாதிதொடங்கையிலேசூரிவேரை - நங்கென்ற பிடிங்கிவந்து கலசத்துள்ளே நாழிசலமளந்துவிட்டுவேரும்போட 14

போட்டவுடன் வெண்சீலை வேடுகட்டி புகழாகவெண்சாவலுதிர மூட்டி - ஆட்டவுடனடுப்பின் மேல் கவிழ்த்துவெட்டை அடுப்பிலிடுமுன்னே வளையம்வெட்டை விளக்கேற்றிக்கொள் - நீட்டமுடனாவிநெய் கொண்டெரித்து நீர்வற்றவருமட்டும்

நினைவாய்வெட்டை - கூட்டவுடனிறக்கி வெட்டையவிழ்த்துப்பாரு குருவருளாம்புத்து போலாடைமீதே. 15

ஆடையென்றபுத்துமையை வழித்துவாங்கி அதினுடனேவாசமுள்ள புனுகுசவ்வாது - வாடையென்றகுங்குமப்பூ விட்டுவாட்டி மகிழ்ந்தகோரோசனையுங்கூடக்கூட்டி - பேடைமயிலாளுடனே அரசர்சாபம் பிறசாதியுள்ளவற்கும்பின்னேதுக்குங் கூடையிலேகாரியங்கள் கொள்ளும்போதும் குறியானபிறைனுதலில் கூட்டிப்பாரே. 16

வசியமூலிகை

பாரப்பா யிம்மைக்குச் சாபமில்லை பகையில்லை பேயில்லைபிசாகமில்லை ஆரப்பா நிஷ்ட்டியில்லை •யேவலில்லை அக்கியானங்குணங்களில்லை பில்லியில்லை - நேரப்பாசகலரும் வசியமாவார் நின்னுடையவிதனமதி விட்டுசென்றால் - காரப்பா வசியமூலிகையைக்கேளு கருக்குருவாயட்டகர்மஞ்செய்ததாலே. 17

செய்யவேதிருமூலநாயன்பூடு தேசத்தில் நிரம்பவுண்டு ஆண்பூடப்பா - பையவேவாயிரம்பூண் டிருந்ததானால் பாரியென்றபெண்பூடு வெள்ளைப்பூவாம் - உய்யவேமுளைக்கும்பார் தோற்றாதப்பா உன்விழியால்கண்டவுடன் பதனம்பண்ணு - கொய்யவேதிருவோணம் வுச்சம் பார்த்துக் கூறிருளில்பெலிபொங்கலிட்டுவாங்கே. 18

வாங்கிவந்துதங்கத்தில் பொதிந்துகொண்டு மணிக்குளிசம்திரு மூவரென்றுவைத்து - நீங்கிவந்து துட்சணத்தை விட்டுநல்ல நினைவாக வெள்ளிதிங்கள் தூபங்காட்டித் - தாங்கிவந்து சிகைதனிலே தரித்துநீ வாசகலவட்டகர்மவித்தைதாமேயாகும் - ஓங்கிவந்துஒருத்தருக்கு வசியங்கேட்டா லுன்கையாலொரு வேரைப்பிடிங்கிக்கட்டே. 19

கட்டுவது வசியமென்றால் விஷ்ணுமூலி கருநீல பூபூத்ததெதுவானாலும் - வெட்டுவது திருவோணவுச்சம்பார்த்து வேர்பிடிங்கிகட்டிவிடுவளையத்தாலே - முட்டுவதுசோமவா ரத்தில்சென்று மோகினிசொரூபாயென்று பெலிகொடுத்து - வெட்டுவதுவிஷ்ணுகிரந்தி மூலந்தானும் வேரதனைக்கட்டிப்பார்வசியத்துக்கே. 20

வசியமுறைவருணனிடமாயிருக்கு விகுமட்டும்வணங்கியுபசரித்து துவாலரூபி - வசியமடாநீசெய்தவித்தை யெல்லா மானிலத்தில்கைப் பலிதமாகும்பாரு - வசியமடாயுண்மையுண்மைமிருந்துதானால்

வாய்ப்பாச்சுமுகவசியம்சகலத்திற்கும் -வசியமடா ஆருக்கும் வணுப்போல்மையை வதனத்திலிட்டுநீபோகச்சொல்லே. 21

போகவே அவரவர்கள் மனபாகந்தான் பூரிக்கும் பொன்மணமும் கைக்குள்சிக்கும் - ஆகவே பூவையரும்தொடராற் சற்பம் அஞ்சியடிபணியு மன்னதானபேரும் - ஏகவே யருகிருத்திக் கொள்வாரப்பா யிவ்வேரு மிந்தமையுமிருந்துதானால் - சாகவேமாட்டாநீ யொருநாளுந்தான் தரணியிலே நீயுமொறுசித்தனாமே. 22

சித்தனென்றுபெயரெடுத்தாலிந்தமையைச் சிறுகவிட்டு ஏரண்டத்தெண்ணைவிட்டு - அத்தமென்றகரத்திலிட்டு விழித்துப்பாரு அந்தமணி சென்னியின்மே லாக்கிக்கொண்டு - வெத்திகொண்டுகையிட்டு நிதிமேற்சாடும் விள்ளாதே பேய்பூதமிம்மைக்கில்லை - சத்தியமாய் சொல்லிவிட்டேன் வெளியிற்போட்டால் தலைதெறித்துப் படீரென்று வெடிக்கும்பாரே. 23

வசியத்தகடு.

வெடிக்கும்பார் தகடொன்றுவெள்ளித்தங்கம் மேலான தாம்பரத்திலெதுவானாலும் - அடிக்கும்பாரங்குலமோ விரல்நாலைந்து ஆறுவிரல் நீளமிட்டு அறைகீரிட்டுப் - பிடிக்கும்பாரிறுபத்தஞ் சடைத்திட்டாக்கால் பெறுமநயவசியென்று வசிநயவென்று - இடிக்கும்பார் நயவசிமசிமநய வென்று யேந்திரத்திலவ மசினயென்றிட்டேறே . 24

இட்டேறுபக்கமொடு பீசமெல்லாம் எடுத்தரிந்துயினப்படிவேறைந்து கொண்டு - தொட்டேறுகுலமிடைபீசமிட்டுச் சொன்னகுறு முனிபோகன்மகனன்னூறும் - கொட்டேறும்கடைக்காண்டம் பூசை தீட்சை கூறினாரனந்தமுறைகொண்டேசாடும் - முட்டேறுந்தடைப் படாயேந்திரங்கள் மூட்டுமடாநாற்பத்திமுக்கோணமே. 25

கோணாகும்வயமையும்வசியமுலி கூறினேன் வசியமந்திர கோணமெல்லாம் - வீணாகுமின்னமொன்று நினைந்துகொண்டு வெவ்வேறுசித்திரத்தைப்பார்க்கவேண்டாம் - ஆணாகும்பெண்ணாகு மார்க்கத்தாலு மவரவற்குயொவ்வொன்றுசுத்தியெய்தும் - தூணாகுந்துரும்புமென்றுசொல்லிப்போட்டோம் துரியாதிதச் சுகத்தோடறிந்து கொள்ளே. 26

மோகனம்

அறிந்துகொள்ள மோகனத்தையறையக்கேளு அகண்ட பரிபூரணமாயறிவிற்கூட்டிப் - பிறிந்துகொண்டபெரியோர்க்கா யிருபத்தைந்து பேணியேவயநமசிநமயவென்றும் - செறிந்துகொண்டு சிவயநமாய நமசிவவென்றும் - சிறப்பானமசிவயநவென்றுமாறி எறிந்து கொண்டுநெல்லோதி நிற்கும்போது யெந்திரத்துக் கோமஞ்செய் பொரியைத்தூவே. 27

தூவியேகட்டிக்கொள் மோகனங்கள் சொன்னபடியாடுமடா முண்மைமூலம் - தாவியே யுன்னிடமேயிருக்கட்டப்பா சத்துருவுமித்துருவுந் திருவுமோகம் - ஆவியேபொருளுடல மூன்றுமாச்சு யாரேணுமோகனங்கள் செய்யேனேன்றால் ஏவியேயிந்தமுறை நீறித்தாக்கி யிந்தவெண்ணீர் பூசிப்போரெதுக்குமென்னே. 28

ஆக்ருஷணம்

எதுவானஸ்திரீபுருஷர் அரசசற்ப மின்பமாம்பசாசு தெய்வமனைத்து மொக்கும் - பொதுவாகுமென்றுகொடுத் தனுப்புஞ்சித்தி பூதலத்திலாக்கிருஷணம் புகலக்கேளு - மதுவாகுயநமசிவ யநமசியென்று மைந்தனேசிவயநம மசிவயநவென்று - அதுவாகநமசிவய வென்றுமாட்டு அறையினில்யடைக்க வாக்கிறுஷ்ணமாமே. 29

உச்சாடனம்

சணமேவுமுன்போலயந்திரங்கள் தான்செய்துதரித்துகோ பிறர்க்கேட்டாக்கால் - குணமாகநீறிலிட்டுக்கொடுத்துப்போடக் கொண்டு வருந்தெய்வமுதல்துருவமட்டும் -பணமாகஸ்திரீ புருஷாள்ராசரோடு பார்க்குமுன்னேவருவார்கள்பத்திசித்தி - அணமாக நினையாதாக் கறுஷ்ணங்கள் ரகசியமாமோகனங்கள் முகவசியமூன்றே. 30

மூணுக்குமொருகருதான் மகாசித்தாட்டு மூட்டுகிறேன் பேதனமைசாடனத்தே - மூணுக்குமாரணதியானந்தான்மூல மென்னதிங்க ளெட்டிலிறந்தபிண்டம் - மூணுக்கும்சிந்திக்கயெடுத்துவந்து முகஸ்தம்பமையாக்கி வைத்துக்கொண்டு - மூணுக்குந்தொழிலதுசெய்யும் போது முகத்தினிலேவாணுதலில் தடவிடாயே. 31

தடவியேமூன்றுக்கும்வெவ் வேறுமூலி சாற்றுகிறோமெருக்கிலை சாடவேயாடும் - படவியேரவிமதியந்திரும்பும்போது பருவிரலிலத்த மிட்டுப்பிடிங்கிவாநீ - புடவியேசிவயந வமசிவயநமவென்று பூட்டவே

நமசிவய யநமசிவவென்று - அடவியேவயநமசியென்றுமுன்போ லாட்டடாசாடணங்களாடும்பாரே. 32

ஆடுவதுயிந்தயிருபத்தைந்தாலே அடைப்பதுவும் வகைக் கெல்லாமிருபத்தைந்து - தேடுவதுபேதினஞசித் தகத்தின்மூலம் சித்திரை மீனுச்சத்தில் பிடிங்கிக்கொண்டு - சாடுவதும்யநம சிவவமயநசிவெண்ணு சண்ணடா நசிவமய யநசிவமவென்று கூடுவதுமயநசிவ வெண்ணுமாறி கொள்ளுமுன்போல்கருவுருவாய்ப் பேதஞ்செய்யே. 33

பேதஞ்செய்கட்டுக்கு மூலமொண்ணு பிறகுமந்தவேர்பிடுங்கி யாடும்பிள்ளாய் - வேதஞ்செய் மசியநவமசியந வெண்ணுவிருதிட்டு நயமயசிய நவமசிவென்று - வாதஞ்செய்சியநவம வமசியநவென்று மகாகொடுமைசொல்லிவிட்டேன்மச்சநாவால்-போதஞ்செய்வேஷணத்தைப் புகலப்போறோம் பூமியிலேவிடந்தீஞ்சான் பூரமுச்சம். 34

உச்சத்தில்பிடிங்கிவந்து மையைக்கேளு உரியவரைதகரைவறித் தோட்டில்கேளு - மிச்சத்திலத்தயிலம் வடித்துமையாம் வேஷணங்க செய்யயிலேகலைதொட்டேறி - அச்சத்திலாடுமடாவேஷணங்க ளான தெல்லாஞ்சிணத்திலே யமைத்திட்டோமே - வச்சற்றவித்தைக்கு யிருபத்தைந்து மலைபோலேவளரவினிவகை சொல்வோமே. 35

தம்பனம்

சொல்வோமேயவநசிம மயவநசி சிமயவந நசிமசிவ சூட்டிப்பார் மடாசயங்கூடு - வெல்வோமேதம்பனத்துக் காலம்வேதாம் யிருகாமுச்சத்தில் விளர்வோமையாம் - புல்நேர்மைநமசிவபயநமசிவவெண்ணு பூட்டிப்பார்வயநமசி சிவயநம மசிவயந - நில்வோமஞ்செய்துசித்திசெய்து கொண்டு நீருனைத்தம்பமெட்டுஞ் சித்தியாச்சே. 36

ஆச்சப்பா அட்டகருமக்கருவையெல்லாம் மடக்கிவிட்டேன் தொழிலாளியானால்பாரீர் - பேச்சப்பாசெம்பரி தின்கட்டுதானும் பெண்பாலாம் விருட்சத்திலிருந்துதானால் - வாச்சப்பாபோச்சுனக்கு கருவைக்கேளு வகைவிபரமாகவுந் தானுரைப்பனப்பா - மூச்சப்பா புந்திநாளம் மாவாசி மூலவீட்டில்காணமிந்த நாலுங்கூட்டே. 37

கூட்டினால் ரவிமதியந் திரும்பும்போது கூடெடுக்கப்பிரமாவால் கூடுமோபார் - தேடினார்மகாபாவஞ்சொல்வதற்கு தேசிகருங்கொண்டுவந்து பொசிக்கும்பாரு - நாடினால்கொல்லுமடாவராவொட்டாது நாகத்தின்

விஷமடக்கிதலைமேற்போடும் - ஓடினாலந்தவித்தை சிற்றியாது வுபாயமாய்ப்பொம்மைக்கட்டிக் கூறுவாங்கே. 38

வாங்கிவந்துஓடுகிற நதியிற்கூட்டை மணிமணியாய்பொருக்கி வொன்றாய்போடுபோட்டால் - ஓங்கியேசத்தெல்லாம் நதியிலோடும் ஒவ்வொன்றாய்பதினெட்டு பேரெதிற்கும் - தாங்கியேயிறக்கி வைத்துச் சோதகத்தை சாற்று கிறோம் மயக்கத்தால் தண்ணீர் விட்டு நீங்கியே நாயிறு நாளுதையஞ்செய்யில் நிறைகுடத்தில் பதினெட்டு வேறும் போடே. 39

போட்டவேர் பதினெட்டுஞ் சித்திரமூலம் போயெடுத்துவந்து வைத்தபொருளேதென்றால் - நீட்டவேகருப்பிடித்த வுருவாய்முன்போல் நினைந்திருக்கவேண்டுமென்று நினைத்ததாலே - கூட்டவேசெய்வித்துக் கொடுத்தமூலங் குருவென்றுமனதிலொன்றுநினைத்துக்கொண்டு - ஆட்டவேயின்னவித்தை செய்வாயென்று அனுசரித்துக்கை நொடிக்க மிதக்குமென்றே. 40

ஒன்றானவேறெடுத்து மடிப்பில்வேறே யுள்ளடக்கிப் பின்னுமொன்றை நினைத்துக்கொண்டால் நன்றாகமிதக்குமடாயிப்படி யேவந்த நாதாக்கள் பதினெட்டு பேர்கள்மூலந் தின்றாலுஞ் சாகாமலிருக்கலாம்பார் செகசாலவித்தையெல்லாஞ் செய்யலாகும் - அன்றுரித்தமான்தோலும்சடையன்வாக்கு அப்பனேதப்பாது செய்துபாரே

செய்துபார் நினைப்பதென்னசித்தர்நாமஞ் செப்பையிலேவருமடவர் கெருடன்றானும் - மெய்யும்பார் மடிப்பினிலேயிருந்தவேரை வேறாகஒவ்வொருத்தர் திருநாமத்தை - உய்யும்பார் சொல்லியந்த வேரைத் தொட்டாலுன்விரலிலொட்டித் தானிருக்கும்பாரு-பையும்பார் பதினெட்டுபேர்கள்பேரும் பகரையிலேஒட்டின வேரடையாளம்பாரே. 42

அடையாளமென்பேறு சொன்னவேரை யடுத்தடுத்துப்பார்ப்பளவில் தங்கம்போலாம் - மிடையாளமப்பொன்னுவுரைக்குங்கல்லி வக்கீறல்யென்ன சொல்வேன் பத்தரைமாத் தாணிதேறும் - உடையாளிதானறியச் சொல்லிப்போட்டேன் உலகத்திலாருக்கும்விள்ள வேண்டாம் சடையாமல்தங்கத்தில்பொதிந்துகொண்டு தலைமுடிமேல் தரித்துநீ நினைத்தவித்தை 43

வித்தையென்னயினியுரைப்பேன் வினையந்தன்னை விளம்பின நூல்வழியல்லோநினைக்கப்போறாய் - இத்தைவிட்டு நீவேறே நினைந்தாயானால் லெய்துமோகாரியங்களில்லையில்லை - பத்தைவிட்டுப் பதினொன்றாநாள் சொல்லுவன்கேள் பார்தனிலேயிவ் வினையம்

பகர்ந்திடாதே சித்தருக்குத்தெரியுமடா வினையமாற்கஞ் சென்மத்தில் மெய்ஞ்ஞானி யறிவான்பாரே. 44

அறியவேசொரூபமாய்ச் சொல்வேனப்பா ஆதியிலேவேர்ப்போட்டு யெடுக்கத்தானும் - குறியவேயென்செனனம் லக்கமென்ன குறிப்பறிய வேண்டுமென்று நினைப்பாய்முன்னே உறிதியாமறுதிறந்தா நினைக்கக்கேளு வுண்டுமோபிறப்பின்ன மென்றேயுன்ன, அறிதிதான்கடைசி யென்றால் வேர்மிதக்கும் அல்லவின்னம்பிறப்பிருக்கு மென்றால்க்கேளே. 45

கேளப்பாமிதவாது வேர்தானென்று கிளர்த்தினேன் மகாகொடுமையென்றேமுன்னே - மீளப்பாவேறை யொன்றை நினைக்கச்சொன்ன விதியென்ன விதுதாண்டாயிப்பிறப்பில் - ஆளப்பாமெய்ஞ்ஞானங் கிட்டாதப்பா ஆனதினால்வேறேநினை வென்னகேளு - மூளப்பா வைத்தியங்கள் மந்திரவாத மூர்க்கமுள்ள செகசாலவித்தையாடே. 46

ஆடவேசரிதையின்னமிருக்குதென்று ஆதிதொகுத்தந் தந்தவரை சனனந்தன்னைத் தேடனேதெரியுமப்பாமுன்வேர்தன்னைச் சிவலிங்கம் பாணத்துபூசித்தாக்கால் - கூடவேகூட்டிவிக்குங்கிரிகையோகம் குருஞானங்கொடுக்குமடாநடப்பில்பாரு - நீடவேரண்டாம்வேர் மிதக்கத் தானும் நீநினைப்பதென்னவென்றால்பிணிபேயன்றி. 47

பேயன்றிசத்துருக்கள் பயமுமன்றில் பில்லிசூனியங்களன்றிப் பிதத்தலன்றி - நீயனறிவிஷமன்றிக் கருவியன்றிச் சிலேட்டுமத்தால் வாதையன்றிச் சினமுமன்றி வாயன்றிவறுமையன்றி வசவுமன்றி மனதொன்று யிருப்பதற்கு மயக்கமன்றி நோயன்றிதீர்க்காயுசுதானிருக்க நொடியிட்டுநொடிக்கும்வேர்மிதக்கும்பாரே. 48

மிதந்தவொன்றுகுளிசமிட்டுச் சென்னிமீது விதித்தவிதிபிரமா வென்றணிந்துகொள்ளே - துதந்தவெரிதற்கடுக்கநினைப்பதென்ன துயிலுறக்கமயக்கமுற நினைவோதோன்றும் - மதன்பிறகுயேவல்செய்ய பூதமெல்லா மடிவணங்கவென்று நினையதின் வேர்தோன்றும் - வதம் பெறவேபராக்கிரமத் துவங்கள்வரவேவேண்டு மஞ்சாமல்வேறென்றால்க் காணுந்தானே. 49

காணவேயென்வாயால் கண்கட்டென்று கருதவேயாறாம் வேர்க்காணலாகும் - பூணவேபுவியிலுள்ள பூவைமார்கள் பொருந்தநினையெளாமல்வேர் புனல்மேற்றோன்றும் - நாணசீவசெந்து

யெதிலிட்டாலும் நடந்துவாயெட்டாம்வேர் நினைக்கமேவுந்-தோணவேநவக்கிரகதோஷந்தீரச் சொல்லி நினையொன்பதாம் வேர்மேவிச்சே. 50

மேவியேவுருமாற்றும் பத்தாம்வேரு மிதக்கையிலேவுருக்காணும் பதினொன்றாம்வேர் - தாவையிலேயிடிவிலகும் பனிரண்டாம் வேர்சத்துருக்கள்தலையறுக்கும் பதிமூன்றாம்வேர் - பாவைகிரகம் மிகுபதினாலாம்வேர் படைதெரிக்கும்பதினைந்தாம் வேர்கண்டாலே - தேவரிஷிநிதிகாணும்பதினாறாம்வேர் திரைகடல்மீன்வரைநகளும் பதினேழுக்கே. 51

ஏழுக்காய்ப் பதினெட்டு மூலமெய்தா லீசனீயல்லாது யிங்கேயேது. ஆழுக்காய்மாருக்காய் நீயொப்பாகும் அரிப்பிரமாவரினு முளைத்தாண்டப்போமோ - பாழுக்காயிந்தயெண்ணூற் பாடிப்போட்டேன் பகர்ந்ததிலுமெண்மடங்கு பதின்மடங்கு - கோழுத்ததொர்குண்டினிக்காய்ச் சொன்னேனின்னூல் கோடானகோடிவித்தை யினிமேல்த்தானே. 52

அன்றில்வித்தை

இனியென்னஅன்றில்மூட்டையிரண்டுமுட்டை யிருந்துபனையடியிலொருவுபாயங்கேளு - தனியென்னகொழுவிரும்பு வுழுதுதேய்ந்தால் சாணீளமிரண்டாணியீட்டிபோலே - பணியென்னயரவுகடிகொள்ளும் போது படிந்தடித்துப் பனையிலேறுபாயமாகத் - தொனிமுளையக் கடாவிவிட்டு வாய்பேசாமல் துடக்கறுத்துநீர்மூழ்கி மனையிற்செல்லே. 53

செல்லவேமுட்டைரெண்டும் பொரியாதப்பா ஸ்திரீபுருஷாளிருவருமாய்தீவிற்சென்று - வெல்லவேற்கொல்லவே ளிரண்டுங்கொண்டு வீடுபுகுமதின்பிறகு ஆணிரண்டுஞ் - சொல்ல தூள் தூளாய்ப் போகுமப்பா துடக்கறுத்து குஞ்சுபொரித் தப்பால்ப்போகும் - அல்லவே கூடெறியிட்டாற்றிப்பாரு அந்தவேர்நீளமொன்று வுருண்டையொன்றே. 54

ஒன்றானரெண்டுவேர்வேகாதப்பா ஓடுகிறதண்ணீரி லேறும்பாரு - குன்றானமலையிலுண்டுதெரியாதப்பா கொல்லவேருருண்டையாயிருந்த தப்பா - நன்றாகவெல்லும்வேர் நீண்ட தப்பா நாட்டினிலேட்டு விலங்காணிபெருங் - கொன்றாலுஞ்சத்துருவைசெயிக்கவுண்டை குண்டியிலே லூசிகுத்தி விளக்கில்வாட்டே. 55

வாட்டவதுள்ளிவிழுஞ் சேவல்போலே மாண்டுதடாபகையெல்லாம்

வையமீதில் - மீட்டுமேவுசிதனைபிடுங்கிப்போட்டு விழலாற்றிநீர மூக்கிப்பதனம்பண்ணு - பூட்டுவேர்தாம்பரத்தி லடக்கிவைத்து பூசிப்பாயிரண்டுக்குந்தருணம்வந்தால் - நாட்டுவாய்தேவிமுன்புவைத்துப் பூசை நடவாட்டால் தூபமிட்டு வித்தை செய்யே. 56

கரும்பிறாந்துவித்தை

செய்வதென்னகரும்பருந்து வகையேதென்றால் செகத்தினிலே பால்மரங்க ளாகாதப்பா - உய்வதென்னமற்றமற்ற யிடமதாகு மூர்தனிலேசலம் விழும்போதெடுத்துவந்து கைவசமா யிடுக்காட்டில் பிணங்கால்மாட்டில் காசினியிற்சதுரமாய்க் குழியாய்க் கெல்லி - அய்வருக்காமோமத்தீ யெரியிட்டுப்பார திலஞ்சுவேர்வேகாதிருக்கும்பாரே

இருக்கும்வேர்தனையெடுத்துப் பிணத்தில்மீதில் யெரிந்தகரியஞ் செழுப்பாய்த் தீயாற்றிமுன் - பொருக்கும்பார்வுன்னெதிரிமனையிற் சென்று பூமிதொட்டுவெளிவரைக்கு மஞ்சுவீடும் - கருக்கொண்டுதான்கீறிய தனில்வேரைக் காணாமல்பதித்துவைத்து அப்பால்வந்து - நெருக்கும்பார்கரும்பருந்துநசியென்றோத நெட்டுரம் பண்ணுமடா அகத்திற்றானே. 58

தானானநோய்பிணிகள் சஞ்சலங்கள் தலைசுத்தல்பயித்தியக் கோடாகோடி - ஊணாகமசியென்றே யோதும்போது ஓகோகோமாரணங் களோதும் போதும் - ஆனாலும்பாவமிதுதெய்வஸ்தான மாலையத்திலந்தணர்கள் காலந்தோறும் - போனாலுமிவ்வரைஞர் சண்ணும்பாரு பொருள் வேண்டி நிவர்த்திசெய்து போடுபோடே. 59

பட்சிசாலம்

போடவேகபாலமெடுத் தப்பால்சென்று புனல்நீரையமுங்கவிட்டு கண்ணிற்குத்தி - சாடவேபாவைபட்சிதண்ணீருண்டு தகையாறீப் பிடித்துவந்துசாற்றக்கேளீர் - பாடவேயெட்டுநாட் கப்பால் தண்ணீர் பருகையிலேகொன்றுலர்த்திப்பற்பம்பண்ணி - நீணவேயுனக்கிணங்கா பெண்கள் பேரில் நீரதனைதெறிக்கையிலேரிஷியாவாளே. 60

ஆவாளேநாளுக்கு நாடழிந்து ஆடவர் போல்மார்புகொண்டுஞ் சுருங்கிப்போகும் - சாவாளேநீசென்று சேராட்டாற்றான் சற்குருவின் திருநீரு சண்ணும்பாரு-மாய்வாளே பேசையிலே விணங்கினாக்கால் மசரிக்கு முன்குளிசம்சிரசிற்கட்டிப் - பேய்வாளேதலைவழியேசிலமாரித்தால் பிசாகபிடித்தீர்ந்து முன்போல்ப் பாவைமார்பே. 61

மார்பென்னதளதளத்தூரதிபோலாவாள் மாய்வாடா அரைச்சணம் நீ பிரிந்தாயானால் - பார்வைவிழிபச்சைநீரதைத்தொட்டாலும் பாணியிலே தான் முழுகப்பரிகாரந்தான் - சேர்வதென்னபாவாய்மெய் பட்சியாதல் திருவெண்ணிறம்யிராதல் படலாகாது - தீர்வதுதான் கட்டமடாகுளிகை கண்டால் தீருமடாசணத்திலேசெய்து பாரே. 62

பாஷாணமை

செய்துபார்பாஷாண மையைக்கேளு திறமானபாஷாணம் தன்னைவாங்கி - வைழ்துபார்மத்தஞ்சார்வார மொன்று வஸ்துவிட்டுக் கோரக்கர் மூலிச்சாறும் - பெய்துபார்பேய்கருப்பம்பாலுங்கூடப் பிசகாமல் வாரமொகு வகையாய்த்தாக்கி - எய்தும்பார்மண்டலஞ்சென்றெடுத்தாயானா லிந்திரியந்தனிலாட்டி ரவியில்வையே. 63

ரவியிலேகெந்தியிட்டு யேழுநாளும் நாதத்திலப்படியேயேழு நாளும் - புவியிலேவிஷமூட்டிக் கொதிசோற்றுக்குள் பழுத்துவைப்பாய் சாரமொன்றுவாங்கி - அவிபுடமொன்பதுபோட்டு நாய்வாய்க் குள்ளமுக்கியதைக் குழியவிட்டுயெடுத்துக் கொண்டு சவியடவாதனை யோட்டி லரைத்துப் பூசி தழல்காட்டக்கபாலமைப்படரும்பாரே. 64

படர்ந்தமையைக் கத்திகொண்டு கழிந்து வாங்கிப் பகவின்வெண்ணெய் தேன்குழைத்துப் போட்டுப்பாரு அடர்ந்துவரும் பூதமெங்கேயோடிப் போச்சு அம்பலவர் திருநடனம்பாஷாணத்தில்-கடர்ந்தமுதல்கைக்குளெவரும் போட்டுப்பாரு கேசரதிபாஷாணமையிதப்பா துடர்ந்தவினையொழிந்து வீற்றிருப்பாயப்பா சுகமாகக்கரு நாவிமையைகேளே. 65

கருநாவிமை

மைகேளுகருநாவிவிரல் நீளத்தில் மாயவனார்மண்டையிலே தாக்கி வாங்கி - மெய்கேளுகழுதையது கழிந்துதானால் வெகுசுறுக்குகரு நாவியதுக்குள்வைத்து - கைகேளு கபாலத்தி லரைத்துப் பூசிக் கருவாக முன்பாகமையைவாங்கிச் செய்கேளுயார் கையிலிட்டிட்டாலும் திறவியங்கள் கிடக்குமிடந் தேறும்பாரே. 66

தேறவேசவ்வீரக்கட்டிவாங்கிச் சிறுசின்னிச்சாறு விட்டுவரைத்துக் கொண்டு - ஆறவேநரிப்பல்லுங்கூடப் போட்டு யரைத்தந்தமண்டையினிலப் பிமுன்போல் - மீறவேயடுப்பேற்றி யெரித்துமையை வேண்டியே கையிலிடுநிதிகளெல்லாம் - பூறவேகைகீறியெடுக்கலாகும் பொன்கோடி யிருந்தாலும் கருச்சொல்லாதே. 67

சல்லீரம்

கருவென்னவழலையடா ஆணியாகுங் கைகொண்டவித்தையடா கொடிகட்டிக்கோ உருவென்ன சல்லியத்துக் கெட்டுமாத மொருத்தருக்குங் குருவாணையுரைத்திடாதே - திருவென்னரசவாதம் பத்துமாதஞ் சென்று தென்றால்வேதையது பத்துமாதங் கருவென்ன யிதாண்டவேறொன் ருண்டோகட்டிடாய் குடிகெடுத்தபாவிநீயே.

வழலைகுரு

நீயென்னமூன்றுவைந்து யெட்டுமாகும் நிரத்தமிடுபத்துமேற் பனிரண்டாண்டு வாயென்னதெரியாதோ வழலைக்கூறு வந்தவனே ரசவாதி மந்திரவாதி - போயென்னபோகாம விருந்ததென்ன பொன்வெள்ளி ரெண்டுமில்லா திருந்ததாலே - காயென்னபிஞ்சென்ன யெட்டுக்குள்ளே கனியென்னதசம் பன்னீராண்டுதானே. 69

ஆண்டொன்றுவிளைந்தறுத்து வளர்ந்துபூக்காய் அங்காடி தனிலிருக்குஞ் சரக்குவாங்கி - மீண்டந்தகடைக்காரன் தனையும்வாங்கி விலைகொடுத்தசீமானில்வைத்துவாட்டி கூண்டந்தகொல்லனிலை மேனி வாட்டி கொல்லவந்தகூற்றுவனுங் கூடக்கூட்டி - யூண்டந்தவடிபாலுந் தேனுங்கூட்டிப் பொங்கலிட்டுக்கணபதிக்குப் பூசிப்பாயே 70

பூசிக்கப்பொதிந்துவைத்து வாசங்கூட்டிப் பொட்டிட்டுயெட்டெடு வித்தைக்குந்தான் - ஆசித்துப்படியாட வாடைசேரும் அளவிறந்தமைசேரு தயிலஞ்சேரு - நேசித்தவுருமாற்றமிட்டுப்பாரு நிமிஷத்தில் கண்கட்டுந்தொழிலைப்பாரு - சேதிக்குங்கிட்டாது அருமைப் பிள்ளையென்ன சொல்வேன்யுனைப்போலசெய்காணேனே. 71

சேய்க்காகவுள்ளகரு வெளியாய்ப்போட்டேன் செய்வித்துத்தொழில் மூடிப்போனவனேசித்தன் - பேய்க்காட்டுக்குடல்கொடுப்போனே ளமட்டை பேசியென்னவவன்பேச்சைப் பேசவேண்டாம் - நோய்க்காட்டுசித்தனென்றபுண்ணாக்கீசன் நொடிவித்தையெனக்குரைத்த தொழில்களெல்லாம் - யேக்காட்டித்தாமறனடாவாதக்காட்டைப் புகலுகிறேன் வழலைக்குவயணங்கேளே. 72

வழலைகுரு

வயணமென்னவவரவரை வெவ்வேறாக மார்க்கமாய்ப்பாடிவைத்தார் சுளுகுபோலே - அயணமென்னமூலர்மகன் போகநாதன் அம்பலவர்

திருநடணங்கண்டாற் கொஞ்சம் - வியனமுற்றமற்றமற்ற சித்தரெல்லாம் விண்டார்களில்லையடா கண்டசேதி - பயணமுற்றும்பொன் மேருவேறே யொன்று பண்ணுகிறேன் பிழைக்கவுமேபாலர்காவே. 73

பாலர்காய்த்திங்கள் நிறைந்ததைத்தான்வாங்கிப் பண்பான அமுரியிலேநிறையமுக்கி - ஆலக்காய்விட்டுயதில் மூன்றுநாள் அதன்பிறகு திருமேனிச்சாறு பூசி - மேலொக்கதுவாலையிட்டுயிதுமூன்றுநாளும் விட்டபின்புவயணமென்ன அத்தர் பூசி - மாலொக்கச்சாம்பிராணி புகையைக்காட்டி மருக்கொழுந்துதான் சூடிவைப்பீரிதே. 74

உப்பு நீறுதுரிசிநீறு

வைப்பீரேபிண்டத்தைத் தாளிச்சட்டி வத்தவைப்பீர்சுண்டவுமே ஆடைச்சாற்றில் அப்பீரேபொடியாக்கி வைத்துக்கொண்டு வரிதானவழலைகுருவானபேரை - உப்பிலேகாவிவிட்டு வறுக்கும்போது வுரைப்பதென்னவெண்ணீறு போலேயாகுந் - துப்புரவாய்த்துருசுக் குக்கவசங்கட்டிச் சூரியனில்சுண்ணமதைவைத்துவையே. 75

பதினெட்டுமூலிமூலம்

வைக்கவேபரிதிமதி யுதையந்தொட்டு வழுத்துகிறேன்சித்திரையில் மாதந்தன்னில் மெய்க்கவேயிரவியுச்சம் திரும்பிவார வேளையிலே பதினெட்டு மூலிவேரைத் தைக்கவே பெலிகொடுத்துப் பிடுங்கக்கேளு தைவேளைதிருமேனிசிறியாநங்கை - மிக்கதோர் நரிவிரட்டி மத்தம் விடத்தலைகையான்றகரைகொடுப்பைதும்பை. 76

தும்பைநாயுருவிசிறுநெருஞ்சிசூலி சூரியுடைதகரைசெருப்படியகத்தி நம்பினவேர்பதினெட்டும் பிடிங்கிவந்து நாடுதற்கு முத்தெய்தி தொடுக்கக்கேளு - அம்புவியில்பதினெட்டாந்தெய்திமட்டும் அகப்பட்ட வேறொன்றுதினமொன்றாகத் - தம்பியே சீர்மடக்கிப்பிடிங்கி வந்து தானரைப்பாய்மிளகு போலெல்லாமொன்றாய். 77

ஒன்றானமிளகு றுண்டைநிழலுலர்த்தி யுற்பனமாய்பத்திரமாய் வைத்துக்கொண்டு - மென்றினிலேபிணிவந்த பேற்கோறுண்டை மவுனமுற்றுப் பதினெண்பேர்பேரைச்சொல்லித் - தின்றுவிடப்பிணிதீறும் சிறுவர்க்கப்பா சீலையிலேவைத்துருட்டிக் கட்டத்தீறு மின்று மொறுதீர்மானம்பிணியேதென்றா லீளைவலிபதினெட்டு சூலைரோகம். 78

மாத்திரைகள் பச்சிலைத்தூள்

ரோகமென்றபதினெட்டுக் குட்டந்தீரும் நோயென்பதெல்லாம் போமுபாயத்தாலே - வாகமுறுவைகாசிபதினைந்துக்குள் மதியமுச்சந் திறும்பயிலேபலமூவைந்து - பாகலிலைவேம்பினிச் சங்கங்குப்பி படர் முர்கிநிலவாகை பாண்டிமூலம் - வாகயிதுவீழியிலைகொத்தாநொச்சி மறுனூணிக்கறுநொச்சிமஞ்சணாத்தி. 79

ஆற்றியிதுசுடுதொட்டி பதினைந்துக்கும் அப்படியே தினமுமதைக் கொறுகுத்தாகப் - போற்றிசெய்து நிழலுலர்த்திப் பொடித்துக்கொண்டு பூரணமேவளர் பிறையாம் தின்னச்சொல்லு - நேத்திவந்தவாதசிலேற் பனத்தால்வந்த நிறுமூலவாயுவெங்கே யேப்பமெங்கே - தார்த்தி நட்டங்கிரந்தியெங்கேயொழிந்துபோச்சு தாரணியில்யாவருக்கும் விடந்தீர்ப் பாயே. 80

இராசி பூத மறிய

தீரயிலேயானியிலே பன்னிரண்டு பூக்கள் செங்கமலம் அல்லியிலே பிச்சிப்பூவும் - மீறவேதாழம்பூவாடாமுல்லை வெந்தோன்றி நாயுருவிமத்தம் பூவாம் - ஊரவேயாவாரம்பூ உசிலமாம்பூ வுத்தபனிரண்டுபூ வுலர்த்திமுன்போல் - ஆரவேபூத்தயிலம்வடித்துக்கொண்டு அரகராமுன் சொன்னபுண்ணிற்போடே. 81

போட்டவுடன் புண்புரைகளாறிப்போகும் புகழாடியொன் பதிலே காய்வித்தாமே - ஆட்டவுடனத்திக்காயாலங்காயும் அரசங்காய்முந்திரிக்காய் வேலங்காயும் - மீட்டமுடன் பூவரசகாயுமாங்காய் எள்ளுக்காயேலக்காய் ஒன்பதாச்சு - கூட்டமிடு முன்பாகஞ்சபதுரித்து கொண்டு வர்த்தி யிடித்து வடிகட்டிடாயே. 82

சிரக்காய்லேகியம்

கட்டியேதேன்விட்டுக்கிளறிகொண்டு கரிமுகனைப்பூசித்து லேகியத்தை கெட்டியாய்தின்றுவர நோய்களெல்லாம் கெதிகெட்டேயோ டுமடாபுவியேழைக்கு - பட்டினியாயாராய்ந்து லேகியத்தையீவாய் பணங்காசுமில்லாதபாவியோற்கு - இட்டிடவேதர்மம்வரும் வயித்தியபாக மெடுத்துரைக்க சகலசித்துமெய்தும்பாரே. 83

சுரமாத்திரை சன்னி பதின்மூன்றுக்கும்

எய்தும்பாராவணிக்கு காயஞ்சுக்கு யியல்வானவாலுளுவை கடுகோமுள்ளி உய்யும்பார்ஓமஞ்சேரஞ்சுங்கூட்டி யோரமுரிதனிலரைத்து

வுண்டையாக்கி - பெய்யும்பார்சுரங்களுக்கு முன்பாகஞ்செய் பிணிதீருஞ் சிறுவருக்குங் கூடக்கேளு - அய்யமெல்லாதீர்ந்ததடா புரட்டாசிக்கு அறையுறேன் நான்குமருந்தாகத்தானே. 84

ஆகத்தான் கெவுரிவெள்ளை வீரம்தாரம் அப்படியே வமரியரைப் போன்றுபின்னும் - போகத்தான் குமரியரைப்பொன்றும்வஸ்தும் பூட்டியரைகடைசிலே தேன்விட்டப்பா - ஏகத்தான் சன்னிபதிமூன்றுந் தீரும் யெந்தெந்தநோய்களுக்கொடுத்துக் காண்பாய் - பாகந்தான் முன் சொன்னபடி தானாகும் பண்டிதமேமெத்தவுண்டுவாடைகேளே. 85

மகாவாடை

வாடையென்னசாரையொன்று மஞ்சள்போலே வாய்த்ததுண்டங் களறபாண்டத்துள்ளே - கோடையென்னவேடுகட்டி குறுந்தட்டிவேர் கொல்லன்கோவைக்கிழங்கு நன்னாரிமுன்னே - ஆடைவேரமுப்புர மெரித்தான் யானைவணங்கிமாலைபொன்னாங்காணி தோடைவேர் வெட்டிவிலாமிச்சம்வேரே துகளவெலாமுலர்த்தித் தூளதாக்கே. 86

தூளிறுக்ககொஞ்சிமஞ்சள்வண்டிலாவி சூட்டியேமஞ்சிட்டிக்கச கசாவும் தேளிறுக்ககொடுக்கு வேரிடித்த தூளும் சோத்திட்டுவாடை கட்டுஞ்சரக்கையெல்லாம் - நாளிறுக்கப்பொடி பண்ணி கும்பத்திட்டு நாரிமின்னாள்கதம்பமுலைப் பாலில்பூள்ள - வேரிருக்க மிடமிறுக்கோ ரெண்பர்கூடி மெத்தமயங்கிடுவாரிவ்வாடைபட்டே. 87

பட்டசெய்திசத்தியாலயத்தில்தாவிப் படம்விரிக்குமரவாடை நாற்பதுநாளைக்கு, முட்டைவைப்பாய்புனுகு செவ்வாதுகுங்குமம்பூ மோகினியாராதனைபெண்மோக மீறும். சட்டமுடன்தாழம்பூ தூளிசேர்த்து தனக்குமந்திரம்தேவை மகாசித்தாடும், பட்டமரம்பால்வரும்பாரிந்தவாடை பண்பான தோகையரும்பணிவார்பாரே. 88

பணியவேமிருகங்கள்கற்பமாதல் பாவையறுமாடவறும் துடறுவார்காண், துணியவேபசுவருகுஞ் சிசுக்கள்மீளும் சொன்னவண்ண மிவ்வாடை மகாசித்தாடுங், கணிசமானவாடையுட லணியமாட்டார், கற்பறியார்பற்பிணியைக்கருதாரப்பா, பிணிபேய்கள் வோட்டிவிக்குமி ந்தவாடை, பேசாதேயீடொண்ணுயின்னங்கேளே. 89

இன்னங்கேள்வணங்காத பேரையெல்லா மிணங்கிவிற்குமிந்த யீடேற்றமப்பா, சொன்னங்கள்கொடுத்தாலுமீடிடாதே சூதம்நவச்சாரமின் பூட்டால் முள்ளு, பொன்னரிதாரந்தேனுக் கொடுக்குமுட்டை

புழுப்பிறக்கியூமச்சி புறாவின்பிச்சு, மன்னங்காதழுக்குமடை மூளைவிந்து மரிதாரம்பின்கஞ்சாமத்தம்வித்தே. 90

மருந்துயீடு

வித்துடனேவூர்க்குருவிகாடைப்பிச்சி மின்னிட்டான்திகைப் பூடுவேளைவேரும், அத்துடனேயித்தனையும்வைத்துருட்டி அழகானகுன்றி மணிபருப்புபோலே, எத்துடனே கூட்டியுள்ளுக் கிட்டிட்டாலு மின்பமுடன் திரிகணவனிணங்குவன்காண், கத்தோனுநாளேனுந்தாளமாட்டார் கைகண்டவவிழ்தமது செய்துபாரே. 91

பார்பதற்குப்பண்டிதமும் பார்க்கவேணும் பலியாட்டால்பணங்காசு யீயாட்டாலும், சேர்பதற்குவிழத்தந்தான தாக்கிப்போடு சிற்பரனேநோய்க் காகத் தின்பாரப்பா, நாற்பந்தமாயிடுவாராரானாலும் அவிழ்த்தவிழ்த்து கொடுப்பாரே பணங்காசப்பா, ஏற்பதற்குபண்டிதனே சாக்ஷியில்லை யென்னசொல்வேனிட்டுவெளியியம்பிடாயே. 92

இயம்பவேதூசற்ற துய்யான்வேறை யெடுத்துவந்துசமூலமிடித் திந்தவிந்தில் - துயம்பிலேகலந்தாட்டித் தாக்கும்போது துடரிவந்து நிற்பார்கள் குட்டிப்பாரே - உயம்பிலேசிறுவருக்கும் பண்டந்தன்னி லூட்டியே தோழனுக்குங் கிருடிப்பார்கள் - நயம்பிலேகிழவர்மட்டும் பாலகற்கும் நாடுவாருன்னை விட்டுப்பிரியார்தானே. 93

பிரிந்தார்கூட

பிரியாதகருவொன்றுவுலகத்துண்டு பிணைச்சலிலேசுவானம்ரண்டு தான்பிடித்து தரியாமல்கழியவிட்டு யிருவ்ர்மண்டை தனையெடுத்து வெவ்வேறேதயிலம்வாங்கி - உரியாராயிருந்தவர்கள் பிரிந்துபோனா லுபாயமாய் விரும்பாதார்கையுப்பிட்டுத் - தெரியாமலினம்பார்த்துச் சொரிகிப்போடு சணத்திலேகதறிவந்துசேர்வார்பாரே. 94

கலப்பு

சேருவார்சற்பத்தின்பிணைச்சல்கண்டு தெரிந்துரைத்தகீறலுக்கு விலகினாற்கும் - பாருபாரென்று யென்னைக்கையில்வாங்கிப் பரிட்சை யிட்டுச் செய்திடவேபத்துவார்பார் - காருபார்பண்ணுவ்ர்களா றாகட்டும் கன்னிமன்னார்மனமுறண்டு களைந்துபோம்பார் - ஏகுமாற்பண்ணினா லதற்குபாய மெடுத்துரைப்பேன் கரட்டோணான் பிணைச்சல்பாரே. 95

பிணைச்சலிலேகண்டரெண்டு ஒந்திதானும்பிரிந்து போமள விலிரண்டும் பிடித்தடித்து - குணைச்சலிலேவெயிலுலர்த்தி

யொன்றெடாமல் குறவனடுப்பினிலிரண்டும் வேறாய்ச்சுட்டு - அணைச்சலிலேபிரியாம லிறுப்பார்மேலே ஆணிதுபெண்ணுக்கும் பெண்ணாணுக்கும் - துணைச்சல் விடத்தெரியாமல்நீறைப்போட்டு தூரயிரு அறியாதார்போலத்தானே. 96

தானாகயிருந்தயிரண்டு திரியூமாளும் சண்டைவந்துவுயிர்ப்பழிகள் செய்து கொண்டு - ஏனோதானீயாறோநானாரென்று யெடுத்தெரியப் பிரிந்திடுவாரிதுவல்லாமல் - போனார்களுருக்குலைந்து மண்டலத்தில் புத்திகெட்டுசாவார்கள் புருடர்பூவை - யானாலும்பாவம்வந்து லபிக்குமென்று அரளாதேபிரளாதே பெல்லாதாற்கே. 97

பொல்லாதபேர்கட்குநல்லபாலைப் புகட்டினாலதுகசக்கும் போலேயல்லோ - இல்லாளைவெறுப்பாக நினைத்தான்பாவி யென்பார்கள் சிலர்கள்மின்னாள் தன்னைச்சொல்வார் - கொல்லாமல் கொல்லவந்த கூற்றுக்கப்பா கூட்டி விக்கமாத்தினிகேள் குணமாகத்தான் - நல்லார்கள் பதினெட்டுச்சித்தர்மூலம் நாடினவேற்கட்டயிவர்கூடினாலே. 98

கூடினார்வாகையின் மேலேயப்பா புல்லுருவி கொண்டுபுக வெயிலுலர்த்திகருக்கிக்கொண்டு - வாட்டினார் வப்பெண்ணை தனில்குழைத்து மண்டையிலேநடுத்தேய்க்க விஷத்தால்மாண்டோன் - நாட்டினார் பிழைத்தேனென்று விழீத்துப் பார்ப்பான் நயனத்தில்கடிவாயுந் தடவிப்போடு - தேடினால் குடோரியிட்டு மையைத்தேய்க்கச் செத்தவனுமுயிர்வந்துபிழைப்பான்காணே. 99

காணவே ஆலமரமேலேவீழ்ந்த களைகாரப்புல்லுருவி யகப்பட்டால்தான் - பூணவேமுன்பாக முலர்த்தித்தூளாய்ப் பொடி பண்ணிசட்டியிலேகருக்கிக்கொண்டு - தோணவேபேய்பிடித்துபிறகுதானும் தொட்டிடவேநெற்றியிலேபொட்டுமிட்டு - ஆணவேபேய்பூத மோடிப்போகும் வாகனமுன்போல்பழயபடியிருப்பார்சும்மா. 100

பேய்பிடிக்கு

சும்மாதானின்னமொருவயணங்கேளு சுடலையிலேபுல்லுருவி முளைத்துதானால் - தெம்மாடியானாலும் தெரியாதோபார் தெய்வஸ்தலமே தெய்வம்பிடாரியேது - அம்மாடியதைச்சுட்டுநிம்பநெய்யில் ஆட்டியே கரசிலையிற்றடவிப்போடு - பம்மாதோசத்திகெட்டுத் தெய்வமெல்லாம் பாரவிட்டுகுடிபோகும்பாருபாரே. 101

பாரப்பாபோனதெய்வம் பண்டுபோலே பழையபடிசிவாலயத்தில் வாணுமென்றால் - ஆரப்பாபதினெட்டுசித்தர்மூல மல்லாட்டாவார

ழைக்கப்போறாரப்பா - நீரப்பாமுன்குளிசம் நாள்பத்துக்கு நீருடனே போட்டாட்டும்போதுசத்தி - நேரப்பாநிண்ணயமுண்டாடும்பாரு நியவாணம் போகவுமுண்டாக்குவாயே. 102

அறுகன்புல் மருந்து

உண்டாக்கும்வரோதயன் போலுதிக்கும் போது ஒன்றானபுல்பூடு துதிக்கும்பாரு - கண்டாக்காலொரு மூலியறுகம்புல்லு காணாட்டால் கரடுமுரடானபேச்சு - கொண்டாக்கா லெந்தவிடங் கடித்திட்டாலும் குறும்பில்லாயொரு பிடிதான் பறித்துவந்து - துண்டாக்கி மைபோலே வரைத்துருட்டி துடியாக நாழிநீர் கறைத்துத் தாக்கே. 103

அரவுவித்தை

தாக்குவதுவாதியடா பாதிதன்னைச் சரீரத்திரத்தில் துவாலையிடு விலங்குச்சாதிக் - காக்குவது தேங்காயளவறைத்துருட்டி வறுநாழி நீர்கலக்கிப் பாதியுள்ளே - போக்குவது பாதிதன்னைத் துவாலைபோடு போனவுயிர் மீளுமடா மவுனஞ்சொன்னோம் - நோக்குவது கடைக்கண்ணால் நோக்கிப்பாரு நொடிக்குமுன்னே மீளுமடா விஷங்கள் தானே. 104

விடவரவுபடந்தனிலே பாஷாணஞ்சூதம் விதமானகாந்தமது மூன்றும்வைத்து - படமரவுஉபாயத்தைத் தகித்துக்கொண்டு படுகுழியில் தலைவாலாமுகட்டிலாகுந் திடமுடனேதான் தூக்கியோமந்தன்னில் தீயெரித்தும்ண்டையிலே தயிலம்வாங்கி - குடவயறோன் பூசைசெய்து பதனம்பண்ணிக் கொண்டவனேவல்லவனென் றுரைக்கலாமே. 105

உரைக்கலாமிக்கவையுபாயமாக வுன்னுடையபகைக்காரர் தனக்குத்தாக்கு - கரைக்கிறேன் ளிவனையென்று சொல்லத்தாக்கு கண்டாறயோளிமகன் கறைந்தேசாவான் - துறைக்கிறேனிடையினிலேதிருப் பவென்றால் சொன்னபடியருக்கிட்டு முன்போல்தீரு - மரைக்கிறேன்விடத் தயிலங்கோபந்தீரு மவனிடத்தில்வேணபொருள் வாங்கலாமே. 106

பாம்பராணிவித்தை அதாவது அரணை

வாங்கலாமின்னமொருவித்தைகேளு மைந்தனே பாம்பராணி பிணைச்சல்கண்டு - ஓங்கலாயடித்துயிரைக் கொன்று போட்டு வுச்சமதியந்திரும்பும்வேளைபார்த்து - ஐங்கலாயோடுகிறபதியோரத்தி லிக்கரையுமக்கரையும் புதைக்கும்போது - தாங்கலாய் சொர்ணமிட்டுவாயினுள்ளே சக்கரத்தை மேற்புதைக்கவிட்டதாச்சே. 107

ஆச்சப்பாமறுமதியந் திரும்பும்போது வக்கரையாய்ச் செம்மலிரண்டுவுதித்துபாரு - வாச்சப்பாபொருளொன்றால் மச்சம்பார்த்து வந்ததையுமுன்சிலவு பண்ணியேவாய் - ஏச்சப்பாயிருந்திடத்தை விட்டிடாதே யிரண்டுமொன்றாய்வையாதே வைத்தாற்கொஞ்சம் - போச்சப்பாவுன்செட்டுபலியாதப்பா போனவனேபொய் வாட்டு மிருந்தாரோடே. 108

ஓடாதே வொளியாதே பொய்பேசாதே வுன்மனதை யொருத்தருக்கும் வெளிவிடாதே- ஆடாதே பாடாதே சுத்தமாக ஆதியிலே யிருந்தவன் போலிரு நீயப்பா - தேடார்களுன்னைப் போலொருத்தர் வந்து செல் வீதமுள்ள நண்பனென்று சொல்லி - நீடாதே மூடனைப்போல் தாறுமாறு நீ செய்தால் நின்மூலமாவாய்பாரே. 109

பல்லிவித்தை சூதமணி

ஆவதுவேபரும்பல்லிப் பிணைச்சல்கண்டு வப்பனேயதுவுமிந்தப் படியேயாடும்-போவதுவேகற்றேரை வித்தைகேளு பூண்ட விரபிலிருந்தவரைப் பிடித்துவந்து - யீவதுவே பவளத்தை யடைக்கித் தைத்து யிரதமொரு களஞ்சிவாய் வழியேவிட்டு - வாய்வதுவும் பிறகு தைத்து யெலுமிச்சங்கா யளவரைத்து ரண்டுகிண்ணமுண்டு பண்ணே.110

பண்ணுவது அறுகுபதமீசர்மூலி பகராதேதலைவெடிக்கும் பாகுபாரு வெண்ணுவதுதேறையந்தக்கிண்ணத்துள்ளே யீஸ்பரனேயெழுந் தருளியிருக்கிமூடி - நண்ணுவதுவட்டோட்டில் சீலைசெய்து நடுவிருந்து பரஞ்சோதி பீடம்பாரு- திண்ணுவது ரசங்கட்டி மணியுமாச்சு சிவசிவாசெகசால மாடலாச்சே. 111

ஆடலாமணியெடுத்துசிரசிற்கட்டு அண்டரண்டந்தாண்டியதுவரையுந் தாண்டி - ஓடலாம்பூரணத்திலமுர்தஞ்சிந்து முண்ணலாம்நரைதிரையு மில்லையப்பா - பாடலாஞ்சாயுத்திய மனேகங்கோடி பாநுமதிரவி கோடிபகரலாம்பார் - தேடலாந்தேரையர்பாடல்போலே செப்பாது மற்றநூலிதற்கொவ்வாதே. 112

இரசக்கட்டு

ஒவ்வாது கருமத்துக் கின்னமொன்று வுரக்கிறேன் மணிகட்டுயின்னங்கேளு - செவ்வாகுயீசானியற்கு முன்போலே சேர்த்தரைத்து தேங்காய்ப்போல் குகையுண்டாக்கி - யெவ்வாது வொருதேங்காயுடைத்துக் கொண்டுயிருந்தயிரட்டையனிரண்டும்

பொருந்தப்பார்த்து அவ்வாதுரெண்டிலையும் பண்ணைபோலே அரைத்தமருந்ததுக்கப்பி வனலைவையே. 113

வையப்பாசுண்டக்காயளவுபோடு மணிகட்டரசம்பத்துக் களஞ்சிவிட்டுச் செய்யப்பாசிரட்டைரெண்டும்பொருந்தக்கட்டிச் சீலைமண்ணேழுஞ்செய்துபுடத்திற்போடு - அய்யப்பாயென்னசொல்லப் போறேனப்பா அரனாணையாருக்கும்விண்டிடாதே - பொய்யப்பா சொல்லவில்லைபுண்ணாக்கீசன் புகட்டிவைத்தான் பிள்ளையென்று யெனக்குத்தானே. 114

தானென்றுசொன்னகரைப்பட்டைத்தூளில் தறுகாமல் வடிகட்டிக்களஞ்சியொன்று - மனென்றகூடமுடன் வழலைசேர்த்து வைக்கையிலேமுன் சொல்லமறந்துவிட்டேன் - வானென்றபுடமாறி யெடுத்துப்பாரு மகாசோதியாயிருக்குங்களஞ்சிபத்து - நானென்ற் சட்டியிலே ரசக்கட்டிட்டு நாதம்விட்டுத்தீயெறிக்க வுருகும்பாரே. 115

ரசசெந்தூரம்

உருகையிலேநீர்மேலே நெருப்புமூலம் வொருகொட்டைப்பாகளவு பசுவின்வெண்ணெய் - வருகையிலேபாக்களவு புனுகுகொஞ்ச மஞ்சிட்டுக் கெவுரியரைக்களஞ்சிபோடு - பருகையிலே ரவிகோடி பிரகாசிக்கும் பயரளவுவழலையிடுரசசெந்தூரம் - குருகையிடு கணபதிக்குப் பூசைசெய்து குடுக்கையிலேயடைத்துவைத்து முளைக்கூட்டாலே. 116

முளையாலே நவலோகமுருகும்போது முந்திசெந்தூரமிடு பிரகாசிக்கும் - மிளையாது செகசோதி பத்துமாத்து மியம்பாதே மச்சமிருக்கென்று நீயும் - விளையாடச்செந்தூரமகுத்துவத்தை விள்ளுகிறேன்விபூதியிலே அணுப்போலிட்டு - களைகாரமுன்போகில் பூசிச்செல்லு கண்டவுடன் தெண்டனிட்டுவணங்குவானே. 117

வணங்குவான்கும்பிடுவானவனைவிட்டு மங்கையரைமுகம்பார்க்க வசிவாளப்பா - இணங்கலாம்பசுவை வரவழைக்கலாம்பா ரிடபமுதலெருது முகங்கண்டிட்டாலே - கணங்குவார்சற்பம் வசிந்தாடும் பாரு துலையாதமிருகங்கள் சுவானமெல்லாம் - வணங்கும் பாரிரதமது செந்தூரித்தால் ரோகமதற்கனுபானம்பசுவின்பாலே. 118

பாலிலேமஞ்சாடி கொடுத்துப்பாரு பறக்குமடா வளவிறந்த வியாதியெல்லாம் - நூலிலே சொன்னசன்னிவாதந்தீரும் நூதனமாய்ச் சொல்லவில்லை சுடலைக்காட்டின் - மாலிலேசபைவைத்த கவத்தின்வாயில்

மஞ்சாடி வாயில்விட்டுவுள்ளே சென்றால்-சேலிலே தாதுபலம் பிறந்து வந்து சீவன்தந்து கண்விழித்துப் பார்ப்பான்பாரே. 119

பாரென்றுசெந்தூரம் பிளவைப்புண்கள் பருபடுவனறையாப்புச் சூலைப் புண்கள் - சாரேநீ வாய்நீரில் குளப்பிப்போடு சண்டமாருதம் போலே தகைக்கும்பாரு - வேரேநீகரப்பனுக்குங் குட்டநோய்க்கும் வெந்தயம்போல்நாற்பதுநாள் பனைவெல்லத்தில் - கோரேநீகடும்பத்தி யம்பால்க் கஞ்சிச்சோர் கருப்பஞ்சர்க்கரைதொட்டுக்கஞ்சிகொள்ளே. 120

கஞ்சிக்கு மகோதரங் காமாலைசோகை கனமானபாண்டு வகையெதுக்கானாலும் - பஞ்சிக்குதேன்கூட்டி மூன்றுபோது பருகையிலே பாண்டுவகைசோகைதீரும் - நஞ்சுக்குங்கொடுத்துப்பா ரணுப்போல் நீரில் நஞ்சோடியோடுமீளுமடாநிமிஷம்போதில் - அஞ்சுத்தானறுபத்து நாலுகாய்ச்சல் அறுகம்புல்கியாழத்திலாறும்பாரே. 121

ஆறும்பாரானந்தவாயுசூதகம் பானவாய்வறுசூலைகெற்பரோகம் தீறும்பாரிசவாய்வுகபாலவாய்வு திசைவாய்வுசீரகங் கஷாயம்பண்ணிப் - பாறும்பார்கொண்டுவிடு மூன்றுபோது பறக்குமடாவாய் வென்றபாண்டமெல்லாம் - கூறும்பார்மலடில்லைப் பாலருண்டாங் கோதையருங் கொண்டிடவேகூர்பரிந்தே. 122

கூர்பரிந்துகெடிகாரச்சீட்டுக்கட்டக் குருவழலைமுன்னமுரி வேளைச்சாற்றில் - சேர்பறிந்து பிறகுவந்தபற்பம்தீரும் சிவானதரிபூசை செய்ய மேருங்கூறித் - தாபறிந்துவுடல்கட்டிச் சத்திரவீட்டில் தானிருக்கும் போதையிலேபதினெட்டுப்பேர் - ஏர்பறித்தமுன்குளிசமெடுத்துக் காட்டி யிடுசிட்டிலிதுனெழுத்துப்பேய்கட்கெல்லாம். 123

கெடியாடுகிறசிமிட்டுவித்தை

எல்லாருந்தான் பார்க்கப்பூதப்பிரேதம் யெதிராகமுன்வந்து தோன்றும்பாரு - வல்லாருஞ்சிவானந்த யமயமயென்று மாடருக்குகெடி காரச்சீட்டைமூட்ட - இல்லாதசித்தெல்லாமிசைக்கும்பாரு யெவரிடத்தில் செல்லென்று விசைந்திட்டாலும் - நில்லாதுவோடிப்போயவரைக் கொண்டு நிமிடத்தில்வந்து விடுமாடன்றானே. 124

மாடன் மந்திரம்

மாடறுக்குமந்திரந்தானுரைக்கக்கேளு வங்கென்றுயங்கென்றுமாயாங் கென்றும். வேடறுக்குருபமிட்டுரூரங்கென்று விரிஅரிரீயன்றிங் காரஞ்செபித்துப்பாரு - சாடனத்துமாடனங்கே சாடும்பாரு சவ்வீர

வைப்புமினிசாற்றுவோமே - கூடமருந்தனுரேகம் சீனக்காரம் கொடிக்கள்ளிப்பால் வெள்ளைக்குந்திருக்கம். 125

சவ்வீரவைப்பு

குந்திரிக்கமைந்துபலஞ் சீனக்காரம் கூறுமணுரேகமைந்து பலந்தானப்பா - வெந்திருக்கும்படிகமைந்து பலந்தானப்பா வெள்ளையது பலமைந்துகொடிவேலித்தூள் வைந்திருக்கும்பொடியாக்கிச்சீலைவடி கொண்டு மைந்தனேபொடியைந்து பலமுமைந்து - இந்திரிக்கம்பால் நீக்கியெல்லாந்தூளாய் யிட்டுவைப்பாய்குப்பியிலேயிருக்கந்தானே. 126

இருக்கத்தான்கொடிக்கள்ளிப்பாலையூத்தி யிரவியிலேநாற்பது நாளிருக்கும்போது - மருக்கந்தானரியுப்புப்போலேகட்டி யிருக்குமடா கொடுஞ்சுறுக்குகொண்டுதானும் - பொறுக்கத்தான்போகாது குப்பியத்தால் புதுக்கலசந்தன்னிலிட்டுப்பானுவிலேவைப்பாய்-நறுக்கத் தான்விறாகனிடை கிடைத்துதென்றாலுத்தசரக்காணியென்று வுரைக்கலாமே 127

அரிதாரவைப்பு

உரைக்கலாமரிதார வைப்புகேளு வொருதுலாம் வெள்ளையுப்பு கந்தூளாய் - அரைக்கலாமஞ்சள் கருதன்னைவிட்டு அத்துடனேபச்சை மஞ்சள்கிழங்குகூட்டி - நிரைக்கலாமடையடையாய் புதுசட்டிக்குள் நேராகமஞ்சள் கெவுரிபொடித்துப்போட்டு - தரைக்கலாங்கருவிட்டு ரவியில்வைக்க சவ்வீரம்பத்தாது தாரந்தானே. 128

தாரமதுவிராகனிடை கிடைத்துதானால் சரக்குக்குமறையாணி தானேயாச்சு - பூரமது அகண்டபாதாளத்துள்ளாம் பொருப்புவிற்புக் கடவுகளில் மண்மண்போலே - பாரமதுபடாயிடத்தி லிருக்கும்பாரு பகர்ந்தயிந்தவேகமடாதசதாரந்தான் - வீரமதுமெத்தவற கற்பூரவைப்பு விள்ளுகிறோம் சீனமதுபலம் பத்தாக்கே. 129

ஆக்கவேபுனுகுசட்டம்குங்குமப்பூ வதினுடனே மேருவுட னத்தர்விட்டு - தாக்கவேசட்டியிலே பருபருக்கையாகத் தான் போட்டுவங்காளப் பச்சைபோடு - மோகமாங்காற்றேறா விடத்தில் வைத்தால் முப்பதாம் நாளெடுக்கசரக்கதாச்சு - வேகமாம் பச்சைக கற்பூரம்வாச மேலானவாசமடா விறாகனொன்றே. 130

சூடன்வைப்பு

ஒன்றானசூடன்வைப்புவுரைக்கக்கேளு வுத்தமுத்தக்காசுமேல்

தோலைப்போக்கி - நன்றானகிழங்காகவாழையன்றி நறுக்கிரவியுலர்த்தி யிடிபொடிநானானாழி - சென்றடுத்தகாசித்தூள் பொடியவ்வீதஞ் சீனத்தூள் குறுணிசோடசத்தூளாக்கி - வென்றெடுத்தசாறாயம்விட்டுக் கிண்டி வெய்மூங்கிலடைத்துள்ளேகருவாய்ப்பட்டே. 131

பட்டையின்றூள் கூடவிட்டுப் பிசைந்துவந்தப் பருங்குழாய் பற்றெட்டிலடைத்துமூடி - கட்டையிட்டுக்கடாவி முளையாலிறுக்கி கமக மெனயெறுக்கிடங்கீழ்ப் புதைத்து - வைத்துயெட்டஞ்சுநாள் கழித்தெடுத்துப்பாரு யென்னசொல்வேன் சூடனதுவிளவுமாச்சு - பட்டப்பா போகாமல்மிளகுபோட்டுப் பத்திரமாய்ப்பாண்டத்தில் வைத்துமூடே 132

மர்யப்பொடி

மூடியேசகலத்திற்கு மாய்கைபண்ண மூட்டுகிறேன் தீகைப்பூடு மத்தம்வித்து - தேடியேநிலப்பரண்டி செய்யானுள்ளான் சிவனார்வேம்பு தேள்கொர்டுக்குசெந்தடிமண்டையின்னம் - கூடியேகுளிநரியின் மண்டையெல்லாங் கூடியேகுழிச்சீலைமுடிந்துசுட்டு - வாட்டியிலை தூள்சேர்த்துமாய்கைவித்தை வறுத்தையிலேதுளெடுத்து வானம்போடே.

வான்மிட்டத்தூளாலே மயங்கும்பாரு மகத்தானசடைகூடமாதர்கூட கானமாமிட்டசிறுகுழந்தையெல்லாம் கண்கெட்டுமயக்குவிக்கும் பொடியதாச்சு - ஏனமிட்டபுனக்கொம்புமிளர்க்கொம்போடு யெலிப்பல்லும் பெறுச்சாளிப்பல்லுங்கூட - ஞானமிட்டுப்பொடித்துதொன்றாய் முன்தூளோடே ரவிபடாதிடம்பார்த்துவைத்துவையே. 134

வானம்பாடிக்குருவிவித்தை

வையவேவானம்பாடிக்குருவி மகாவித்தை யிருக்குதப்பா வதநிடத்தில் - செய்யவேவ்வகையறியார் செய்யச்சொல்வேன் திடுதிடெனயிடிப்பிடிக்கும் பொழுதுதானும் - உய்யவேமலர்ந்துகொண்டு கண்ணைமூடி யுயர்வானம்பார்த்தங்கே கிடக்குமப்பா, மெய்யவே அப்போது பிடித்துவந்து வித்தைசெய்யரசமூசிக்காந்தம்வெள்ளை. 135

வெள்ளைப்பாஷாணமிவைமூன்றும்வைத்து வேடிக்கைப்பண்ண வூமத்தங்காய்வித்தும், கள்ளுடனேசாறாயங் கலந்தவித்து கனயிறகு நகந்தள்ளியரைத்துருண்டை, வில்லவேமணிபோலே பதனம்பண்ணி வித்தைசெய்யுமிடத்திலேகுளிகைகொண்டு, துள்ளவேவாயிலிடுயிடி வாவென்றால் சொல்லுமுன்னேயிடி கோடிமாரிகோடி. 136

கோடிக்குமேலதிகங் கூறுவான்பார் குளிகைகொண்டு வுன்வயிந்றைதொட்டிட்டாக்கால், வேடிக்கைவிடாதே போவென்றால்நிற்கு மின்தாங்கு மழைதாங்கு மிடியுந்தாங்கும், வாடிக்கையொறுத்திபிள்ளை பிறமாட்டாக்கால் வயிற்றிலேகீழ்நோக்கி மணிதடவியப்பா, சூடிக்கோ சென்னியிலேகட்டிற்றூக்க தூரதுலைக் காரியங்கள் சொல்லுவாளே. 137

சொல்லென்றாமணிதனக்குற் றூபமிட்டுத் தும்பிமுகனடக்கா வெள்ளிலையும் வைத்து, வெல்லென்றகுறுமுகத்தைக்கேட்கும்போது விளம்புமடாநினைத்தபடிக் குறியைத்தானும், மல்லென்றுகளவுகன்னஞ் சோரபாரி யடிபதிகள்யாதேனும்விளம்புவானில், நில்லென்று சொல்லவந்தால்கறப்பனங்கு நின்றுவழி கண்டறிவானெஞ்சிற்காணே 138

நெஞ்சிலுற்றக்கறுமமெல்லாம்வானம்பாடி நெரியுடனே குறிதவறாதுரைக்கும்போது, வஞ்சினையள்வைப்பெடுப்புகுனியங்கள் வஞ்சியற்குகைமசக்கு செய்ததெல்லாம், சஞ்சலத்தில்வந்துதென்று மின்னாளாலே தான்வந்துவிழுந்ததுவுஞ் சாரஞ்சொல்லும், கொஞ்சமென்று நினையாதேவானம்பாடிக் குளிகைதனைக்கும்பிட்டுப்பூசிப்பாயே 139

பூசைசெய்ய பூசைசெய்யசித்தியேறும் பூட்டியறையினில் முடிந்து பூவைமாரை, ஆசையுடன் புனரவியில் அனுபோகத்தி லாசைதரும் வன்மனதுக்கன்பு கூர்ந்து, நேசமுற்றுயுனைக்காணாதிருக்கமாட்டான் நித்திரையும்வாராதுவுனைக்காணாமல், பாசம்வைத்துதிரிவான்பார் பார்வைமாறும் பலகாலுஞ்சிந்தையிலேமறவாள்தானே. 140

தானேதான்வருவாள்பா ரனுபோகத்தில் சரியோகமிருவருக்கும் தானேயாகும் - ஏனாகும்சுரம்பிணிகள்வந்தபேற்கு யிதையெடுத்து முடிந்துகட்டியிருந்துதானால் - வானோருமண்ணோரு மிருக்குமட்டும் வாராது வொருநாளுஞ் சுரந்தானப்பா - நானாருநீயாருபிசாசுபூதம் நாடாது சையித்தானுமதியுந்தானே. 141

தீயில்லைகள்ளரில்லை திகைஞரில்லை சேடனதுவாராதுயிருந்த மண்ணில் - நோயில்லைப்பிணியில்லைகோளுமில்லை நூறுவயதுள் ளுடனே குளிகைசேர்ந்தால்-பேயில்லைபிசாசில்லை கண்ணேரில்லை பித்தமில்லை வாதமில்லை சிலேட்டுமந்தானில்லை - நாயில்லை கடியாது நாவெழும்பாதப்பா நமனில்லையின்னமொன்று நவிலுறேனே. 142

கெசமோதிரவித்தை

நவிலுவேனேதென்றால்மதவானைக்கு றவுத்தனென்பவனை

நடப்புகொண்டு - கிவலுவேன்சிவன்மேவ்புபுத்தோட்டுக்கள் - சேகரமாய் வெள்ளைப்பூபூர்த்ததானால் - உவலுவேன்மெத்தநன்று அம்மாவாசி உச்சிதிரும்புதற்குமுன்னேகாணம்யானை - தவிலுவேனென்று சொல்லி மதயானைக்குச் சாரசுத்திசெய்துமஞ்சளையும்பூசே. 143

பூசியேபூச்சூடுகரும்புதேங்காய் புகழானபச்சரிசி பழமுமூட்டி வாசியேமதவானைதன்னைக் கொண்டுவலமாகமூன்றுதரஞ் சுததிவந்து கூசியேமூன்று சூரியனைக் கும்பிட்டேற்றிக் கணபதியேகும்பிட்டுக் கொண்டுநீயும் - தூசியாதிருக்கவென்று தும்பிக்கையால் தோத்தரஞ் செய்தேயவரைப்பிடுங்கச்சொல்லே. 144

சொல்லியேதிசைக்கொருவேற்பிடுங்கிப்போடு சுகமாகமையத்தில் யொருவேற்வைத்து - புல்லியேயொருவேறை மேலேவாங்கிப் பிறகொருவேற்மையத்தில்வேறைவாங்கி வல்லியேயதின்பிறகு கீழ்ப்பால்வேறை வாங்கியே யதின்பிறகு மாரிமுல்லை - யுல்லியேவேற்வாங்கியதின் பிற்பாடு யப்பனேவடவேறைவாங்குவாயே. 145

வாங்கியேயதின்பிறகுவாய்வு வேரை வருணதிசையதின்பிறகு நிறுதிவேறும் - நீங்கியேயதின்பிறகு தேக்குவேறை நின்றபின்பு சுக்கினிவேற்கடைசிக்கப்பா - தாங்கியே அடையாளமாய்த்தரித்து தந்திரஞ் செய்தரமனைக்குத்தானேவந்து - ஓங்கியேயானைவிட்டுக்கீழிறங்கி யுபாயமாய்மதவானைக்கட்டச்சொல்லே. 146

கட்டினபின்னொருத்தரறி யாமற்றானும் கலசமிட்டுத்திசைகளிலும் வைத்துக்கேளு - எட்டினபின்னதினிறையத் தண்ணீர்விட்டு யிருந்தவேரடையாளமாய் போட்டுக்கொண்டு - முட்டினவேறெண்டுக்கும் பத்துள்ளேபோட்டு முன்கடைசிமேற்கும்பம்வைத்து - கிட்டின மையுத்தினவற்கும்பங்கீழே கேசரிவேற்சிவம்செபிக்கவயணங்கேளே. 147

மாரணதம்பனம்

வயணமென்னயித்தனையுஞ் செய்வதெங்கே மாகாளிகோட்டத்தில் மயானந்தன்னில் - வியனமுடன்பந்தலிட்டுத் திரணைபோட்டு விநாயகனையெழுந்தருளப் பண்ணிக்கொண்டு - சயனமுடன்பேரெழுதி யிருபத்தைந்து சணமுகனார்பத்திமுக்கோணமிட்டுக் - புயனமுடன்சிதம் பரத்தி லெட்டுதிக்கும் பதியடவாய்க்கும்பத்தை மைபம்ாண்டே. 148

மையத்தில்கும்பரண்டு மேலேவைத்து வளர்கும்பங்குட மொன்றுமஞ்சள்சாரை - உய்யந்தான்முதற்சாதி நாகமொன்று

உத்தமனேபிடித்தடைத்து வறுகம்புல்லு - எய்யத்தானூமத்தன் வேறும் போட்டுயிசைக்கிமெழுகானநஞ்சு முருட்டிப்போடடு - செய்யத்தான் கெருட தியானத்தையோதி சேவியடாபூசையொடுபுனிதமாமே. 149

புனிதமாம்அரி அரிஅங்கிஷாயாயா புகழுகிறோம்புற்புறாவும் பட்டென்று - செனிதமாம்நாற்பதுநாள் சேவிக்கும்போது திருக்குடத்தில் விடமடங்கியொன்றாகும்பார் - சனிதமாம்விடமடைக்கு முன்னே வெண்ணீரிற் தானாழிகுடத்துள்ளேபோடுப்போடு - இனிதமாமண்டலஞ் சென்றெடுக்கும்போது யியல்கும்பகுடத்து நீர்வத்திப்போமே. 150

கும்பநாகவித்தை

வத்திப்போம்பிறகென்ன குடத்தில்நாக மாண்டுதிருநீற்றுடனே விடங்கக்கிச்சாம் - சித்திக்கு திருநீற்றை யெடுத்துக்கொண்டு செத்த விடந்தயிலமதாயிறக்கிவைப்பாய் - அத்திக்கும்நாகப்பல்நாலும்வாங்கி அத்தயிலமந்தவெண்ணீர்வேறேவைத்து - முத்திக்கு மேல்கிடந்த அறுகூமத்து முன்னிசைக்கிமெழுகுடனேயரவுநஞ்சே. 151

நஞ்சுடையமத்தம்வேற் அறுசுட்டு நகட்டியரையிசைக்கு மெழுகோடேநாலு - நெஞ்சுடையவிடந்தீர்க்கமருந்திதாச்சு நின்றவெண்ணீற் கெந்தமுடன் மூன்றூதானும் - வஞ்சனைகள் மகாகோடி புரியும்பாரு மடக்குதற்குநாலுமருந் திருக்குதப்பா - அஞ்சுடையவஞ்சுசிவன் வேம்புமூலம் யானைகடகுமாமாக்கு மோடிக்காவே 152

வையகத்தில்மனமுகியார் கன்னிமின்னாள வலதழிந்தபிள்ளை யென்றால் வாதத்திற்கும் - செய்யமுத்திப்பெற்றிடலாங்கைம்பெண்பேராஞ் சிறுவனென்றா லுருமாற்றமட்டுஞ்செய்யும் - உய்யகத்துக் குருமார்க ளுரைக்கக் கேளு உரைத்தரெண்டுபிண்டத்திலொன்றுவாங்கி - பையமத்தம் விரையழிசம் விலாபாஷாணம் பாதகத்திவிரையுடனாய்ப் பாகல்வித்தே319

வித்தானதிவைமுன்னே சபதரித்து விரும்பிவந்த பிண்டமதைசரக் காக்கித்தான் - பத்தானவிரைநாலும் படிகாலிட்டுப் பாஷாணங்களஞ்சி பத்துப்பிண்டமொன்று - முத்தானபுதுக்கலசத் துள்ளேயிட்டு மூடியேகிட்டிகொண்டு சீலைமண்ணும் - சுத்தாகயேழுசெய்து அடிக்க லசம்வைத்து தூரிலேதமரிட்டுக்குழித்தயிலம்வாங்கே. 320

தயிலத்தில்பச்சோந்திப்பச்சைப்பாம்பு தவளையிலேபசுந்தேரை மூன்றுஞ்சுட்டு - கயிலொத்ததயிலத்திலிட்டுமைபோ லாட்டையிலே கறிககுருவிமுட்டைமூன்று - பயிலொத்ததேனும் விட்டு ஆட்டிக்கொண்டு பருமேதிக்கொம்பினிலே சிமிழுண்டாக்கி - மயிலொத்தமனோன் மணியைவழித்துவைத்து மாற்றமுறவதனத்திற்றிலதந்தீட்டே. 321

தீட்டியேகளவுகன்னம் தேசத்தோற்கு திருடிவரவேண்டு மென்றுமையைப்பூசி - யாட்டியே திரியாதேயிந்தவித்தை யதீதமல்லகருவி கொண்டுகுத்திவெட்டிப் - போட்டிமையாயுனைப்பிடித்து யானைக்காலில் போடென்றுகல்லறைக்குள் பூட்டென்றாலும் - மூட்டியேயுயிர் போறவேளைவந்து மோசம்வருமென்றறிந்து மாற்றம்போடே. 322

போடுவதுதீயினிலே தள்ளென்றாலும் புத்தறையில்கையையிடு வோவென்றாலும் - நாடுவதுசமுத்திரத்தில தள்ளென்றாலும் நடுக்காட்டில் மிருகம்விட்டுக் கொல்லென்றாலும் - வேடுவரைவிட்டுவுன்னைக் கட்டென்றாலும் விதவிதமாய்த்துன்பங்கள் செய்யவந்தால் - சாடுவது மாற்றமிட்டுவொருத்தருக்கு தளந்தெரியாதிருந்து கொண்டு சண்ணுவாயே.

சன்னியேபூவையரைப் புணரும்போது சம்மதியாதிருக்குகின்ற தையல்மாற்கு - என்னவேமாத்தமிட்டு செல்லுநீயும் நிசிவேளை யொருவருக்குந்தெரியாமற்றான் - மன்னவேயிருக்குமட்டுங் குளிகைபோட்டு மலையிலேவந்துடனே கள்ளச்சித்தர் - வின்னமிலாப் பறக்காமலு பாயஞ்செய்வார் வேடுவச்சிதாதிகட்குமாற்றம்போடே. 324

மாற்றமிட்டுப்பறந்தாலேகாணமாட்டார் வானமட்டும்வழிதேடி யிருப்பார்சித்தர் - ஏற்றமிட்டுமலையேறி வொட்டாரப்பா யென்தோழன் பிரமமுனியானரோமர் - நாற்றமிட்டவேதாந்தம் தேறுமுன்னே லகுவிலேயரகுவாய்க்குளிகைகட்டிச் - சீற்றமிட்டுப்பறந்தார்கள் மாற்ற மற்றுத் திருமூலர்பிள்ளைகள்தான் குவட்டுச்சித்தர். 325

குவட்டிலேயிருந்தவர்க ளிவரைக்கண்டு கூப்பிட்டுப் பிரமமுனி நீயாரென்றார் - கவட்டிலேரோமரிஷி பிள்ளைநான்தான் கவனமிட்டுவண்டரண்டந்தாண்டப்போறேன் - சுவட்டிலே நீரேதுகெட்டதென்று சொன்னாரே பிரமரிஷி தன்னைக்கெஞ்சி - சுவட்டி லேயவர் பறந்தமணியை வேண்டித் தருகிறேனென்றவுருமாறினானே. 326

உருமாறிவேடுவச்சிதாதிகொண்டு ஓடையிலேதான்பிடித்து தர்க்க மிட்டேன் - திருமாறிசித்தனென்ன சொன்னானென்றால் திரும்பவ வரிடங் கொடுக்கப் போறேனென்றான் - குருமாறிப்போவாய் நீயென்று சொல்லிக் கொடுஞ்சாபம் போட்டுமந்தக் குளிகைவாங்கிப் - பருமாறிப் பிரமனிடங்கொடுத்தேனப்பா பரந்தாண்டபரமாத்மப் பிரமன்றானே. 327

பிரமரிஷியகப்பட்டால் மற்றப்பேர்கள் பேரின்பம்பெறுவதெந்தப்படி நீசொல்லு - வரமுடனேயுருமாற்றமிருந்துதானால் மகாபட்ட பேருக்குக் கண்தப்பிநீதான் - கரமதுவுந்தப்பினால் பிழைக்கலாம்பார் கவனமுற்றுப்பறப்பதுவும்லகுவோமக்காள் - திரமுடையப்பெரியோராய்க் குளிகைகட்டிச் சித்தரையும்வென்றவரே திறவுள்ளோரே. 328

உருமாற்றவகைகேளுவுபாயமாக யொழுகலிலேயிருந்து கொண்டு வுருவைவாங்கிப் - பருமாற்றம்பணிசெய்யும் வாறுபோலே பாண்டத்தில் மைபூசவுருமாறிப்போம் - மருமாற்றமுறையாதே மாடாடுக்கு மனிதருக்குமைபூசி வைத்துத்கொண்டா - லுருமாற்றமொருத்தருக்குந் தெரியாதப்பா வுபாயமுருமாற்றமிதுவுசத்திதானே. 329

வுசத்தியுள்ளவாபரணம் வஸ்திரங்கள் உடமைபணியுள்ள தெல்லாமொருவர்பக்கல் - குசத்தியமில்லாமலவர் பக்கல்வாங்கி கொண்டு மையைப்பூசிவாங்கியுருமாறிப்போம் - முசத்தியமேயவர்கள்மெய்யாய் மறந்துபோவார் வேணவித்தையுருமாற்றம் செய்தாலென்றும் நிசத்திலேபிரியாது பிறளியாகும் நீனிலத்திலிதுகொடுமை நெகிழ்ந்திடீரே.

நெகிழ்ந்தமென்றுகைநழுக விட்டிடாதே நேரிழைமார்கைநெகிழ்ந்தால் நீதான்முட்டு - மகிழ்ந்துகொண்டுயுனைவணைவாள் பிறகுதானு மாட்டோ மென்றுகைநெகிழ்ந்த மடந்தைதானும்-சுகந்தையிதுவுருமாற்றம் நல்லவித்தை

சொல்லாதேயாவருக்குந் தொழிலைத்தானே-அகந்தைபண்ணி வெளியேறியழிந்திடாதே யமர்ந்தலைகள் வருமடவர் ஆற்றல்செய்யே331

வாய்வுஸ்தம்பம்

ஆற்றமென்ன அந்தரமாய்ப் பந்தலிட்டு அதிலுஞ்சல்போலிருமப்பா யாசனங்கள்-சாற்றலையாய்ப்போட்டாலு மாற்றம்பண்ணும் சகுனத்தில் மைதடவி வாய்வுஸ்தம்பம் - நேத்தியதாய் வெகுநேத்தியிந்தவித்தை நீணிலத்தில் கிடையாது நிசமென்பார்கள் - பூர்த்திசெய்யயின்ன மொன்றுவதிகவித்தை புகலுவேனுருமாற்ற மையிற்றானே. 332

பிணிகட்டிமறைக்க

மையையுந்தனிடமாக வைத்துக்கொண்டு வணங்குகின்றசீஷரிலே வோராளைத்தான் - கையைரெண்டும்பின்கட்டாய்க் கல்த்தூணோடே கால் களிரண்டும் பிதுங்காமல் வரிந்துகட்டித்தொய்யுதென்று நிகழு தென்று சொல்லிடாமல் தூணோடேசிகைமயிரும் வரிந்துகட்டி. பையவந்து பாருங்கள் கட்டுதன்னைப் பார்த்துநீ மெய்பொய்யென்று விளம்பிடீரே333

விளம்பினாரிருக்கையிலேமாற்றம்போட்டு வேறொருமாண்பனை நீகட்டி வேறேதூணில் - குளம்பிடவேபின்வந்து திரையைநீக்கி குறிப்பாகபாருங்கள் சபையையெல்லாம்-இளந்தலையென்வித்தை பொய்யென்றாலோ இன்னமொருமானிடவருங்களாளின் - பளங்கயது பழந்தூணி லுங்கள்கையால் பந்துபோலேக்கட்டுவென்று கட்டினாலே334

கட்டிவிட்டுத் திரைக்கிப்பால் வந்தாரானால் காரணமோவவர்விழிக் குந்தெரியாமற்றான் - பொட்டுவைத்துவுருமாற்றஞ்செய்துகொண்டு போயெடுத்துக்கட்டவிழ்த்து புறமாய்த்தூணில் - ஒட்டுவித்தைப் போலே நீகட்டிப்போடு ஒருவருந்தானறியாம லுபாயமாகத் - திட்டு முட்டாய் விழிப்பாண்டாயவனுமப்போ தீர்மானப்படுத்தவவன் மயங்குவானே. 335

மயங்குவார்சபைதனிலே யிருந்தோர்கூட மன்னர்முதல் கட்டிவைத்த மனிதன்கூடத் - தியங்குவாய்நீயொருத்தன் விடுதியாளாய் திலதமிட்டு யிருந்து கொண்டுசீஷர்தன்னை - முயங்கியேமுன்னந்தம் பின்னந்துங்கள் மூட்டையிலே சபைக்குவெறுங் கையைக்காட்டத் - துயங்கியேசீஷர் வெறுங் கையைப்பார்த்துச் சொன்னபணிதனையெடுத்துக் கூட்டுவாயே336

சகலபதார்த்தம் பொரிபணம் காசுபொய்வித்தை.

கூட்டுவது அவனென்னசொல்லிப்போறான் சொல்லிவைத்த

விதிப்படியே சொல்லுவான்பார் - ஆட்டுவதுவுன்னிடத்தி லுபதேசங் கேட்டறிந்த பிள்ளைலெகுவிட்ட பிள்ளையாமோ - மூட்டுவதுநெல்லிய கனியானாலும்முன்னூறுநானூறுவுருவானாலும் - போட்டுவிடுவவன் கையிற்சாறும்போலே புதுமையுள்ளபண்டமெல்லாம் போடுவாயே 337

போட்டவுடன்சென்னெல்விட்டுப் பொரியைப்போடு பொன் பணங்கள் வெள்ளிகள் ரூபாயும்போடு - நாட்டமுடன் அரவுதேள் நட்டு வாக்கால் நல்லகெந்தம் போட்டிடுதேங்காய் பழமும்போடு ஈட்டமுடன் அன்னமும் வையிளநீர்கொத்துயியல்பான பலகாரமெதுவானாலும் கூட்ட முடன் கொழுந்து வெற்றிலையுங்கூடக் கொள்ளுமடைக்கா யேலமிஞ்சிமஞ்சள். 338

இஞ்சியுடன்மாதளங்காய்சீனிபூரம் யேரளங்கம் பூபருத்த பழமுங் கொண்டு - தஞ்சமுடனித்தனையும்வாங்கிவைத்துச் சபைமுகத்திற்றெரி யாமற்கையிற்போடு - அஞ்சியேபயப்படுவா ருன்னைக்கண்டடால் அதீதவித்தைகேட்ட தெல்லாங்கொடுக் கேனென்பான் - வஞ்சனைகள் மாயவித்தையுருமாற்றங்கள் வாய்த்ததென்றாலவனுக்கு வயசுநூறே. 339

நூறானகருக்களிலேமாட்டையாட்டை நுவலாதகிளிப்பிள்ளைடோ லோடன்னம் - பேறானமைதடவிவெட்டிப்போடு பிடிங்கிவந்தவழுதலங் காய்பூசணிக்காய் - கூறாகவோடரத்தந்தண்ணீரோடே குருக்கணொளி செம்பரத்தன் பூத்தன்னோடே - பேறாகயிப்படியே வுருமாற்றங்கள் பேணியேசெய்வாடாபெரியோர்தானே. 340

பெரியோரும் சிறியோருமிந்த வித்தை பேதலியாசாடிடுவார் பின்னுங்கேளு - அரியோடேசித்தரியுஞ்சேந்தாற்போலே யாடலாம்வித்தை யெல்லாமவனிமேலே - உரியுமப்பால்கண்காட்டிக் குறுணிபாலா வுண்டாக்கமாட்டாயேமசக்கமாகத் தெரியத்தான் செய்திசொல்லித் தருவனப்பா சேர்மானமாதினாள் மஞ்சளாமே. 341

மஞ்சளொடுமஞ்சணை சந்தனங்குங்குமங்கள் வங்காளப்பச்சை பன்னீர்அத்தர்மேரு - இஞ்சியுடனெல்லிக்காய் நார்த்தங்காயு மெலுமிச்சை கொழுமிச்சைமாதளங்காய் - பஞ்சபட்சபரமானம் திரட்டுப்பாலும் பாலமுர்தம் தேனமுர்தம் பச்சைப்பொங்கல் - பஞ்சமலர்பிச்சி யிருவாட்சிகொன்றை பசுபந்தாதிவைகளெல்லாங் கடக்கவையே 342

கடக்கவைத்து வடக்கமாய்க் கட்டகட்ட கைக்கெல்லாமுருத் தெரியாதிருந்து கொண்டு - இடக்கவைத்துப்பிடியடா வித்தையெல்லாம் மிவ்வண்ண முருழாற்றமிருக்கும்போது - துடக்கறுத்தசோதிபதங் காணலாச்சு துரியாதீதந்திருந்த சூட்சமாட்சு - விடத்தைவைத்த

யீசனுக்குவுமையாள் சொன்ன வேதாந்தக்கோகரணமுருமாற்றுக்கே. 343

உருமாற்றம்வசியமுதலெட்டுக்காம் வுண்டானவகைகளுக்குயிதனை யென்ன - வருமாற்றமென்றுநீநினைந்திடாதே வசியமிட்டபோற்களத்தில் மோடிமேலே - பெருமாற்றமறுமாற்றமவற்கேவந்த பேய்மாற்றம் நாய்மாற்றம் பிணிதீர்மாற்றம் அருள்மாற்றரூபமிட்டு நின்றுகொண்டு அம்பலத்திலெதிரிபடை வெல்லாமாற்றே. 344

எல்லாமுமாற் தற்குவகையைக்கேளு யெதிரிகளை மோடிவைக்க யெடுக்கவென்று - சொல்லானசபதங்கள் பேசிக்கொண்டு சொற்றொழில் போர் பூசைசெய்யும்போது-வல்லாமைமாற்றமிட்டுவறியார் போலும் மாற்கமாயிருந்து கொண்டுயெவனைத்தீட்ட - கொல்லாமை கூத்துக்கள் வினைகட்டெல்லாம் குறியுரைப்பேன் நெறியுரைப்பேன்குணத்தைக்கேளே.

குணமென்னவவனுடைய வாயுதங்கள் குடுகுடுக்கைமாவைகுண்டு கட்டெல்லாம் - பணம்போலேமைதடவி மற்றுண்டான பதார்த்தமெல்லா பூசிமைக் கொண்டப்பால்நில்லு - மணம்போலேயவருக்கங்குள்ள தெல்லாம் மாற்றமாய்வழிதனக்குத் தெரியாதப்பா - பணம் போட்டு மாடுதப்பவிட்ட பின்னேபதறியலைவது போலே யலைவான்பாரே. 346

அலைந்தலைந்துசடைவுண்டா யெனமகற்று வாயுதங்கள் மேள தாளங்களற்று-உலைந்துலைந்து வொருவர்முகமொருவர்காணாவொரு நாளும் தெரியாதுவவன்பால்வந்து - மலைந்தள்ளசீஷனுக்குத் தெரியாமல்ப் போய் மாற்றன்மையைத் தொட்டுவைத்துப் பாருநீயுங்- கலந்து நின்றுகந்தினமான்போலேயாவுங் கன்றிழந்தகதைபோலே வாடுவானே 347

வாடுவான்வறுமனின்றுழலைக்கும் போது மாற்றமையால் திலதமிட்ட பொட்டழித்து - ஆடுவார்கட்த்தையெல்லாம் நின்றுபார்ப்பார் கதிசெயமென்பார்கண்போலே நீயும்வந்து - கூடுவாயுன்சீவாயுன் சீஷரோடேநீயும் கூடுவிட்டகுளவ்வந்து கூடினாற்போல் - பாடுவா யெதிரிபரையாட்டமெங்கே பந்தியம்போட்டுவந்து பயந்ததெங்கே 348

எங்கேயென்றவன்றன்குப் புத்திவந்து யின்னானால் வந்தவபகடந்தா னென்று - பங்காளியுடன் றொழிலாய் வித்தைசெய்து பகைக்கார னுன்னடியில் வந்து வீழ்ந்து - கங்காணியெங்கள் குடும்பத்தை யெல்லாம் காப்பாற்றுமென்றுன்னை வணங்கினாக்கால் - வங்காரமாகவேகீர்த்தி தங்கும் வந்தவனையடைக்கலமாய்க்காப்பாய்தானே 349

தானேதானுருமறைக்கமையிருந்தால் தன்தேகந்தெரிவதற்கு வுபாயமேது - மானேதானந்தன்மையையழித்துப் போட மக்களேபண்டு

போலுருவம்தோன்றும் - கானேபோயலைந்தென்னமாற்றம்பாரு கைக்ண்ட வித்தையடாமச்சன் பாடல் - நானேதான்கோகரணவுரு மாற்றத்தை நவிலாதேயாவருக்கும் வெளிவிடாதே. 350

வெளியென்றவட்டகர்மவசியயோகம் மேலானதம்பனஞ் சாடனங்கள் பேதம் - விளியென்றகிருஷ்ணங்கள் சங்காரங்கள் வித்வேசணங்கள் தொழிலெட்டுக்குந்தான் - வளியென்றவுருமாற்றம்பலிக் கொட்டாது வாய்ப்பானவயறுருமாற்றமைதான் - தெளியென்றேயுளி கருவை முன்நான்சொன்ன திருமணஞ்செய்யாதமங்கை பிண்டங்கேளே 351

இரசவாதத்தயிலம்

கேளேகொள்ளாக்குமரியழிந்தபிள்ளை கெட்டிகெட்டிமூன்று திங்களஞ்சுக்குள்ளே - பாளேபோகாதபடி நன்றாய்வாங்கிப் பத்திரமாய்த் துண்டுதுண்டாய் வில்லையாக்கும்- நாளேசுக்காயுலர்த்திமென் றென்றைக்கும் நம்முடையகோசலத்தில் தோய்த்து தோய்த்து- தேளேது யிந்தவிடங் கொடுங்காரந்தான் செப்புகிறோம் கலகலெனச் சலங்கைபோலே.

சலங்கைபோல்வழலைகையில்வைத்துக்கொண்டு சரக்குவகைகேளு கெந்திகளஞ்சிபத்து - இலங்கவே ரோமமதுகளஞ்சிபத்து இதையிறுத்தி வெள்ளைப்பாஷாணங்கேளு - குலுங்கவேகளஞ்சியதுமூன்றுங் கூட்டிக் கெவுரிபாஷாணமது களஞ்சிமூன்று - விலங்கவேசூதமதுகளஞ்சிமூன்று வேகமென்றசவ்வீரங்களஞ்சிமூணே. 353

மூணானசூடனது களஞ்சிமூன்று முறையுடனேதாளகமுங் களஞ்சிமூன்று - ஆ[illegible]னமனோசிலையுங்களஞ்சிமூன்று வழகான வெடியுப்பு களஞ்சிமூன்று - தோணாதகறியுப்புப் பலமூன்று சொல்லாத வுவருப்பு களஞ்சிமூன்று - பேணாத சீனமதுகளஞ்சிமூன்று பேசாத பொரிகாரங்களஞ்சிமூன்றே. 354

களஞ்சானதுரிசியதுகளஞ்சி மூன்று கனமானநாகமது களஞ்சிமூன்று - விளஞ்சானகாரியங்களஞ்சிமூன்று மேன்மையுள்ள நவசாரங்களஞ்சி மூன்று - உளஞ்சானசாதிலிங்கங் களஞ்சிமூன்று வுத்தகத்தாழம்பூ களஞ்சி மூன்று - அளஞ்சானமருந்ததுதான் ரெண்டுபத்து அப்பனேயிருள்ளிச் சாற்றாலாட்டே. 355

ஆட்டுவதுரோமமது சேருமட்டும் அரைத்திடுவாய்பதினைஞ்சு நாள் தானப்பா - மூட்டுவதுவழித்தெடுத்து வில்லைதட்டி மூன்றுநாள்ரவிதனிலே காயவைத்து-மாட்டுவதுவந்தவில்லை கலசத்திட்டுமண்மணரா தாளமகன்வழலைகூடத் - தீட்டுவதுகுழித்தபிலமிறக்கிக்கொண்டு செம்பினிலேதடவியதைதீயிற்போடே 356

தீயிலிடச்செம்பதுதான் பத்துமாற்றுச் செப்பாதேகுருவிருந்து ரட்சிப்பார்பார் - வாயிலிட நவலோகஞ்சிவக்குமப்பா மாற்றென்ன சோதிநிறமாகும்பாரு -பாயிலிடத்தயிலம்வைத்தகலசத்தோட்டை பதராக்கி நவலோகமுருக்கும்போது - கோயிலிடவப்படியேமாற்றுபத்துக் குருவாணையெந்தன்மனோமணியினாணை. 357

மணியானசிவசுப்பிரமணியனாணை மாதவத்தோர்பதினெண்பேர் சித்தராணை - துணிவானசிதம்பர சக்கரத்தினாணை சொர்க்கவகைநாற்பத்தி முன்கோனாணை - பணியானசத்தரிஷி பாதத்தாணை பரமசிவன் றன்னாணை பண்ணிப்பாரு - அணியாக ஓமைகெந்தி நாதத்தாட்டு வடங்காதுமருந்துவகையிதுபோராதே. 358

போராதுயிம்மருந்துபலக்கணக்காய்ப் போட்டாலுங்குழித்தயிலமப்பா வேண்டும் - வாராது துலாக்கணக்காய்மருந்திட்டாலு மைந்தனே குழித்தயிலமிறக்கவேண்டும் - சோராதுகைகண்டதயிலப்போக்கு சொர்ன்னமயமாகுமப்பா யெளிதில்க்காணும் - யேராதுயிதைவெளியிற் போட்டீரானால் ரிஷிசித்தர்சபிப்பார் களென்றிட்டேனே. 359

சவுக்காரச்சுண்ணம்

என்பதுதான்சவுக்காரச்சுண்ணங்கேளு யெளிதிலேசொல்லுகிறே முனக்காயிப்போ -குன்றாதசட்டியிலே வெடியுப்பைத்தான் கொட்டியேபரத்தியதைமேலேகேளு - துன்றாதசவுக்காரக் கட்டிவைத்துச் சொல்லுவேன்மேற்படியுமுப்பைக் கொட்டி - நன்றாகப்பரத்தியதைப் பொதித்துமூடி நல்நீலப்பொடி தூவியெரியிட்டுப்பார். 360

எரியிடவே சவுக்காரச்சுண்ணமாச்சு யிதுவென்னசூதைநீர் யிதற்கொவ்வாது - சரியிடைதான்வழலையிட்டு வெள்ளிசெம்பில் தாக்கிப் பாராரறைதான் தப்பாதப்பா - விரிவுமெத்தயில்லையடா யிதற்குத்தானும் வெள்ளியமுருகையிலே கொடுத்துப்பாரு - அரிதானவெள்ளியது சரிகைவெள்ளி வதுகொண்டுரசவாதஞ்செய்துபாரே. 361

துருசுக்குரு

செய்யவேயின்னமொரு குருவைக்கேளு தெரிவானதுருசது தான்கட்டியாக - உய்யவேவாங்கிவந்து வாய்நீர்பூசி வுற்பனமாய்ரவிதனிலே காயவைத்துப் - பையவேநாய்க்கட்டம் வாய்நீர்விட்டுப் பருவமாய் மைபோலேயரைத்துக்கொண்டு - தொய்யவேதுருசுக்குக் கவசங்கட்டிச் சூரியனில்காயவைத்து வயணங்கேளே. 362

கேளப்பாபிறவேட்டம் கிலுகிலுப்பைக் கிள்ளியேவேற்பிடிங்கி வந்துவரைத்துமைபோல் - வாளப்பாமுன் துருகுகவசங்கட்டி வாகாகச்சீலை மண்ணும் கவசஞ்செய்து - நாளப்பாகாடையொரு புடத்தைப் போடு நலமானதுரிசதுவும் குருவுமாச்சு வேனப்பாவழலையிருக்கும் போது வேறேயொருகுருவேண்டாம்விருதுவெட்டே. 363

வெட்டுவதுசலங்கைபோலுலர்த்திவைத்த மெல்விநல்லாள்மணம் புணராமின்னாள் தங்கக் - கட்டியதுவாதத்துக் கல்லோசொன்னோம் காசினியில்வாடை கோகரணஞ்செய்யும் - தொட்டுமதுபிடிக்கையிலே மருந்து கூட்டுந் தொழிலினிமேற்சேர்மானஞ் சூட்டக்கேளு - வெட்டியிலா மிச்சம் விளா வில்வம்வேறு வெள்வேலம் வேறுமதின் பட்டைமே. 364

கோகரணவாடை

பட்டையென்னயிலவங்கப் பட்டையேலம் பத்திரிராம்புயிரு வேலிவேசம் - கட்டையிலேயகிற்கட்டை மணக்காய்கட்டை கருங்கோலரிசி மஞ்சணாத்திவேறு - சட்டைபண்ணாசசடைக் கஞ்சாசமூலமாரும் சதாவேரிசாரணை வேற்பீளைவேறும் - நெட்டிவேரறுகம்வேரமுக்காரா வேர்நிம்பவேற்குறுந்தொட்டிவேறுந்தானே 365

வேறுடனேநரியுடையவெரவுரிவேறு மிளகுதக்காளிவேற் முருங்கைவேறு - சீறுடனேசூரிவேற் வாகைவேறும் சிறுநெரிஞ்சி செருப்படைவேற்கொடுப்பைவேறும் - பாறுடனேசவுரிவேற்சாயவேறும் பருத்தி வேற்பாற்குறண்டி வெட்பூலாத்தி - வேறுடனேவிடத்திலையோ விறுவெட்டானம் வேற்விஷ்ணு கிராந்திவேற்மேனிவேறே. 366

மேனியாந்தைவேளைவேற்சிறுகீரைவேறு மிளகுசாரணை வேறுதுத்தி வேறும் - கூனியாம்விருட்சம் வேராலம் வேறம் குருவிஞ்சிநன்னாரிதுளசிவேறும் - சீனியாம்மருதம் வேற்செந்தொட்டி வேறும் சிவமுன்னைபெருமுன்னை தொட்டால்வாடி - ஆனியாம் வேறுடனே வுகாய்வேறும் அவுரிவேர்பிராயம்வேற் அரசம் வேறே. 367

அரசம்வேற்புரசம் வேற்புங்கம்வேறும் ஆத்திவேற்நொச்சிவேற் அத்தியித்தி - உரசம்வேறிசலைவேறுசிலைவேறு முமிரிவேரவரைவேற் வுத்ததாளி - விரசம்வேர்யிலந்தைவேற் முருக்கம்வேறு வீருடனே யாவரைவேற்வீழிவேறும் - நிரைசமனாய்த்தறித்துலர்த்திபிடித்துத்தூளாய் நிர்மலமாம்பொடியானபோதுகேளே. 368

போதுகேள்தகரப்பால் பூலாங்கிழங்கு புனுகுசட்டம்பச்சைக்கற்பூரம்

போட்டு வாது கேள்கொச்சிமஞ்சள் வங்காளப்பச்சை மல்லிகைப்பூ செண்பகப் பூவாண்கூட்டிச் - சூதுகேள்சாம்பிரரணித்தயிலமூட்டிச் சொன்னபடி வழலையிட்டுயிடிபின்னப்பா - ஏதுகேள்வதற்கப்பால்வடி கொண்டிட்டு யிதற்குமேல்பாக்களவுசவ்வாதுபோடே. 369

போட்டுமேயந்தயிடை புழுகும்போட்டுப் புகழானஅத்தர்சம்பங்கி யெண்ணை - ஆட்டுமேநெரியரிசிப் பாலும்விட்டு அழகானகண்டில் வெண்ணெய்பூவெண்ணைக்கு - மூட்டுமேபுதுசட்டிக் குள்ளேவிட்டு மோகினிக்குப் பூசித்துமுக்கோணத்தில் - நாட்டுமேமுல்லைப்பூ பிச்சிப்பூவும் நலமானபன்னீரும் தெளித்துவையே. 370

வையப்பாபன்னீர்ப்பூ தாழம்பூவும் வாகானமகுடம்பூ கூடப்போட்டுச் - செய்யப்பாமுதற்சாதி சற்பம்பார்த்துச் செயம்படவேபிடித்தடைத்து நாற்பதாம்நாள் - பொய்யப்பாதிறந்துவிடக் காளிகோவிற் புதையல் திறந்தெடுக்கையிலே பூசைபண்ணு - மெய்யப்பாவாடையிது செகமேமெய்க்க மேலானவித்தையதுசெய்வாரே. 371

ஆரோதானிவ்வாடையனுபோலப்பா அப்பனேசரீரத்தில் பூசினாக்கால் - வாரோளிகுழலகிற்சென்றுபாரு வாடைபட்டு மயங்கிடுவார்வணங்குவார்பார் - போராளிசத்துருக்களாரானாலும் பூவையர்களாடவர்களாரானாலும் - மேரானமலை கண்டுவருமேயப்பா வேதாந்தமச்சமுனி தலைவாசத்தே. 372

கொழுகட்ட

தலைவாசம்பண்ணாதபேர்கள்வாடை தான்கண்டலிருப்பாரோ தரித்துமங்கே - முலைமாதருந்தனிட வாடைகண்டால் மோகியாதிருப்பாரோ முழித்துமங்கே - நிலவரமாயின்னமொருவித்தைகேளு நெடுநாளாய் மலடிருந்துமனமுருகிக் - குலைமகளாய்த் தலைப்பிள்ளைப் பெற்றாளானால் கொடிமட்டும்வாங்கியதின்விபரங்கேளே. 373

விபரமென்னதலைகீழாய்த் தூக்கிக்காற்றல் மெல்லிதாயுலர்ந்தபின்பு மூன்றுதுண்டாய் - உபாயமொன்றுருண்டையொன்றுநீளமொன்று வட்ட மோதிரமாகவுள்ளடக்கி - இபரமாயுருண்டைவெள்ளிநீளத்தங்க மியல்பான வட்டமாய்ப்பொன்னால்செய்து - உபாயமாயுன்மீதி படையெடுத்து ஒருத்தன்வந்து போர்பொருவனானால்தானே. 374

ஆனாலேயொருகுடத்தில் சொல்லக்கேளு வக்காளைமூ தேவியாரைத்தானும் - சேனைதளமடியவென்றுநினைத்துக்கொண்டு

சீலையிலையவள்கருவுசம்பாதித்துப் - போனபழிகாரியவளுருப்போல் பண்ணிப்புதுக்குடத்துக்குள்வைத்துப் பூசைகேளு - ஏனமொடுகமுப் போட்டு வாய்க்கரிசிபோட்டு யிடுகாட்டுத்தலையோட்டுக்குள்ளேவைத்தே.

வைத்தபின்புகருவென்னவுபாயங்கேளு மாதவிடைச்சீலையுடன் விளக்குமாறுஞ் - செத்தபிள்ளைதலையோடும்ஓனாய்மண்டை செருப்பருத்தம்நாம்பெற்றமாலைபூவை - இத்தகொடைகம்பொடிதல் பழஞ்சுளகுரோமம்-யிராக்காச்சியென்றகுடி மகன்வீடுய்யச் - சுத்தவவ்வத லிரோமம்பீத்தச்சீலை துடக்கோடுவித்தனையுஞ்சுட்டக்கேளே. 376

சூட்டுவதுகாக்கலம்வேற்கரிமிரட்டி சுடக்குதத்தக்காளிதும்பைசீந்தி மூலம் - ஆட்டுவது ஆத்திவேற் காஞ்சுரங்கம்பு அத்திவேற் பருத்திவிரைக்காக்கைகூடு - மூட்டுவதுபிராந்தின்கூ டொக்கச்சேர்த்து முச்சந்தினூற்றதத்துச் சித்தூநூலுங் - கூட்டவதுவுடைகுளத்துக்கறையில் போட்டுக் குடிபோனகூறையில் கூளத்தைக்கொண்டே. 377

படைபோட

கொண்டுசிட்டு நிருமணரா யிருந்துகொண்டு குறவன்கட்டதினாலே தூத்துவாரி - முண்டையிருக்குங்குடத்துக்குள்ளேபோடு மூத்த வள்சக்கரமெழுதி மூட்டுமூட்டு - உண்டசோற்றுக்கிரண்டுசெய்யும்பாவி ஓகாளி ஓம்தூமாவதியே ஓகோ - வண்டுறுக்கிப்பல்லழகிதூசணித்த வார்த்தையெல்லாமுடுத்தவளேவஸ்திரமாக. 378

வஸ்திராபரணந்தொட்டி சேனையெல்லாம் வானநாடேற்றிவிடு மரணகாளி குத்திரவித்தைக்காளிகூளி குடிகெடுத்தசீமாட்டி கோ கோ கோ க க க - அஸ்திரவேல்விழியாளே அக்கசாலை ஆச்சிரமாலையம் பெற்றிருந்தமுத்தாள் - சித்திரரூபிதேவிதற்குதாக்கு சேனைபடைமாளவு நீதாக்கென்பாயே. 379

தாக்கென்றுலட்சமுருவேற்றியேதான் சத்துருவின்படையோரங் கொட்டைபோட்டு - வாக்கொன்றுமனதொன்று நினைத்திடாமல் வாழ்குந்த மெறியீட்டில் வாணம்பாணம்-நோக்கென்றுபடையிருப்பைபார்த்து வைத்துதன்மாயராத்திரிப்போர் செய்யுமென்று- மேற்கொன்று கீழ்க்கொன்று தெற்கெயொன்று மூன்றுதிசை மூன்றுகுடமிவ்வண்ணந்தானே. 380

இவ்வண்ணங்குடத்திற்குவிபரங்கேளு யியல்வரணைந்துளாயிரஞ் செவ்வாபிபுட்பம் - மவ்வண்ணந்தென்குடத்தில் வட்டங்கட்டி யிதற்கு முன்னுருச் செபித்துவதற்குக்கீழ்பால் - வெவ்வண்ணைநீண்டகுளிசத்

தைக்கட்டி விபரமுடன் முன்னூறுபுட்பஞ்சூட்டி - மைவண்ணமேல் திசைக்கு வெள்ளியுண்டை வாய்வளையந்தனிற்சூட்டி முன்னூறுபூவே383

முன்னூறுபூச்சொரிந்துமோகினிக்கு மூட்டென்றுயெடுத்துவிட்டுக் கொளுத்திப்போட்டு - உன்னூறுநீவந்து சேருமுன்னேயுன்னெதிரியுடைய திருநாமஞ்சாத்தான் - தன்னூறு போய்சேர்வே னிருந்தானானால் தளத்துடனே யெமனூற்குப் பயணம்போவான் - பொன்னூறாயிரங் கோடிகொடுத்திட்டாலும் பூசைப்பண்ணும்போர்த் தொழில்கள் சொல்லொண்ணாதே. 382

எண்ணாதுயிடிமுழக்கங் கடல்முழக்க மொருகோடிபூதகணங்கோடி பேய்கள் - விண்ணாடுமுனிவர்களும் பயப்படத்தான் வெட்டென்ன குத்தென்னவாரபாரங் - கொண்ணாலும்படைசேனை கணக்கில்லாமற் கூடரைத்தாற்போலச்சமட்டு பேய்கள்கூடிக் - கண்ணாலும்பார்க்கமுடியாது பேரை கண்டவரும் திரும்பிவர மாட்டார்தானே. 383

மாட்டாமலோடிடுவான் மன்னன்சேனை மாண்டசெய்தி மெய்பொய்யென்பதிறிகவேண்டில் - நாட்டாரைக்கூட்டமிட்டுவிடிந்துவந்து நகரிசோதனைபாற்கும்போதிலேதான் - மீட்டாரேவட திசைனீபோ கிட்டாட்டா விரைத்திடுவார்சேனைதளத் தரசன்கூடக் - காட்டரேகுட மேருதகந்து போய்தான்கணையாழிகுளிசமுண்டை கிடக்குங்காணே. 384

காணவேசேனை படைமாரணத்தை கணக்கிடவோ கூடாது வக்காளாட்டு - வீணல்லவுன்மேலே யெதிரிவந்தால் விளம்பினவரப்படியே செய்வாய்நீயும் - பூணவேயவர்நொடிகள் தூளாய்போகப் புறப்பட்லர்வுன் சேனைதளத்தோடேநீ - யாணவவர் கெடியில் திசை மூன்றுக்குந்தா னவ்வயணம் அப்படியே முன்போல்செய்ய. 385

செய்யவேயவன்கோட்டைக்குள் பேய்கள்சென்று சண்டைதான் கொடுத்துப்பஞ்சால்ப்பண்ணி-நைய்யவே கொன்றுளக்கியவள் வீடெல்லாம் நாசமாய்ப்பண்ணிவிட்டுச் சுடலையாக்கத்- தொய்யவே படை பாணந் தூளாய்ப்போகும் தூமாபதியாள்போர்த்தொழிலைச்செல்லப் போமா ஐயையோயிந்தவித்தை அரசருக்கு மனந்தவாச்சரியமடாசெய்துபாரே. 386

பாரப்பாசிவாலயங்க ளக்கிராரம் பண்டாரவாடகையாய் யிருப்போர்தங்கள் - நேரப்பாயுன்னை வுபசாரம்பண்ணி நிதியிடைக்காயிது வின்னம்பருத்திடாமல் - பாரப்பாவாரமா யிருப்போரானால் பாவிய வன்கோவில்கிறாமமெல்லாந் - நூரப்பா அடியோடே யற்றுப்போர்கத் துமாபதியாவேதுரத்துவாயே. 387

துரத்துவதுக்கெப்படித்தான் னென்றால்கேளு சுடலையில்வைத்துரிச் சேவித்துகோணாமல்தான் பார்த்துவதர்க்கந்தந்த யிடநிற்றானே பாதாளமாய்தோண்டி குடத்தைத்தாவி - சுரத்திவசம்பிணித்துயர்கள் கிராமமெல்லாந் தூமாபதியால்நேர் தோஷம்சூழ்ந்துகொண்டு உரத்துடனே சுடுகாடாய்ப்பண்ணிப்போடும் ஓகோகோமாகொடுமை யுனக்காகாதே. 388

ஆகாதசிவாலயத்தில் தாவித்தாக்கால் அங்கையுள்ளதேவநெல்லா மோடிப்போவார் - வாகாகபூசிக்கமறையோர் போனால் வாயிலேமண்விழுவார்கஷ்டமப்பா - போகாது பிசாசடையுஞ் சேடன் வாழும் பூசையில்லாதூபதீபங்களில்லை - சாகாதுசேர்ந்தவர்போல் சுயம்புறாதா தான்விழிப்பாரிருந்துகொண்டு சவமாய்தானே. 389

சவமாகபோகும்டா காளிகோவில் சாத்தாமுன்னடிமாடன் தம்பிரானுஞ் - சிவமானகளையற்று சத்தியற்று தீர்மானமாயொளியுஞ் சிவாலயங்கள் - அவமானத்துவிதியை யார்தீர்ப்பாரென்றலைந்து திரியாதே உவமானமுன்புதைத்தகுடத்தை தோண்டி ஒருத்தருக்குந் தெரியாமலுடை தூரத்தே. 390

தூரத்தேயெறிந்துவிட்டுத்தீர்த்தமாடிசுயம்புக்குவஷ்டமரகசியமுஞ்சாத்தி வீரத்தேபூரணகும்பஞ்சேவித்து விசையமிரப்பண்ணி வித்துத்தூபதீபம் - பூரத்தையாலாத்திகுளுமைசாத்தி பூசித்துஅபிஷேகமெல்லாஞ்செய்து - ஈரத்தேமலர் தூவயீசன்வந்து யிருப்பாரே யண்டையிலுமெண்மடங்கே.391

எண்மணங்காய்க்கிராமங் களிலில்லந்தோறும் யெடுத்தெறிந்து புதைத்த கருவெல்வேபோலக் - கண்மட்டுங்காய்வார்க்குக் களிப்புச்செய்து கையாறப்பரிகாரங்பண்ணிமேலும்-புண்மடங்கும்நோய்மடங்கும் புவியுள் ளோற்கும் பூர்த்தியாய்லட்சுமிக்கடாட்சமெய்யும்- விண்மடங்கு மண்மடங்கு முளைக்கண்டாலே வியாதியெல்லாஞ்சணத்திலே மடங்கும்பாரே. 392

மடங்குமுதளைத்தடம்பச் சிலைகாட்டெள்ளு வண்ணார்கள் பத்த வைத்தக்கர்ய்ச்சு நீலம் - அடங்கவருபுலிகடுவாய்க்கிட்டங் கூட்ட யரைத்திடுவாய் கரடிமூத்திரத்தினாலே - துடங்கவருந்திமுருகச் சிலைதோய்த்துச் சூரியனில்காய்ந்து திரித் திரித்துப்போயை - இடங்கலுஞ் சத்துருக்கோட்டையைப் பார்த்திட்டாலுமிந்த புகைவேட்டெழும்பாதாமே.

எழும்பாதுயெந்தயிடிவேட்டானாலும யிப்புகைபட்டிறந்திடுவான் யெதிரிசேனை - தளம்பாதுநாயெழும்பா தோடிபபோனாலும் சத்துருசங்காரமுட்டுத்திரியினாலே - குளம்பியேதெரிபட் டாயுசங்களெல்லாம் கூர்மையன்றிதழையாதுகோடுமத்து உளம்பியேகதிப்பு

மங்கியறமாட்டாமல் ஓடியுமடாவாயுதங்க ளொடியும்பாரே. 394

ஓடியும்பாராண்கீழ்க்காய் நெல்லிவேரும் ஒரிதழ்த்தாமரைவேரு முருக்கிலேதான் அடியுமடாசலாகையொன்று வடித்துக்கொண்டு வதனுள்ளே யெதிரிபேரெழுதிச்சீட்டை-முடியும்பாரிரு வேருந்தலை மாறித்தான் மூட்டியந்தச்சலாகையிருவாயுமூடி - படியும்பார் உலைக் கட்டத்துக்கல்லுக்கீழே பத்திரமாய்புதைத்துவைப் பாய்க்கருவினாலே395

கருவென்னவழலைதொட்டுத் தாக்குவீரால் கம்மியென்கையால் கூடம் போடப்போட - உருவென்னயெதிராளிகைகாலாட ஒட்டாது கல்லுப்போல் கிடப்பானப்பா - தருவென்னபெண்ணுக்குப்பொன்பூடப்பா தாமரைக்குத்தைவேளைமாறிக்கொள்ளு - குருவென்னயப்படியே செய்யவாடுங் கூடம்விட்டுபேர்த்தெரிய வோடுந்தானே. 396

சத்துருசங்காரம்

ஓடுந்தான்தீப்பிடித்துவேகும் வீட்டை ஒருவீட்டோடொழியுமது வீடேற்றாமல் - காடுந்தான்யெரிநிகமாந்தரீயம் கம்மென்றும் பம்பென்றும் அரிவோமென்றும் - சாடுந்தான்மூச்சுவிடதிலக்கத்தோறும் தணியுமடாயெரியுடைய கோபந்தானும் - வீடுந்தான்பிழைத்துதடா தண்ணீர்வாரி நமநமவென்றே கரத்திலிறைத்து நகாரம்போடே. 397

நகாரமெல்லாம்பிழைத்துதடா தண்ணீர்வாரி நமநமவென்றே கரத்தி ளறைத்துநில்லு - அகாரம்பா ரிகாரமப்பா ருகாரம்பாரு அஞ்செழுத்து மூன்றெழுத்து மெட்டுமாச்சு - பகரும்பேர்கணலெல்லாந்தணிந்துபோகும் பாம்புமப்போயகப்படுமே பாரவிஞ்சை - நிகருண்டோவுனக்குமொரு மந்திரவாதி நீணிலத்திலாரிருந்து நெரிவிப்பாரே. 398

நெரிவிக்கமண்டையிடி வயற்றுக்குன்மம் நேற்றிரவிலுதுக் கெல்லாமிந்தவிஞ்சை - அரிவிக்கப்பிணிவிபரம் பிரித்திட்டோதி லனலாறுஞ்சுரமாறி வதுபோலப்பா - குரிவிக்கயிவ்வண்ணம் பிணியுங்கூடக் கோபாற்றுக்குணமாகுங் கூறிப்பாரு - தெரிவிக்கவக்கினி மந்திரமதாச்சு திஷ்ட்டி பிணியேவலெல்லாந்தீய்க்கும்பாரே. 399

தீய்க்குமப்பாபிளவைகண்ட மாலைசூலை சென்னியிலே பிறப்பட்ட பிளவைக்கெல்லாம்-ஆய்க்குமப்பாவறையாப்புந் துடைவாழைக்கி அங்கத் திலெழுந்த பருவத்துக்கெல்லாம் - போய்க்குமப்பாவேற்வெட்ட சொல்லக் கேளு பொழுதுபடும்போதுமெலிகொடுத்துநீயும் - வாய்க்குமப்பா வழக் கராவே றாளத்தைத்தோண்டி வடக்குமுகமாகவொன்று வெட்டிப்போடே.

போட்டுவிட்டுப்பிரித்துப் பாராமல் நீயும் புகலுவதுவியாதியறவென்று வெட்டு - மூட்டிவெட்டுவேற்நாமஞ் சொல்லக்கொண்டு முதலாளி பற்பிணம்பேரிரண்டுஞ்சொல்லி - போட்டுவிட்டுவிடுதிக்கு வந்துநீயும் புண்முகத்தில் மசிநசி யென்றுரைத்துச் சேவி - மூட்டிவிட்டு ஆணிவிட்டுதகர்த்துபோகும் மூன்றுனாட்குள்ளநோய் யநறிப்போமே. 401

ஆறினதே தர்மமடாவெல்லாமறிந்து மறிந்தெடுத்தவவனேயவனேயா சான் - கூறினசொல்மறவாமலண்டம்போல சீஷன்குணபாக மொழிபவனேவைத்தியனாகுந் - தேறினவன்மகாஞானி தீனியாசை சீயென்றுபோட்டவனே யவன்சன்னியாசி - மீறினதுதுட்டரையடிப் போனவனேவேரதன் வீதிமுறைநூல்பார்த்துரைப் போன்மறையோனாமே.

மூட்டுதிர

மறைனூலுங்கண்ட சாஸ்திரங்களாறும் வகுத்துரைத்த மகுத்து வந்தான் சாற்றக்கேளு - நிறைனாலுவேதவியாசன் தானும் மீசனுதை தப்பாமற் கபடமாகத் - துறைனாலுவழியாகவொருவர்வந்து துருசான பாஷாணமெழுகுமாகும் - மறைனாலுதுரிச்சான வெரிந்தீயாகு மாட் கொண்ட குருவிருந்தமூலங்கொள்ளே. 403

கொள்ளுவாய் பச்சிலைமூலிகைதானப்பா குவலையத்தில்வந்தவகை சொல்லக்கேளீர் - விள்ளுவாய் மூலமெல்லா மயன்படைத்தான் மேலான வியாதியெல்லாமயன்படைத்தான்-உள்ளபடிசிவனார் பச்சிலையைப் பார்த்து வுங்களாலெங்களுக்கும் முலகத்தோர்க்கு - விள்ளுமென சிவன் பூடுகளைதான்கேழ்க்க வியாதியென்றபிணியறுப்போம் னாங்களன்றா.404

நாங்களென்றால்நீங்க ளெத்தனைபேர்மூலி நம்மின்பிணி நாலாயிரமும் தீர்ப்பீரோநீர் - தாங்களென்றாலாயிரத் தெட்டுப்பேருண்டு சஞ்சீவினாங்களையா வேளை பார்த்து - ஓங்களுடநந்தந்த உச்சம்பார்த்து ஓம்பிரணவ அரியோனமாவென்றோதிப் - பாங்குடனேயெங்களைத்தான் பரித்துவந்து பரிகாரம் நீங்கள் சொன்னபடியே செய்தால். 405

ஆதிமூலிகைவரலாறு.

செய்தாலேனிண்ணயமாய்ப்பிணியை தீர்ப்போம் தெரியாமலொன்று தீர்க்கவொன்றுசெய்தால் - வைதாலுந்தீர்க்கரியோ மென்றுமூலிவாய் திறந்துசிவனிடத்திற் சொன்னதாலே - பெய்தாலேகிரணவுச்ச முருமவேளை கிரகநட்சத்திரம்பக்கல்வாரங்கண்டு - உய்தாலேயுங்களதாக்குறியதெல்லாம் வுறைவித்துவுமைவேண்டிதீரென்றாரே. 406

கொடிய வெள்பாஷாணகட்டு செந்தூரம்

தீதென்றபடிகேட்டுச் சிவனுத்தாரம் செப்பினர்ரப்படியே மூலியெல்லாம் - பாரென்றுவாதமொடு வைத்தியமார்க்கம் பச்சிலைமூலிகை யினிலேபாடக்கேளு - தூரென்றகொடிவேலி யறுக்கவேரை துடங்கயிலே பிடிங்கிவந்து சூட்டக்கேளு - வேரென்றவேரிடித்து பொடியைத்தூவு வெள்ளைபாஷாணமதை சட்டியிலேவையே 407

சட்டியிலேபொடியிட்டு சரக்கைவைத்து சார்வாகமேலுமந்த பொடியைத்தூவி - வட்டியிலேமேற்படி பூவழலைதானும் வராகனிடைக் கணுகளவும்மருதூணிச்சாற் - விட்டுமெள்ள மேல்மூடியணியும்போது வெள்ளைப்பாஷாணமதுக் கட்டிப்போச்சு - அட்டியென்னவெள்ளையது கட்டினாக்கா லாடுஞ்சரக்கறுபத்து நாலுங்கேளே. 408

நாலுகேள்பாஷாணங்கட்டினத்தை நாலுமதிச்சட்டியிலே யின்னுமிட்டும் பாலுங்கேள் கத்தாழம்வேற்று ளிட்ட பண்டுக்குகுச்சி கொண்டுகிண்டிப் பார்செந்தூரம் - மேலும்பார் செந்தூரமானபின்பு மெழுகு செய்யும் சிற்சட்டிக்குள்ளேவைத்து - ஆலுங்கேள்கற்குழம் பாலைவிட்டு வக்குச்சுக்கற்றாழம்பூக்குச்சாமே. 409

பூக்குச்சுகொண்டுகிண்டிமெழுகுமாமோ பூவழலைக்கடுகளவு பொட்டிட்டாக்கால் - ஈக்குச்சுப்போகுமடா மெழுகுதானும் யென்னசொல் வேன்சரக்குவகை யெல்லாங்கொல்லும் - வாய்க்குச்சுப் போட்டாலும் தீயிற்றங்க மாற்றாகும் பத்தரையு மகிழ்ந்துபாரு - பூக்குச்சுக்கழுதை விந்து வெளியிடாதே பொன்னதிலேகாணுமடா பூண்டுபாரே. 410

பூநாக சிறுசின்னிவித்தை

பூண்டுபார்சிறுசின்னிச் சாற்றினுள்ளே பூநாகப்பொன்காண வகைதான்கேளு - ஈண்டுபார்பூநாகப்பொடியுழக்கு யியல்பானச்சிறுசின்னிச் சாறுழக்கு - வேண்டுபார்கலந்துவிட்டுயெரியும்போது மிதந்து வரும்நெய்வழித்துமெழுகுபோல்வை - தூண்டுபார்சாற்றைவற வற்றக்காய்ச்சி துய்யகனிப்போலிறுக்கிக் குகைபோற்பண்ணே. 411

அரி[illegible]ரம்

குகைக்குள்ளேவேணரச மிட்டுக்கொண்டு குறியாகவறுகம்புல் சாறுவிட்டு - வகைக்குள்ளே பூநாகமெழுகுபோட்டு வாகானகுகை மூடிச்சீலைசெய்து - நகைக்குள்ளபொன்சமையி தென்றுசொல்லி

நாட்டுள்ளோர் தம்மிடத்தில்பொருளைவாங்கி - குகைக்குள்ள முழப்புடத்தி லிட்டுப்பாரு குருவேண்டுங்கடனுக்கு ரெட்டிகாணே. 412

காணவேயரிதார கட்டிவாங்கி கடுகவேசிறுசின்னிச்சாறைவிட்டுப் - பூணவேயரைத்தந்த குகைக்குள்தாக்கிப் புகழாக பூனாககுருவை வைத்து தூணவெமுழப்புடத்திலிட்டுப்பாரு சோதியென்னசரிமாற்றுப் பத்துமாச்சு வேண்பேர்வைத்தாலுங்காணுமோசொல் வேதாந்தக்குருவித்தை இதுதான்பாரே. 413

பாரேநீகெந்திக்கியிந்தவீதம் பரிவானசாரத்துக்கிந்தவீதம் - தாரேநீலிங்கத்திர்க்கிந்தவீதம் சவ்வீரந்துருசுக்கு யிந்தவீதம் - பூரேநீகூடனுக்குயிந்தவீதம் பொன்னாகுஞ்சிறுநாகத்திற்கூட - வெரேநீறு ரேதுதுலையென்றெண்ணி வீணேநீ சுட்டலைந்து கெட்டிடாதே. 414

கெட்டபேரனேகரப்பா சித்தர்பாடல் கெணியாமல்ரசவாத மெய்யென்றெண்ணி - விட்டபேரனேகமிந்த விதிகிட்டாமல் வீணிலே பார்த்தலைந்து வேதைகாணார் - மட்டைகள் போல்நீயேங்கிமாள வேண்டா மச்சமுனியிந்தயெண்ணூற் தங்கம்தங்கம் - போட்டதுதான் போட்டாற் போலின்னமொன்று புகலுவேன்வகை விபரமாகத்தானே. 415

தானென்றகளிமண்ணுங் கொண்டுசெய்யச் சட்டிரெண்டு வாய்பொருந்த செய்யச் சொல்லி-நானென்ற கீழ்ச்சட்டிக்குள்ளே தானும் நடுவட்டங்கிண்ணிவாய் பொருமாப்போல் - தேனென்றசிறுபயத்தங் காய்ரேகைக்குள் சென்றிருந்துபதியவரை வட்டங்கீறு - மானென்ற வுள்வீதி வட்டந்தானு மைந்தனேயெட்டு விரல்திக்கெல்லாமே. 416

செல்செரி.

எல்லாமிந்தகீழ்சட்டி மட்டுந்தானே இணங்கியமேற்சட்டிக்கு வொன்றும் வேண்டாம் - உல்லாசம்சட்டிவாய்பொருந்தமட்டும் உண்டாக்கி கீழ்சட்டிவிட்டத்துள்ளே - சொல்லாதேநெல்லிக்காய் கெந்திநல்ல சுத்தவெள்ளை பளிங்குக்கல் போலேபார்த்து - வெல்லாதேபலம் பத்துகுன்றிமுத்து விரைநாழிரெண்டுமொன்றாய் பொடித்துவையே. 417

வைப்பதுவும்ரேகைக்குள்வைத்துக்கொண்டு வழியானசீவுபொடி வெண்கலத்தால் - குப்பறவேள்கலக்கொம்பு கொண்டுமுன்னே குறியிட்டவள்பதியைக் கவிழ்த்துமூடி-துப்புறவாய் யுருந்துமைப்போ லரைத்துமந்த சுற்றிலேபூசியுள்ளேநீர்புகாமல-அப்பிவிடுகளிமண்ணாலும் நன்று யந்தவெண்கலக்கொம்பாமுருங்கத்தண்ணீர். 418

தண்ணிவிட்டுவதன்மேலேசொட்டுகட்டி தான்கவிழ்த்து ஏழுசீலை மண்ணுஞ்செய்து - பண்ணிவிட்டுவடுப்பேற்றிகமலம்போலே பாரிசென்றி சிறுவிரகாலெரித்துமந்த - கண்ணிவைத்து பின்னமுங்க தண்ணீர்விட்டு சட்டியெடுத்ததன்மேலும்பின்னுமூடி - தண்ணிவைத்து மருகாலும் தண்ணீர்விட்டு தான்மூன்றுகிண்ணி சிரியிறக்கிடாயே. 419

இறக்கியந்தகூடாறியிருந்தபின்பு இயலானமேற்சட்டித் திறந்துவப்பா கிறக்கியந்தக்கிண்ணிச் கூடாறினாக்கால் கேளப்பாநின்னமுன் மருந்து வைக்கும்போது - குற்றப்பாகொடுப்பச்சாற்விரக்கிடைப்பாய் குருவிகொண்டுமருந்தடக்க வெளிவிடாதே - உறைக்கத்தான் முன் சொல்லாதடக்கம்போட்டேன் வுத்தமனே குமபாலில்சத்தைப்பாரே. 420

கருமலைசெம்மலைசத்திவித்தை

சத்தானகளிப்புதான் கத்திகொண்டு தான்வழித்து பொர்ப்பொடிபோல் செப்பிலிட்டு - முத்தானகுருவென்றுபதனம்பண்ணி மூட்டப்பாரசவாதம்செய்துபாரு - சித்தானசெம்புருக முகத்தில்சற்றே சிறப்பானகருமலை செம்மலைதூள்வீசும் - பத்தானபார்த்தது.தான பத்துமாதது பழுக்குமடாவேதையிது பண்ணிப்பாரே. 421

அரிதாரம்

வேதையிதுலெகு விட்டுசெய்துபாரு வெள்ளிசெம்பில் பத்தரையும் தப்பாதப்ப... - வாதிகட்குயின்னமொரு வித்தைகேளு மகத்தான வரிதாரம் பொரிகாரகதுள் - . ஆதியிலேகுன்றுமணி பருப்புங்கூட்டியத்துளிலே பொன்னாங்காணிச்சாருங் சூதமதுகளஞ்சிபத்து விரவிக்கொண்டு சொன்னபடிபண்டுபோல் செய்துபாரே. 422

செய்துபார்மயிற்கழுத்துப் போலேயந்தச் சிறுகும்பார் விளிம்புள்ளே முழுதும்பற்றி - வைதுபாரதிசயத்தைப்பச்சைவர்ண மால்போலேயிருக்குமது வாய்பேசாதே - கொய்துபாரடுக்கடுக்காய் சிவப்புமஞ்சள் கூர்மையுள்ளவெள்ளைகறுப் பஞ்சவர்ணம்-உய்துபார்பச்சைவர்ணமாகத் தோன்றும் வுற்பனமாய்க்கத்திகொண்டு வழித்திடாயே. 423

வழித்தகுருவிட்டுப்பார் நவலோகத்தில் மாற்றென்னதசமாற்று காணும்காணும் - பழித்தவர்கள்தலை தெறித்துப்போவாரப்பா பார்தனிலேவிதியற்றுக்கெதியுமற்று - முழித்திடுவார்கையகம்பா ரிவர்கள் சென்ம மூதேவியடைவள்திரு வினையாள்பக்கல் - கழித்தவரைமனம் பழிக்கலாகாதப்பா கவனிகட்குமனமடிவுவாராமற்பாரே. 424

சிறுகண்ணாகக்கட்டு

வாராமற்சிறுகண்ணாகத்தைவாங்கி வரையாகப்பொடியாக்கி கெந்திகூட்டி சோராமற்சட்டியிலே சிறுசின்னிச்சாற் சூட்டியேநாகத்தையதிலேவிட்டுப் - போராமலெரியிடவே சுத்தியாச்சுப் பிறகெடுத்துப் பண்ணிநெய்யிலுருக்கிசாய்க்க - நேராமலதின்பிறகு நாகத்தைதானும் நினைத்தபடிசட்டியிலே கறியுப்பிட்டு. 425

உப்பிட்டுநெடுவளைய வண்டத்தண்ணீர் ஊத்தியதில் நாகத்தைப் பதித்துவைத்து - அப்பிட்டுமேலுமுப்பு கொண்டுமூடி அறுபதுநாழிகை யெரிக்கக்கமலம்போலே - செப்பிட்டசிறுநாகங் கட்டிப்போச்சு சிவ சிவாரசவாதஞ் செய்யலாச்சு - ஒப்பிட்டசிறுநாகங்கட்டினாலே யொருகோடிரசவாதஞ் செய்திடீரே. 426

சவ்வீரக்கட்டு

வாதவென்னசவ்வீரக் கட்டைக்கேளு வளர்நாவல்பட்டைச்சாற் தனிலேநாழி - பூதமென்னபூதவல்லிச்சாறுநாழி புகழானநாகவல்லிச்சாறு நாழி - பேதமென்னபுங்கம்வேற்பால்நானாழி பேணியேபதின் மூன்றுபடிசாறொன்றயப் - பாதமென்னபாதத்தி லிட்டுக்கொண்டு பருவீரக்கட்டிபத்துப் பலமுந்தாக்கே. 427

தாக்கியேநாழியுப்பு பொதிந்துதாக்கி தழலெரிப்பாய்சாறுவந்து மட்டுமப்பா - போக்கியேயெடுத்துப்பார் கட்டிப்போச்சுப் போர்வீரன் சரக்கறுபத்துநாலும்-மூக்கிலேசாறுபிழிந்தாற்போற்கொல்லு மூர்க்கமுள்ளகுருவப்பாசெந்தூரித்தால் - ஆக்கியேதசமாற்று வேதையாச்சு அப்பனேவீரசெந்துரத்தைப்போடே. 428

பாடவேகட்டிவைத்தவீரகெண்டி பதனமாய்த்தாம்பூரச்சட்டிக் குள்ளே - நாடவேநாய்க்கடம் பொடித்துப்போட்டு நாய்ப்பாலுமுழக்கு விட்டுவதிலேவீரம் - சாட்டுவேனீர்வத்திப்பொரியும்பாரு சயிக்கிளையாள் முலைப்பாலுமுள்ளிச்சாறும்-கூடவேசடசடெனசுண்டவத்திச் சுருங்கையிலேமுருங்கைவேற்கொண்டுகிண்டே. 429

கிண்டிடவேவாயுமிநீர் சேரைகிண்டிப் பார்வீரன்விசையற்றுப் போச்சுக் - கண்டிடவேசெகசோதி யாரும்பாரு காசினியில்வீர செந்தூரம்பாலில் - கொண்டிடவேநரைதிரையு மாறிப்போச்சுக் கூற்றுவனுமொழிந்தார்சாவோயில்லை - உண்டிடவேபணவிடை காலத்திலொருநாளும் வியாதியில்லையுனக்குத்தானே. 430

உனக்கென்னவயித்தியமே வியாதிபாரு வுத்தமமாமதைவிட்டு வாதப்பார்க்க - எனக்கென்னபோச்சப்பா நவலோகத்தில் யெள்ளளவு முருகையிலே யிட்டிட்டால்தான் - கணக்கென்னவழக்கென்ன தசமாற்றாச்சு கைகண்டவீரசெந்தூரத்தாலே - மணக்கவேநீடுமடா மெய்யாய்ச் சொன்னேன் மச்சமுனிவாதந்தோராதுபாரே.. 431

தோராதுயிதற்கெல்லாம்வழலைசற்றே தொட்டால்தான் வேதைக்கு சுறுக்காமப்பா - வாறதுவாறாதுவருந்தாவிட்டால் வருந்தினால் காணுமடா வாதப்போக்குச் - சீறாகலட்சுமி கடாட்சம்பெற்ற செல்வருக்கு யிந்தமுறை திறந்துசொன்னேன் சாறாதுகலிவந்து வணுகுமுன்னே தாய்பதத்தைத் தொழுதிறைஞ்சிவரையிற்சாரே. 432

வரைதாண்டியாறுவழி கடக்கப்போறார் வாலையெழுத்தந்த முதலறியப்போறார் - உரைதாண்ட வெகுநாட்சென்றுரைக்கும்பாரு வுனக்குரைத்தவோரெழுத்தை யுண்மைதோன்றும்-விரைவாசம்நாசிநுனி சாம்பிராணி வீசுமென்றுநடனவொலிமறந்திடாதே - பரைதாண்டா யிதற்கெல்லா மூலமப்பா பராபரத்திலிருந்தமனோன் மணியாட்டாச்சே. 433

ஆட்டானவாட்டாச்சுப் பரநாதத்தா லாறுகடந்தனாதிமூடி யறியலாச்சுப் - பூட்டானமேல்வாசல் பூட்டுவிட்டுப் புருவமையந்திறந்து வெளிதோணலாச்சு - நாட்டார்கள் கூடவிட்டு நடனவோசை நயனத்தில் கண்டுதெரிசிக்கலாச்சு - வீட்டானவரையிட்டு வேதாந்தத்தை விளக்கேற்றிக்கண்டு தெரிசித்துப்பாரே. 434

கண்டுதெரிசிக்கவொருகுருவைக்கேளு காரணமும்பூரணமு மொன்றாய்நின்ற - பண்டுதெரிசித்தவண்ண மூலிதன்னைப் பருவேறாம் விழுதோண்டி யிருந்தபூவில் - உண்டுதெரிசிக்கு மேஷஞ்சிறந்தமாத முறையவனாருச்சிபெயர்ந் தொதுக்கும்வேளை - கொண்டுதெரிசிக்க அரிலக்கணத்தில் கூறாதிபாரமதிற் சென்றுகேளே. 435

சென்றுசதிராகவந்தச்செடியின் வேற்தங்கள் சென்றதிசைநாலினிலுங் குறைபடாமல் - மன்றுகளைக்கிள்ளியப்பா லெறிந்துபோட்டு மைந்தானாள் பொங்கலிட்டுவளமாய்வந்து - நின்றதெண்டநிட்டுவண்ணமூலிவேற்கள் நிறைவேறிக்குறைபடா தெல்லாம்வாங்கி-நன்றுபடதுண்டுதுண்டாய் நிழலில்வெட்டி யுலர்த்தியேநாற்பதுநாள் சென்றாலப்பால் 436

கெந்திவண்ண மூலிகெற்பம்

அப்பாலோர்புதுக்கலசந்தன்னிற்போடு யவரிடமாய்க் கெந்தியைந்து பலமுள்ளாக்கி - துப்பாலென்றடிக்கலசங் கீழேவைத்து தூரிலே

மேற்கலசந்தமரேயிட்டு - முப்பாலாம்வழலைபலங்கூடிற்றானால் மூர்த்திகுருவரசனை வணங்கினாற்போல் - இப்பாலாங்குழித்தயில மிறங்கும் பாரு யிரவியொளிநீலவர்ணமிருக்கும்பாரே. 437

இருக்கும்பார்கெந்திவண்ணத் தயிலங்கொண்டா விளமையா யென்றைக்குபிணிநோயன்றிச் - குருக்கும்பார்நரைமாறிகறுக்கும் ரோமம் கொண்டுமேவில்மதன் போல்கோலமாகி - உருக்குமடா மாதாதியோகமாகி யுன்பாலன்பால்மருவியூடல்சேயார் - பெருக்குமிளமைவடிவர் மென்றென்றைக்குப் பிரணவற்றைவளர்குமரன்போலாவாயே 438

ஆவாநீசிற்றின்பமதில்வீழாதே வதிகபேரின்பவழி தன்னைப்பற்றி வோவாய்நீயாறாறுங் கடந்துமுன்போல் மெய்ஞ்ஞானங்கண்டுவெளியேறில் விண்ணில்-பாவாய்நீகெவனமிட்டுப் பறையில்வந்தால் பதினெண் பேர்சாயுச்சியம்பாலிப்பார்பார் - சாவேதுயினியுனக்குப் பிறவியேது தவமுனிவனாயிருப்பாய்சபையிற்றானே. 439

தானென்றகெந்திவண்ண மூலிவேறின் வதின்தயிலத்தின்பெருமை தனைசாற்றக்கேளு - வானென்றவிண்ணேது மண்தானேது மலையேது கடலேதுமவுனமேது-நானென்றரசவாதமூதிபூதி நாளிலேயலைந்தமடா மட்டமேது - கோனென்றசற்குரு சுவாமிவந்து குடிகொண்டவென்ன குறைவினிமேல்த்தானே. 440

மேலான தயிலத்தை வெள்ளிசெம்பில் மேல்தடவியனல்காட்டப் பத்துமாற்று - மாலானகுருவாச்சு வெளியிடாதே மகத்தான கும்பமுனிபெருநூல்பாரு நூலானசட்டைமுனிஞானம்பாரு நுகருவாய் தேவாமிர்தமாகுமப்பா - நாலானவழியிதுதான்வரமற்றோற்கு கள்ளேதுகுடித்ததினால்வெறியுண்டாமே. 441

உண்டானமேருவுக்கு வடக்கேயுள்ள வுரைமுனிவர்மகாவுருவாய் வளர்ந்தபேருங்-கண்டாரேவாதமொடுஞானமெல்லாங் கார்க்கும்ப முனியுடையசீஷரப்பா-கொண்டாடியென்பாடல்வழியேவந்தார் குடதிசையுண்டானசித்தர் கோடாகோடி-பண்டானமேருவுக்குக்கீழ்ப் பாலுள்ள பரராசமாமுனியென் பாடல்மாற்கம். 442

மாற்கமடாமேருவுக்குத்தெற்கேயுள்ள மாமுனிவர்கொங்கணவர் மக்களாவோர் - தீற்கமுள்ளகாயாசவேடமிட்ட சித்தரிலேயென்பாடல் கண்டுதோய்ந்தார் - ஆற்கமுள்ளசித்தரதிலனேகமுண்டு வஷ்டகுலப் பருவதச்சாற் வணுகிவாழ்வார் - ஏற்கையுடன் சேற்கைவாசனை கண்டாலு மிலாவாசம்பெற்றாலும் ரசவாதந்தானே. 443

ரசவாதஞ்செய்பவனென்று நாட்டிலுள்ளே ரகசியமாய்மவுனியென்று பொய்யைச்சொல்லி - வசமாகஅவரவரேகட்டிப்போட்ட வாகடநூல் சாஸ்திரங் களெடுத்துக்காட்டிப் - பிசகாமலணுவோராய் வளர்த்துச்சேவி பேரின்பவெள்ளநிலை பெற்றேனென்று - கசவாளிமடையரப்பா யெற்றுவாளி கசடரேவருவார்கள் கண்டுதேறே. 444

தேறுவதுயென்பாடல் பெருநூலிந்தத் தீவளருமெண்ணூறும் பொதிகைமீதில்-ஏறிவருங்கும்பமுனி பெருநூலொன்று யியம்பினா ராயிரத்தியிருநூறாகும் - பேறுபெறும்படியிந்த மாற்கஞ்சேர்ந்த பெரியவர்கள் பொய்பேசாதிருப்பார்மேனி-நீறுபொடியுத்தளமாய் மெய்யிற்பூசி நிட்டையினிலிருந்துகுருநிலைகாணாரே. 445

குருநிலைகொண்டவரடிகள்வணங்கிகொண்டு கொடுப்பதற்குயிந்த யெண்ணூறந்தநூலும் - வரும்வழியாய்க்கிருகித்துக் கொள்வாயப்பா மலையளவுபொன் கொடுத்தாணாலும்பாரு - திருவளருமிந்தவிதி முறைநூல் ரெண்டும் சிக்கிலுங்கையில்வந்து சேருங்காலம் - பொருள் பெரிதென்றி ரியாதேகோடிசித்தும் பூரணமுங் காரணமுங் கைக்குள்ளாச்சே. 446

திருட்டுத்தனங்காண

கைக்குள்ளேயின்னமொரு கருவைக்கேளு காசினியில் களவாண்ட கள்ளன்றன்னை-மெய்க்குள்ளாய்ப்பிடிப்பதற்குவேளைமேனி வேரி ரண்டும்வெள்ளியிலே காப்புகட்டிச் - செய்க்குள்ளாய்ப் பிடுங்கிவந்து குளிசமாடிச் சிவன்மேனிசத்திமேனி தன்வேறாகப் பைய்க்குள்ளோய் சிவன் தங்கமேனிச்செம்பாய்ப் பண்ணியே தருவுருவைப்பரைக்கேளே. 447

கேளடாஅருண சூரியப்பிரகாசா கேசவரீங்கார ஓ-ஆம் மென்று நாளடாலட்சமுரு சேவித்துக்கொண்டு நல்லமணிகுளிசம் ரெண்டுயிருக்கும் போது - வேளடாவெளியிலை கருக்கியந்த மேனியிலைகரிக்கிரண்டு மிரம்பாய்வைத்துக் - கோளடாமேனிக்கு தேனைவிட்டுக் - குழப்பிக்கோ வேனைகோராவிநெய்யே. 448

நெய்விட்டுக்குழப்பினதாணுக்குப்போடு நேரானமேனிமையார் விழிக்குப்போடு - கைவிட்டுமணிக்குளிச மேனிபெண்ணாம் கண்வருக்கு வேளை வேற்குளிசங்கூட்டிப் - பொய்விட்டுத் திருடரெல்லாங்கூட்ட மிட்டுப் பூமியிலேயிருவர்முன்பு யிருக்கச்சொல்லித் - தைவிட்டுத் தறைமெழுகிச் சதுரமாகச் சாணகத்தால் கணபதிபுல் சாற்றுவாயே. 449

சாற்றியொருதேங்காயு மிலையடைக்காய் சாம்பிராணிதீபமிட்டு யொருத்தராகப் - போற்றிவந்துமணிக்குளிசந் தன்னைத்தொட்ட போதையிலேகால்பதறிபொறிகலங்கித் - தோற்றிடுமேயிவர்வத்தஞ் சுத்தியாகத் தானேபத்திரமாகப் பராசத்திப்பார் - மாற்குப்பார்வகைவகைக்கு பாவைபோலா மணிக்குளிசந்தன்னையே தொடச்சொல்வீரே. 450

தொடச்சொல்லிதொட்ட பேரவத்தஞ்சுத்தஞ் சோரமுண்டுமில்லை யவரக்பாகஞ்சொல்வார் - விடச்சொல்லிசபையிலே கள்வர்சற்றுமில்லாதே மிருந்துதென்றால் திருடிப்போன - விடச்சொல்லியங்க மடையாளஞ் சொல்லி வந்ததுவும்போனதுவும் வகையாயப்பா - குடச்சொல்லிமுறையற வேயுளவுகண்டு குற்றமற்றுப்போகாமல் வகையாய்த்தானே. 451

வகையாகனின்னவனின்னதேசம் வந்தவன்றானின்னமுத லெடுத்தானென்றுந் - துகையாகச்சகலதையுஞ் சொல்லுவார்கள் தோகை யவள்சிறுகன்னி சிறுவனாக - நகையாமல்குளிசமிட்டுத் திலதம்போட ராச்சியத்தில்களவுகன்னி மெல்லாஞ்சொல்லும் - இகையாகத்திருடரையும் பிடிக்கலாம்பார் யின்னமொரு வித்தையுண்டுயினிமேற்கேளே. 452

விடையிடைய

வித்தையென்னதோழத்தி விருந்தமாடு மேயயிலேமுதல்வாய்ப் புல்லருந்தும் பூட்டைப் - பத்திரமாய்ப்பிடுங்கியதை சமூலத்தோடே பட்டிவந்துதொழுக்கிடையி லடையும்போது - தத்தரமாய்க்கடைசி மாடதற்குயிந்தச் சமூலப்புல்லருந்தவிட்டுத் தனித்துக்கட்டிச் - சித்திர மாய்முன்போடுஞ் சாணம்வேறே செமித்தபின்கடைசிசாணம்வேறே. 453

வேறாகவுண்டையொன்றாய் திரட்டிரெண்டாய் வெவ்வேறுயாறியந்த முலர்த்திவெண்ணிர் நீறாக்கிதொழித்திருந்த வுண்டைநீற்றை நெடியோனை நெஞ்சில்வைத்து வாவாவென்று - நூறாக்கிசெவித்துவிடை மீதில்போட்டு நொடிக்கையிலேயந்தவிடை பசுவைக்கட்டுங் கூறாக்கித்தொழுவை விட்டுக்குதித்துமாடு குறிப்படியேவுன்பிறகே துடரும்பாரே. 454

துடந்தவிடைதொழுநோக்கிப் போகத்தானும் தொட்டகுறி கடைசிசரணாகநீற்றை - இடந்துவிடைமீதிலப்போஊந்த னெனவகைக்கி வழிகொண்டென்றாலும்-கடந்துனம்மை தப்பிவிட்டு கண்டுனின்ற காணிக்குபோகுமடாவிடையாவேணும்-உடந்தையது வேரேவித்தை வுறைக்குகிறேன் மகாசொக்குப்பொடியதனைச் செப்பக்கேளே. 455

சொக்குத்தூள்

பொடியென்னவழிப்போகும் போதுனம்மை பின்தொடரும் நாய்மண்டைதலைப்பிள்ளைக்குக்-கொடியாகபின்புவரும் கருவும்காட்டில் குளினெரிமண்டைஅறணைவிழி பேர்ப்பல்லி - யடியடியாயைந்து மருந்துலத்திதூளா யதினுடனேகோரக்கர் கருவூமத்து - இடிபொடிந்து தூளாக்கிவைத்துக்கொண்டு இப்பொடியையூமத்தன் சாற்றிலூட்டே. 456

ஊட்டியேநிழலுலர்த்தி வாசங்கட்டி யோரிடத்தில் பத்திரமாவைத்துக் கொண்டு - கூட்டியேபிறதேசம் போகும்போது குடுக்கையில் பொடி அடைத்துகொண்டுபோநீ - ஆட்டியேயுருமாற்றந் திலர்தம்போட்டு அந்தவூர்தனிலுனக்கு ஆறார்மேலே - நாட்டமோஇருந்துதென்றாலப் பொடியை யணுப்போல நல்கியேவப்புறம் போய்நடந்திடாயே 457

நடந்திடவேபின்தொடரு முறங்குவார்மேல் நம்பொடியைப் போட்டிடவேயுறங்குவார்பார் - துடர்ந்துமேவருவாடா தோகைதானும் சொன்ன படியெமதுவசம் சொக்குவாள்பார் - அடாந்துபார்வருவாற்கும் பொடியைப் போட வசந்துனிற்பார் போர்புரியமாட்டாமத்தான் - கிடந்து தான் முழிப்பாண்ட சொக்குவிக்குங் கிறுங்காமலிருப் பதற்குவயணங்கேளே.458

மின்துடரிபின்துடரி

உபாயமென்னமுன்துடரி யொருவேரப்பா வுதையாதிதுடங்கி யொருநாழிகைக்குள்-நியாயமென்னபின்துடரி யொருவேரப்பா நிசிதுடங்கி பதிநாறுகடிகைசெண்ணாவ-அபாயமுடன் வரும்குரிரெண்டும் வாங்கி யந்தந்தவேளையிலேபுறம்பார் வைத்துக் கபாயமென்னதன்னாலே இருந்திடத்தில் சுத்திகொண்டி சுரண்டுயதைபதனம்பண்ணே. 459

பண்ணியேகரிசோற்றில் தாக்கிப்பாரு பாலர்முதல்பாவைமுதல் துடருவார்பார் - நண்ணியேமுன்பிற்சேர்தகத்தைப்பாரு நமக்கெனபின் துடரியாணாளுக்கு - எண்ணியேபின்துடரிபெண்ணாளுக்கு ஈடுரெண்டு மிது பலிக்குமுட்டும்பாரு - மண்ணிலேயிதுயீடு வலுக்கும் பாரு மானிடர்க்குசொல்லாத வந்ததென்னோ. 460

மோடிதெய்வமந்திரம்

வந்ததிலேயின்னமொன்று வுபாயங்கேளு மங்கையரேநிசிவேளை பதினாருக்குள் - தந்திரமாய்மழுரிமழை பொழியச்சொல்லி தான்வந்து வைத்திடுவாய்பின்துடரிக்கு-மந்தரமாய்முன்துடரி அந்தஆளை வருகடிகைபொன்றுக்கு ள்ளதையும் வாங்கி இந்திரியம் தனைச்சேரு மாரிமாரி இதுதாண்டாயிருவர் வெருப்பானகைக்கே. 461

வெறுப்பானமோடிவித்தைசொல்லக்கேளு வெகுமோடிவுண்டதிலே சிறிதுமோடி - யுறுப்பானலலிமோடி மதிமோடிக்கி வுற்றகருவிடைய மினியுரைக்கிறேன்கேள் - கறுப்பானதேவதைகளையன்காளி கன்னி சக்கிதேவிகுட்டிசாத்திகாத்தி - மறுப்படாவீரன் பேறரசன்மாடன் வைரவன் காட்டேரி மகாதெய்வம்பாரே. 462

லபிமந்திரம்

பாரடாலபிக்குமந்திரம் பகரக்கேளு படபடெனலபிமாறி பாபாலாபா சேரடா அந்திரதந்திரம் கலாடா ஸ்திரீ யீறியூமாங்காரகாளகண்டா - போரடா லபிக்குமர்தமைரத்தமெய்யா பரிவானமந்திரமன்றி யலையங்கள் - சீரடாமுகடுதம்பம்மீரோபோசீறிகல் இவல்மகம்மதுந் தூரிகுலல்லாலபிக்கே.

மதிமந்திரம்

லபிக்குலட்சமுருச்சேவிபிரகாசிப்பார் லலியமந்திரமாற்கமாய் வருவார் வேண - அபிஷேகமானதமாய் நினைத்தமுத்தி யஞ்சலிப்பாய் லபிசத்தியாகாசத்தில் - செலிக்காலஞ்செய் அனுமந்தபதிதேவர்க்குச் செப்பு குரோம்புராபுராலென்றகத்தினுள்ளே - செலிக்க அறிரீங்கார அனுமரும் ரிஷியார் சக்கராயுதாவா ஆண்பெண்ணோற்கு. 464

என்றேத்தவனு மந்தன்சித்தியாச்சி யெடுத்ததொழில் செய்துசாதிக்கச் செய்வான் - குன்றேத்துயெதிறேத்து கோடிவித்தை பொருமுடிகாரளமுடி கூட்டுவிப்பான் - நின்றேத்தி கருப்பனுக்கு அ பூமென்று நிலக்கையிலேறீங்காற காளகண்டான - ஒன்றேத்து ஷ ஷ ஸ ரா யேசிபந்து வோங்காரங் தீங்குரோம் றா றா வோதே. 465

கறுப்பண்ணன் அய்யன்பிடாரி

ஒதவே அய்யனுக்கு விஞ்சைகேளு ஓம்கணபதி மகாசாத்தவீரி நீதவேஞீயாளிவாகனரூபா நிதிதேவபூரணபுட்கலைவிசாநீதி-வீதவே கோடாகோடி யானைசேனை விளம்பாரிபதிதேவாவாவா - சீதவேகணனாத ஆ ஆ யீடுநீல நயோமசிவமென்று கிளத்தியோதே. 466

கிளத்தவேமகாசாத்தன் சித்தியாச்சு கெம்பீரரணகாளி ஆ றீங்காளி உளத்தவேசிங்கவாகனரூபி வோங்காளி ஆங்காளியுத்தகாளி னிளத்தவேஆதிபந்துமோகிபந்து யெரிபந்து கவுரிபந்து நீலிநீலி களத்தவேதிரிபோன ரீங்காராரூபி தேவிகணமோடிசத்திவாடிபந்தே. 467

காளிசக்கதேவி

பந்துசக்கதேவிகன்னி ர ர ர ர பதுமதல்லிகிம்புவராய் ர ர ர ர சந்துபுட்டி தேவிமகாமாயி ர ர நல்லிமயேஸ்பதாவுதாவு ர ர ர ர - கிந்தமதிகன்னி மகாகோபி ர ர ர ர கிரீங்காரி சிரிங்காரி இராடசா - தி - வந்துமவுணாசத்தி ர ர ர ர வா வா மாதல்லிமோடி பரிபூரணிக்கே. 468

குட்டிச்சாத்தி.

பூரணிகாளிமந்திரமுன்னேதாக்கி புரவிக்கிதேவிமந்திரம் பின்னேதாக்கி - வாரணிக்குட்டிச்சாத்தி யுரைக்கிறோங்கேள் மடமடபட வா வா லா லா - கோமளிவா குறளிவமளிகாளி கோலமுறுகுறும்பாவைநீ கோ கோ கூ கூ - பேரணியில் நிறுத்திவை ரங் ரங்கென்று பிறகுட்டி சாத்திதொழில்பார்த்திடாயே. 469

பார்த்திடவேகார்த்திமகாதேவிவீரி பராக்கிரமதிடசாலிசிவறாங்காரி - நேர்த்திரவீரியக்கன்னியாந்தீதேவி நினைத்தபடி பம பம கம கம - சூத்திரதார்கயதுபம்பரம் சுழட்டினாற்போல் துக்காயிமகாய்சூலிசூரி - மாத்திரையேகயரதனைக் குத்தியாடி மகாகடினமுள்ளவித்தை செலுத்தவாயே. 470

வீரபத்திரன்

செலுத்தியேசெயவீரபத்திரகாலா சீதேககனமகாவேள்வி வீரா வலுத்தியபரப்பிரம மகாதேவற்கு வீரபத்திரதுட்டதே வதையோ டொக்க - சலுத்தியவாங்காரதாண்டவராயா சமஸ்தபெலாண்வீரபத்திர பாந்து - கொலு தகுதிமோடிக்குப்பண்டெடுத்த கோலம் காலப்பாலமிட்டு ர ர ர.471

அரசன்துதி

இராவென்றவீரனுக்குலட்சமோது லகுவிலே மாடிக்கு ரட்சிப்பான்பார் - புராவென்றுவரசனுக்கு மகாமந்திரதியானம் பூட்டுகிரோம் றிசை கன்னிபுத்திராயா - நிராவங்கிகாலாந்தகா ராட்சதசங்காரா நிதிவிருட்சகாழியகற்பதேகா - பராவென்றுவரசர்பட்சசத்தரூபி பரா பரியிமமோடி சபைபாற்கவாவே. 472

மாடன்

பார்க்கவாவென்றுலட்சமரசருக்குப் பரிந்துவிடுமாடனிட மந்திரங்கள் கார்க்கவாஓங்காள கண்டமாடா காலயிம்ராட்சதப்பேய்களை வா வா வா

- ஏர்க்-யிதுரெண்டுமோடி யென்றிடாதே யீஸ்பராமகா பரசுபாணிதேவா - சேர்க்கவேசுடலையாடி வா வா வா சிரிமுகாடாங்காராயென்றேலட்சம்.473

லட்சமுருமாடனுக்கு சித்தியாச்சு லாடபயிரவதியானம் லாங்கி லாங்கி பட்சியொடுக்கிப்பார்வை நிருவாணிதேவ பரிபந்துபுரிந்து பாணிபந்து - எட்சதிதெட்சணிதண்டகாமான்யியந்திர பட்சணிக்குப் பருவாயிருந்தமூரத் - திட்சைக்கிமுகயிலைபொறிவாயலாகாவலவிட மாலைவடகீழ்முலைவீடே.

காட்டேரி

வீடானவடுகன்காற்மேனிவிஞ்சை விளம்பையிலேவடுகன்வந்து நிர்த்தஞ்செய்வான் - காடேரிரத்தசாமூண்டிகாளி கங்காளி பகவதிகாடூங்கிகாலி மாடேரிவந்துன்சுடலைமீதில் மரித்தபிணமீதேறி வாரியுண்டும் - காடேரியம்மையம்மை யிம்மோடிக்கு கடுகவந்துபந்துபந்து கவிசெய்வாயே.. 475

சங்கிலியன்

செய்யவொருகாட்டேரிநூற்றெட்டோது தீப்பிடித்துவேகுமடா மோடியெல்லாம் - பையவருகிங்கிலியன் மோடிமந்திரம் பகருவேன் மகாமேருகிரியைபெற்று - வையகமோர்கையில்வைத்துக் கடலைவாரி வாய்யவழியேவிட்டிடவே யாதிசேடன் - மெய்யணிவீரகாள கண்டவிடமேகூடி மேற்கடலோர்காலகலவொருபால் கீழ்பால் - உய்யவருபூதப்பிரேதங்களாட ஓம்காளகிங்கிசயா வென்றுபோத்தே 476

மொட்டையன்

போத்துவதுமொட்டையன் மந்திரத்தைக்கேளு புகலரிசிவயே வல்பணிவிடையேசெய்யும் - பாத்திபனேசொரூப சிவயோகவேட பராக்கிரமதீட்சாலி வாயிவாரி - நேத்தியகபாலிபதிதேவாயே மந்திரதந்திர பரிதேவாவாவா-சோத்தியமொட்டையசொரூபா துதிமேவுலட்சமுரு சொல்லுவாயே. 477

காலன்

சொல்லுவாய்காலமந்திர முறைக்கக்கேளு தூதபரிவந்த உயிர்துரிவுகாரா - வல்லவர்கரிமேதிவாகநால்வர் வாயாசசூலத்தர் தேந்துபாய்ந்து • வெல்லவர்றீங்காரிசங்காரிக்கும் வெட்பகையாய் நோய்ப்படையாய்வீவுவீவு - அல்லுவர்மேனிமிறுகாலகண்ட அரிகண்டமேவுபுரி நூறுநூறே. 478

நமன்

நூரானயெமதூதாள்வாதைரூபா னிருபசிரோட்டுமராயா நிர்தூளாவ்ாய் - பாரானபுவிவானமேகமான பண்டிதாபுரிமேனிரூபிவாவி-ஏரானமால்விடையாயெல்லக்காரா இராட்சதசங்காராயேகியேகி - வாரானசீவசரா சரங்களெல்லாம் வாதைபிரிபடிக்கிவலு யெமனாவென்னே.

நாவேரிநமன்மந்திரம்கடாட்சிக்கப்பா ந ங கிலிகிங்கிலிபங்கி-பாதாகாவெரிகடலாடிக்கையிலாசத்தில் கண்டுபணிவிடையேவல் கடாட்சிக்கும்பார் - பூவேரிநமனாவாய் யவர்க்குப்பாணி புரியட்டப் பொருந்தாதபுரோவிரோவி - சிரவேரிபிணமாலைசூடினின்று தாண்டவம் செய்சங்கராவென்றுதானே. 480

என்றுபலதேவதைக்கி யேகமந்திரம் இராங்குசபச்சணி ரூபிதேவி ர ர ர ர - குன்றுகணபதிகந்தாவீரபத்திர கோணகெந்திரபாலா சமஸ்த்தமும்பொய் - னின்றுபுரி ஆங்காரசத்தினேய நிர்வாணி அரச சங்காராயென்று - மன்றில்நடம்புரிதேவாயிம்மொடிக்கு வந்துகொடு மென்றுவாயால்வாழ்த்தே. 481

• பொல்லாதசல்லியக்கயறு

வாழ்த்தியிந்தநவகோணமஷ்டகோண மகாமேராம்நாற்பத்தி முக்கோணங்கள் - தாளத்திரையம்பண்ணியாதரித்துப்பூசை தான் கொடுத்துக்கனிபலகாரத்தோடப்பம் - தூளத்திருவெண்ணீறதனால் கருவும் பூசித் தொடுசீலைத்திரிப்புகைத்து தூமாதேவி - வீளத்த மதுபானத்தை சக்கதேவி வெட்பகையா மோடிக்குவிளையாட்டெல்லாம். 482

விளையாடல் மோடிக்குச் சொல்லக்கேளு வேறேவிடந்தீஞ்சாலும் விலக்குச்சீலை - இளையாடுநாய்த்தலையோ டெச்சில்பாக்கு இணங்காத தாள்சிரசனுக்கு யிடுகாட்டத்தி - வளையாக்கள்ளிகறுத்தமணி நூல்பீத்த வாறுகோல்பளஞ்சுளகுவட்டக்கோட்டைத் - துளையாய்ப்பஞ்சந்த நூலந்தச் சூவைநூல் சுத்தியந்தமாலைக்கயறுந்தானே. 483

கயறுகுத்தியாடுகிறவ ருதிரமூட்டிக் கற்றாழஞ்சோறுடனே பேயத்திப்பால் - பேய்தூட்டுப்பேய்முகட்டைக்காக்கைக்கூடும் பிறாவிற்குப் பண்ணிபிட்டை பேய்நாய்வாலும் - அயரூட்டும்பின்னங்கால் சடையுங்கூட்டி அந்தநரம்பந்தத்தி வெட்டிச்சீலை - சயரூட்டுங்கறுத்த வூமத்தம் வித்துக் கண்டுடனேகொட்டி கொண்டான்தலையோடாமே.

ஆமையிலேகாராமை கிலுகிலுப்பை அட்டையிலேமரவட்டைக் கறுத்தவட்டை - ஊமையிலேபெண்ணூமை கையுப்போடு வூரடிமண்

காலடி மண்வுடைவேற்சீந்தி - சீமையிலேயில்லாத பாசிக்கோட்டை செம்பருத்திக்கற்றேரைப் பச்சையோணான் - மாமி மருமகளுருமைக் கூடமைத்த மரப்பாவைகுழந்தை விளையர்டும் பிள்ளை. 485

ஆடாததோடைவேற்தீண்டரப்பாளை அழுகண்ணிதொழுகண்ணிச் சுழத்துரும்பு - பாடாதநாவார்த்தை மின்வெட்டாறும் பரிந்தின் கூடரிப்பல்லும்பாஷாணந்துத்தம் - தேடாததழல்துரும்பும் கமுகன் கட்டை - செவ்வாலிவேறுடனே தீப்பாய்ஞ்சகன்னி - கூடாதமுசுறுமுட்டைவளி மேற்பல்லி கூகைநிணமாந்தைநிணம் குருகுப்பித்தே. 486

பித்தென்றதெல்லாமா மிவ்வாறெல்லாம் பேர்பேரால் சேகரித்துக் கரிக்குச்சுட்டு - மத்தென்றதலையோட்டில்மத்தஞ்சாற்றை மண்டையிலே தடவியந்த மருந்தெல்லாந்தான் - பத்தென்றுஅமாபக்கங் கடைசிநாளும் பகுசனிரேவதிநாளும்பார்த்துக்கொண்டு - சித்தென்றுமை வழித்துச் சிறிதுவைத்துச் சிறுதுமருந்தைத்தூளாய் வைத்துக்கொள்ளே. 487

தொண்டுபுரிபாம்பழைக்கப்பெண்ணழைக்க தோராதமிறுகங்கள் தனையழைக்க - கண்டுபுரிகனியழைக்கக்காயழைக்கக் காவேரியாதழைக்கத் திரையழைக்க - உண்டுபண்ணி வைத்ததொருமருந்தேயீவார் யுலகத்தில் ஸ்தம்பணங்கள் யாருஞ்செய்யார்ப் - பண்டிதமுமந்திரமும் பலிதமாகப் பாங்கானமோடி வித்தைப்பகருவாரே. 653

பகருவார்மோடியிலேயனந்தமுண்டு பந்தாடல் செப்படுவித்தை களுஞ் சொல்வார் - நுகருவாரமுர்தமின்ன திருக்குதென்று நோக்கு வித்தை நொடிவுத்தை நூலுஞ்சொல்வார் - புகருவார் கூடுவிட்டுக் கூடுபாயப் பொன்பணங்கானதெல்லாம் பூட்டுவார்பார் - அகருவார் கண்கட்டு திசைகட்டிடுவார் அம்பலத்தில் சபைக்கட்டு வருளுவாரே. 654

தொழுகண்ணி

அருளுவாராசாங்கமையுஞ்சொல்வார் அப்பனேவுடல்கட்டுஞ் சுருளுவார்விந்துகட்டும் நாதங்கட்டும் சூதமுடன் கெந்தகமுஞ் சொல்வார் மருளுவார்மச்சமுனிமகனேயென்று மகத்தானவித்தையெல்லாம் வழங்கு வார்பார்- பொருள்தாங்கநினையார்கள் பூரணமுங் காரணமும்புகலுவாரே.

புகலவேயந்திசந்தியுச்சிமூன்றும் பொறுந்துமிலைமூலியொன்று கேளு-அகலவேதொழுகண்ணியதுதான்ப்பா ஆதித்தன்வாரம் பூசநாளும் - சகலபேர்வசியென்றுகாப்புக்கட்டிச் சந்திரனில் கொடுத்து தனுசுலக்க - மிகலவேமுச்சமதுபார்த்துவாங்கி மியறுபொற்ற கட்டிலடக்கிடாயே. 656

அரவுவாட்டிப்பச்சிலை

அடக்கிடவேமணியிருக்கமாதரெல்லா மடிதொழுவார்படிமன்ன முன்னேசென்றால் - கிடக்கவுபசரிப்பாருமதன்வாக்காலே கேட்டதெல்லாந் தருவாண்டா சற்பங்கண்டால் படக்கவேபடமெடுக்கமாட்டாதப்பா பயப்படும்பார்விஷமிறங்கு மணியைக்கண்டால் - நடக்கவேமாட்டாது சற்பமெல்லாம் நாய்போலேகிடக்கும்பாரரவுதானே. 657

அறவாட்டிப்பச்சிலையென்றதற்குப்பேரா மப்பனேயதுமூலஞ் சிறியாநங்கை - உறவாட்டும்பாம்புகண்டா லொடுங்கிச்சாகு மொருநாறும்விஷங் கடித்துச்சாவாரில்லை - திறவாட்டியவ்வேறைத் திருவோணத்தில் சென்று நூல்கட்டும்வேரத்தனையும்வாங்கி - முறவாட்டி மயிர்மேல்வைத்துப்போடு முட்டுமடா அரவுகடி கொண்டபேற்கே. 658

கொண்டவிடங்கடித்தவரைத்தண்ணீர்விட்டுக் குளுப்பாட்டிக் கட்டையின் மேல்வைத்திட்டாலுங் - கண்டவிடங்கொல்லியிந்தச் சிறியாநங்கைக் கருவேறைச்சிரசிலிருந் திழுத்துக்கீழே மண்டைவிஷந்தீர நசிவசியென்றோது வம பம டம யென்றுவாயினாலே - கிண்டவிஷமி றங்கிவிழித் திருப்பான்பாரு கெறுடனுடவிஷமனைத்துங் கேட்கும் பாரே.

கேட்கும்பாரவுரியொ ருநீலிவேறாய்க் கேட்டிருப்போமட்டமி நாள்காப்புகட்டி - ஆட்டும்பார்நவமியிலே பிடுங்கிவந்து அனிக்குளிசஞ் செய்துவந்த அறையிற்கட்ட - வீட்டும்பார் திடீரென்று விந்துறாது மெல்லியற்குசுகமுண்டாம்நீலிநீலி - தாட்டும்பார்பின்னறையில் கிடந்தவேறைத் தள்ளிவிடுமுன்னறையிற் றளரும்பாரே. 660

தளரும்பார்சூரிவேர் முக்காவேளை தனக்குமுவீலைகளும்------ றும்பேராம் - அளக்கும்பாரட்டமிக்குப் பொழுதுதானும் ----------ம் வேளையிலேகாப்புக்கட்டி - வளரும்பார்நவமியிலேபிடிங்கி-----------ணிக் குளிசஞ்செய்து வந்து அறையிற்கட்ட உளரும்பார்சுவ-----வெழாது ஒறங்கிப்போங்கண்டாலு முன்னைத்தானே. 661

நத்தைச்சூரி

உன்னைத்தான்வெட்டிவந்தபோக்குத்தானுமொருவனைவெட்டா மல் வேறைக்கேளுதன்னைத்தான் தொலியாதசூரிவேறை முன்போல் பெலி கொடுத்துச் சாவல்மூட்டிப் பின்னைத்தார் குழம்பாக்கி வைத்துக் கொண்டு பெலிகொடுக்கு மிடங்களிலே மிதித்துக்கொள்ள பொன்னைத் தாணருவித்தாலும்வெட்டறாது பூவைத்தான்சொரிந்தாலும் வெட்டராதே.

வேளை

வெட்டறாமூலியொன்று நத்தைச்சூரி வேளையுடவிபரத்தைவிரித்துக் கேளு - நொட்டறாய்தம்பனங்க ளக்கினிக்குச்சூட்டிப்பார்கைதடவி மழுவையேந்த - கிட்டறாக்காலமதுயிறையும்பாரு கேட்டிருந்து பிடிங்கிக்கோ வேளைபார்த்துச் - சுட்டறாக்கைதடவி மழுவையேந்தி குடாறிக்குளிர்ந்திருக்கும்வேளைதானே. 663

வேளையிலே ஆடுதோடாமூலிவேறை விடம்பிடிக்கிமதிநேரம் வேறைவாங்கி - நாளையிலேதாம்பூரச்சீலையிலேவைத்து நாட்டவர்கள் கூட்டமிட்டசபையினூடே - கோளையென்னபுதைத்துவிடு அவர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்கருவிருக்கி வெளும்பொட்டாது - சாளையிலே போகார்களொருநாளுந்தான் சந்தியிலேயிருப்பார்ளெடுக்கப்போவார். 664

மேனி

எடுத்தெரிந்தால்போவார்கள்மேனிவேரை எல்லையிலேமுளைத்த செடிபிரித்துவந்து - தொடுத்துமதைப்பொங்கலிட்டுச்சாவல்வெட்டித் தோத்தரித்துசூரியகிராணவேளை .- விடுத்தருவர்மணிக்குளிசஞ் செய்தபோது வேசையர்வீட்டிறப்பில்வைக்கவேசைவீட்டில் - எடுத்துக்கால் வைக்கறியாரொருத்தர்தானு மிருந்தாலுவிகாரமதுயில்லைதானே. 665

தொட்டால்வாடி

தானாகத்தொட்டாக்கால்வாடிவேரை சதுர்த்தசியில்பிடிங்கிவந்து திரட்டிச்சிலை - பூனாகவைத்துருட்டிசுருட்டிக்கொண்டு வுற்றதிருநீற்றை யொருயெறுமைமீதில் - மானாகப்பேடையிலே தொடர்ந்துதானால் வருமாதுக்கும் போட்டுவிடுவாள்மாது - தேனாகப்புணர்ந்தவுடன் சிறுநீர்வாங்கித் தெறிமுகத்திலவள்கடந்து செல்லுவாளே. 666

செல்லுவாள்நிலவாகைசிகிணிசிக்குள் செஞ்சாவல்பொலிகொடுத்துச் சாறுவாங்கி - அல்லுவார்சாவல்ரெத்தமதிலே பூட்டி ஆடையிலே வைத்துருட்டியதைதமையாக்கிய - புல்லுவாரிடத்திலிட்டுப் புணர்வீரானால் போகாளேயுன்னைவிட்டுயொருவர்மேலே - வெல்லுவாளானாலுமேவாள் பாரு சேயிழைக்குகாமமதுயெழும்பாதுபாரே. 657

வீழி

எழும்பாதுவீழிவேற்காப்புகட்டி யிரவியிலேபெலிகொடுத்துமணி நூல்கட்டு - தளும்பாதுதிபனமுமாகுமப்பாரு சத்திபிரியாதுதெய்வதானஞ் சேர்க்கக் - துளும்பாதுவொருவருடந்தடத்தில் வைக்கச் சுருச்சுப் போமானுடம் பூஓதம்வீங்கும் - குளம்பாதுவீழியிடகுளிசங்கட்ட கொட்டாது தேட்குளவிகாலிதானே. 668

கருங்காலி

காலிவேற்நீரயறுக்குக் காப்புகட்டி கருங்காளிகோயிலிலே புதைத்துப்போட்டால் - கேலியாய்பூசைபண்ணும் பூசாரிக்கு கிஷ்ணவிழி ரெண்டுகண்ணுந் தெரியாமற்றான் - சோலியாய்த்தடவியவன் தட்டுண்டோதான் தோற்றாமல் கூக்கிறலிட்டிடுவானந்த - காலிவே வேறென்றகருங்காலிவேரைக் களையவேகண்ணிரண்டுந் தெரியும்பாரே.

பேய்முசுட்டை

தெரியவேபேய்முசுட்டைவேறைத்தானுந் திங்களிலேகாப்புகட்டி செவ்வாய்வாங்கி - ஆரியேவெள்ளிசெம்பிற் குளிசமாக்கி ஆடுகிறகோமரக்களாடும்போது - மீறியேபெருவிரலிட்டு முக்கிக்கொண்டு மிதிக்கையிலேறங்கு தங்கு நங்கென்பூணு ஓரியேகூப்பிட்டாற் போலேகூறும் ஒரு வருக்கும்கோமாறம் வந்தாடார்பாரே. 670

தகரை

ஆடவேதகரைவேற் யமாவாசைக்கு அப்பனேகாப்பிட்டுப் பவரணைக்குத்- தேடவேபிடிங்கிவந்து வெள்ளாட்டுக்கொம்புடசெலுத்தி யொரு தேறையும்விட்டடைத்துத்தானும்-பாடவேகிடையச்சுத்தி புதைத்துப் போடு படுக்கையை விட்டெழும்பாது பத்தினாலுஞ் சாடவேகோனார் வந்தடியிலவீழ்ந்தால் தடுத்தகொம்பையெடுத்துவிட்டு வாயந்தானே. 671

உடைவேற்

வாயமென்னவுடைவேற்குக் காப்புகட்டி மந்தனிலேபிடிங்கிவந்து மணியதாக்கி- ஞாயமென்னவேளானார்சுண்ணம்போடும் நவப்பாண்டத்தடியிடவே வுடையும்பாண்டம்- நேயமுடன் குசவன்வந்துகாலில்வீழ்ந்து நினைத்தபடி தருவனென்றால்வேரைத்தானும் - வாயமுடன்வாங்கிவிடு பண்டுபோலே மனைவாண்டாபாண்டங்கள் வாய்க்கும்பாரே. 672

நெரிஞ்சி

வாய்கரும்பார்நெரிஞ்சிவேற்பாட்டிமிக்கு மஞ்சளதுகாப்பிட்டுமணிபோலாக்கித் - தேய்கரும்பார்வுறுவராக கறுங்கன்னார்வீட்டில் சென்றிரப்பில் சொறுகிநரசிற்பமெல்லாம்-மாய்க்கும்பார்நெறுஞ்சுடையும் உறுவாகாது வணங்கினால் முன்போலேவேரைவாங்கு - தீய்க்கும் பாறுறு வுண்டாம் வார்ப்பார்கன்னார் செயமாகயின்னமொறு வயணம்கேளே. 673

எருக்கு

ஒருவயணமெருக்கிலைக்குக் காப்புகட்டி வுடையவற்குப் பொங்கலிட்டு வேறைவெட்டி - திருவயனமந்தப்பால் புரம்பாய்வாங்கித் திரும்பவிட்டு வேறுலர்த்திச் சுட்டிநீறாப் - கருவயனமப்பாலே வந்தநீற்றில் கொடுத்துலர்த்திப்பொடிபோலே வைத்துக்கொண்டால் - பெருவிரியன் கடித்தாலுஞ்சிருநீருட்டப் பேசாமலதுவிரியன் விடங்களேதே 674

நாயுருவி

ஏதெனவேநாய்க்கோட்டான் நாயுருவிதானும் யிதனுடனே நாய்க்கட்ட மெல்லாஞ்சேர்த்துப் - பூதமையாய் சட்டியிலேகருக்கிக்கொண்டு

பூவையற்கும்புருஷுகுக்குஞ் சொரணந்தானும் - வாதுடனேகடித்து வந்தால் கடிவாய்த்தம்பைத் தழுத்திக் சுட்டமையைப் பூசிப்போடு தீதுவார்க் கடிதீருஞ்செணத்திற்றாலும் தேள்க்கடியுமநாய்க்கடியுந் தீருந்தானே. 675

எட்டி

தீருமேயெட்டிமரத்தடியிற்சென்று செவ்வாய்க்குப்பொங்கலிட்டுப் பூசைபண்ணி - ஆருமேயந்தவேற்கட்டைவாங்கி அதிலேயொருமரப் பாவையாணுமாகப் - பாருமேபெண்பாவையொன்றுசெய்து பத்திரமாய் வைத்திருக்கப் படிஙனங்கேளு - கூருமேயவ்வேரில் பலகையெட்டு கொண்டுவா ஒவ்வொன்று சாணீலத்தே. 676

நீளமிட்டப்படியேதானகலங்கூட்டி நிறுத்திவைத்துசெப்பிட்டு பண்ணிக்கொள்ளு- ஆளமிட்டுமுளையதான்பதினாறப்பாஅது தானுஞ் சாணீளம் செருக்கிக்கொண்டு-பாளமிட்டகருநாலும் பண்ணிக்கொண்டு பாவைமுளைசெப்புடனே பலகையெட்டு - வேளமிட்டகாஞ் சூரை விளாறுகம்புவிறுதடமாய்பிரம்புபோல் வைத்துக்கொள்ளே. 677

கொள்ளவேபாவைரெண்டு சிவசத்திக்குக் கோவில் போலால்ய மிட்டதினுள்ளேகேள் - வள்ளவேதிசையெட்டுபலகைவைத்து வாகான கோணமெல்லா - முளைகடாவி - உள்ளேயேசெப்பெட்டுப் பாவைமுன்னே ஓங்காரமிட்டு வைத்துக்கழுத்தானாலும் - விள்ளவேநாள்வாசல் நாட்டிப்போடு விளாரென்றபிரம்புக்கு வெள்ளிகட்டே. 678

கட்டியேபத்திரமாய்ப் பாவைமுன்னே கணையானஅச்சரமாய் வைத்துப்போடு - எட்டியாம் பலகைதனில் ஒன்றுநாக்கோ ணிரண்டாம் பலகையிலே பிறகோணிட்டு - வட்டமாயொருபலகைதன்னிற்போடு மறுத்து மொருபலகையிலே முக்கோணிட்டு - அட்டகோணங்களொரு ப்லகைபோட்டு அதுவன்றியொன்றினிலே கோணமாறே. 679

கோணாமலொருபலகையைந்துகோணம்குணமாகவொருபலகை நவகோணங்கள் - நாணாமலநாலினிலே நமசிவாயம் நலமானரெண்டினிலே மகாரம்போடு - வீணாமோவட்டத்தலகாரம்போடு மேவுமுக்கோணத்திற் சிகாரம்போடு - ஆணாமலாறினிலேவகாரம்போடு அட்டகோண அரிஓம் நமசிவாயவென்றே. 680

என்றசிவகோணத்தில் நமசிவாய மியல்வானநவகோணம்றீங்காரங் கூட்டி - வென்றஸ்திரிங்கார ஓம்பிரணவமுங்கூட்டி - மேவிவிடுநம சிவயவெற்றியாச்சு - நன்றானாயிந்திரனில்நாற்கோணத்தை நலமாக வக்கினியில்பிறகோணத்தைச் - சென்றடவர்தென்றிசையில் முக்கோணத்தைச் செயமானநிறுதியிலேகோணமாறே. 681

ஆருடனேமாறிவட்ட மிட்டுக்கொண்டு அதனடுத்தவாயுவிலே பஞ்சகோணங் - கூருடனேருத்திரசனிலட்டகோணம் குணமானயீசனிலே நவகோணங்கள் - பேருடனே யிதழ்நாலுகுலமுமெட்டுப் பிரமனிட வீட்டுக்குப்பிறகுகேளு - வீருடனேமாலுக்குயிதழேழாயெட்டு வீரற்குலமிரண்டிட்டு வீதிவாயே. 682

வீதிவாவக்கினிக்குயிதழ் பன்னிரண்டு மேற்குலமூன்றிட்டி லாறிற்கேளு - ஆதியாயிதழ்பதினாறிட்டுக்கொண்டு அறுகுலமிட்டு மேல் வட்டமிட்டு - சோதியாம்வட்டத்துக் கிதழிரண்டிட்டு குலமொன்று உச்சியிலேசுழிபோலிட்டு - நிதிபஞ்சகோணமதுகுலமைந்து நினைவாக யிதழைந்துமிட்டுதானே 683

இட்டுக்கோயெட்டுக்குச்சூலமெட்டு யிதழெட்டுந்திட்டமாய் யிட்டுப்பாரு - கட்டுக்கோநவகோணம் அந்தவீதங்கண்டெழுதுநவகுலம் நவப்பூபோட்டு - பெட்டுக்கோகோணமெல்லாம் வட்டமிட்டுப் பார்த்துக் கோவெளிக்கு வட்டமில்லைபாரு - திட்டுத்தான் திடலானவட்டத்திற்கு செப்புவேன்யகாரமுனைகீழ்நோக்காவே. 684

நோக்கியிந்தயெட்டுக்கு மாந்தரீயம் நுவலுவேன் சிவசத்திப் பாதுங்காப்பு - வீக்கியிந்த வேதாந்தம் படித்துக்காட்டும் மேதினியில் மச்ச முனிகுருவேகாப்பு - வாக்கில்நின்றயெடுத்ததொழில் சித்தித்தாட மாதவருமுனிவர்களும்வானோர் காப்பு - சாய்க்கிந்தபஞ்சமந்திரத்தைக் கொண்டு சகல அஷ்டகற்மமுறைசாற்றுவோமே. 685

சாற்றுவோம்பிரமனுக்குநமசிவாயாதாக்கடா லட்சமுருத்தானே யோதி- ஏற்றுவோம்விஷ்ணுவுக்கும்நயவசியமென்று யேத்தடா லட்சமுருயேத்து யேத்து - போற்றுவோம்ருத்திரருக்குச் சிவயாமவென்று பூட்டுவோம் லட்சமப்பாபூரிபூரி-மாற்றுவோம் யேசுதற்குவசியனமவென்று மாட்டடா லட்சாந்தீரமாறுமாறே. 686

மாறுவதுசதாசிவற்கு யநமசிவவென்று மாறடாலட்சமுறுமாறுமாறு - கூறுவதுவைந்துபஞ்ச கோணத்துக்கோ நமசிவாயாவென்று கூறுகூறு - ஏறுவது அட்ட கோணத்துக்குத்தான் ரீங்காரமுடகார ஓங்காளியென்று தேறுவதுபிறாணாயா நமசிவாயா ஸ்திரீங்கார ஓங்காராவென்றுஓதே. 687

ஓதவேகீழ்த்திசைக்குவெள்ளியாகும் உத்திரமும் அட்டமியும் கூடி நன்று - நீதவே அக்கினிக்குமந்தவாரம் ரேவதியுமிரட்டையும்பார் மெத்தநன்று - சூதவேமறலிக்கு ஆதிவாரம் துவாதசிபூசமும்மெத்த நன்று வாதவேநிருதிதிங்கள் சித்திரையுமாகும் மாயிலியம் பூரணையானால் நன்றே.

ஆனாலுமேல் திசைக்குமங்களவாரம் அமரபச்சத்தட்டமி விசாகம்நன்று - போனாலும்வாயுவுக்குப்புதன்கிழமை புனர் பூசமாதிரைபஞ்சமிநன்றாகும் - மேனாலும் வடதிசைவியாழஞ்சோதி விளங்கியசதுர்த்தசி மெத்தநன்று - கோனாகுமீசனிலேவெள்ளிக்கூடக் கூட்டியே ராடம்புரதோஷங்கள். 688

தோஷங்கள் கீழ்த்திசைக்கு மரணமாகுஞ் சொன்னபடி அக்கினிக்கு மரணமாகும் - வாசங்கள்தென்றிசைக்குவூணுமாகு மகாநிருதிதனக்கு மூணாகும்பாரு - தேறுகள்மேல் திசைக்கு நடையுமாகுஞ் செயமான வாயுவுக்குத் தூக்கமாகும் - நாசங்கள் வடகாகமீனத்திற்கும் நன்றான பொதுப் பட்சி யைந்துமாமே. 689

அஞ்சாமல்கீழ்சிவப்பு யெரிக்குங்கூட அந்தகனர்கறுப்பாகும் நிருதிகூடத் - துஞ்சாமல்பச்சையது மேற்கேபார்த்துச்சொன்ன கறுப்பது வாயுவிமூலைக்குமாகும் - நஞ்சானவெள்ளையடாவடக்குத்தானும் நாசமாமஞ்சளடா மீனம்பாரு - பஞ்சானவரமிந்தப் படியேபோடு பாங்கண பூசைபண்ணிப்பாருபாரே. 690

பார்க்கையிலே கருவுக்குப்பன்றியொன்று கருவானகீழ்வாசல் பண்ணிப்போடு - ஏர்க்கையிலேதெற்கு மேடத்தைப்போடு யியல்வானயிமநாதசத்திக்கப்பா - ஆர்க்கையிலேசாவலிடு மேல்வாசற்கு ஆச்சரியசத்திமனைமாரியொப்பாம் - சேர்க்கையிலே வெள்ளாட்டுக் குட்டியொன்று செய்துவிப்பார் கழுவிலேவடக்குத்தானே. 691

தானென்றசத்திசிவபூசைக்குந்தான் தழாம்பூபிச்சிப்பூமுல்லைப் பூவும் - வானென்றமருந்கொழுந்துமாதளம்பூ மல்லிகைப்பூயிருவாட்சிப் பூவினோடே - தேனென்றசெவ்வாலிப்பூவுங்கூட்டித் தேங்காய் நெய்தேன்பால் நூறாகத்தாக்கி - வானென்றவாழைகனி வருக்கையோடே மாங்கனிமாதளங்கனியும் கூடவையே. 692

வையப்பாபச்சரிசி பரமானங்கள் வாய்ப்பானபாற்குழம்பு திரட்டுப் பாலும் - செய்யப்பாகோழி முட்டையடையுங்கூட்டிச் செயமானபாகற் காய்வழுதலங்காயும் - மெய்யப்பாபூசினிக்காய் வாழைக்காயும் விதவிதமாய்காய்கனிகள் புண்ணாக்குக்கீரை - உய்யப்பா பாயசங்கள் கருட்டு வைத்து உண்டானமாங்கிஷங்கள் யாவும்வையே. 693

வைப்பதுகள்ளாரமுர்தம்படைப்பாய்கஞ்சா வட்டுடனே பூரணலேகியஞ்செய்திட்டு - முப்பழமும் பொலியும் பூசைமூட்டி முந்துநறு நெய்யெள்ளெண்ணெய்பாலும்வைத்து - அப்பம்வடை தோசை

பணியாரம்வைத்து அவல்பயறுகடலையுளுந்து மூட்டிச் - செப்பமுடன் சாராயக்குத்திநூறு சிவசத்திமுன்படைப்பாய்த்திரட்டித்தானே. 694

திரட்டியேவெள்ளியோ டெட்டுநாளுஞ் செய்திடுவாய் சிவசத்திப் பூசைமூட்டி - விரட்டியேயெட்டெட்டுத் தொழிலுஞ்சித்தி மேவியேமா மோடிமுட்டிப்பாரு - துரட்டியேமுன்சொன்ன மோடிகூட்சந் தூண்டியெடுத்ததினோடேயிதையுஞ்சேர்த்து - இரட்டியேமாடி வித்தையாடிப்பாரு யெதிராளிகிடுகிடுக்கவெட்டும்பூணே. 695

பூண்வேயெந்தெந்தமோடி சொன்னோம் புகழானதேவதை களெல்லாஞ் சொன்னோம் - நாணவேமந்திரதந்திரங்கள் சொன்னோம் நமக்கெதிரிமயங்கியுமாற்றஞ்சொன்னோம் - காணவேகண்கட்டு வித்தை சொன்னோம் கடைகெட்டஎதிராளிமரணஞ்சொன்னோம் - வீணவேற் மூலிமுத்ததேவி விஷமருந்து மைப்பொடியும் விளம்பினோமே. 696

விளம்யினது பூதம்வரபிசாசுமுட்ட விரோதிவுருத் தெரியாமல் தளபாடங்கள் - குளம்பிவிழுந்தோடிவைத்தமோடிப் போக்குங் கும்ப முடன்கணபதியும்துற்கைகாளி - உளம்பியவன்னெஞ்செரிக்காதனாகவு திரம்வந்துவாய்வழியேகக்கிக்கக்கி - விளம்பிவிழுந்தோடுவான் சிவசத்திபூசை விதியுடனே நிறைவேறில்விரித்துப்பாரே. 697

விரித்துப்பார் பார்வைமுன்னேசெய்துவைத்த மிச்சமுள்ள செப்பெட்டுஞ்சொல்லக்கேளு - அரித்துப்பார்சல்லடையிட்டாடினாலும் அவன்காணப்போறானோ வுந்தன்மோடி - பிரித்துப்பாரவன்வைத்த மோடியெல்லா பிசாசத்திசிவப்பாவை பிதிங்கச்செய்வாள் - தரித்துப் பார்நீயொன்றைவைத்துப்போட்டுச் சுண்ணப்பாசெபபெட்டு மூடிப்போடே.

மூடுவதுஅவனைக்காலடுக்குள்ளிட்டு பூச்சுவிடாதடித்துரட்டிய மட்டக்கேளு - ஆடிவருவாகினவனோமோடிவாங்க அவனியிலேவாற வன்கால் மண்ணையள்ளிப் - போடுவதுவொருபிள்ளைப்பூச்சிகூட புகழானசார்ராயங்கொஞ்சம்விட்டு - மூடுவதுசெப்பெட்டும் போட்டுமூடு முட்டுமடா அலகைகள் போயவனைத்தானே. 699

அவனைத்தான் அவன்சேனை யாட்டைத்தானு மவனுடையவாயு தத்தைக்குழலைக்கொம்பைச் - சிவனைத்தானவனுளத்தில்வைத்திட்டாலுந் தீட்சைவிதிபூசையெல்லாஞ்செய்திட்டாலும் - கவனத்தால் குளிகையிட்டு பறந்திட்டாலும் கண்கட்டுவுருமற்றம்பண்ணிட்டாலும்-பவனத்தால் சலம் வாங்கிபலகிச் கூடைப்பார்ப்பாரிவிட்டாலுமெதிற் நிற்பானோ. 700

எதிரொத்துமொட்டிவிளா யெடுத்துக்கொண்டு யெண்கோணப்பலகை யொன்றைப்பிரித்துக்கொண்டு -சதிகார்த்துதலைகற்றி விகர்போது

சண்டமாருதம்போலப்பேய்கள்கோடி - பிதிர்எதிர்த்ததேவதைகள் பிதிர்கள்கோடி பிசாசென்றகொள்ளிவாய்ப்பேய்கள்கோடி - அதிரெதிர்த்து அடிக்குமடா அலகைகூட்டி அக்கினிபோல் காற்றுப்போ லிடிபோலாமே.

இடிமுழங்கும்கவனத்தில் பூதலத்தில் யிருந்தமகாவிருட்ச மெல்லாமெடுத்துவாரி - எடியவண்டு துண்டமதா யுலக்கையெல்லாம் வுரல்நொருங்கராட்டணமுமோடிப்போகப் - படிகளெங்கும்திடுபிடெனப் பதறியோடப் பாயுமடா அஷ்டகெசவிலாசம்வீசத்தான் - கொடியளந்து கெடிவிழுந்து ஓடுவார்பார் குவலயத்தாருன்னுடைய வித்தைக்காவே. 702

வித்தையிலே அதிகசூத்திரத்தின் வித்தைவிறுமாண்டகொள்கையுங் கண்டதில்லை - பொத்தையிலேயிருந்தசித்தர் மெய்ப்பாரப்பா பூதலத்தில் நீமோடி செய்யும்போது - உத்தசெய்தியுனக்குரைத்தோன் செய்துபாரு உள்ளிசென்று ஆளிமந்திரத்தானும் - மெத்தனமாயிரியாதே புத்திதன்னில் வெறிகொண்டு லகிரிகொண்டு மேவிடாதே . 703

மேவையிலேலகிரிகஞ்சா மதுபானங்கள்வேண்டுமென்ற லேகியங்கள் அபின்சாராயம்- பூவையர்கள்மகாமோகங் கொண்டாற் போலேபோய்பொசித்து வெளியேறிக் கவனியாதே -பாவையிட பூசையிலே மோடி செய்து பார்மீதில் கூட்டமொக்கப்போனபின்பு காவனத்தில் வந்திருந்துராக்காலத்தில் சாப்பிட்டுவிடையாறி சயனஞ்செய்யே. 704

கூடுவிட்டுக்கூடுபாயல்

சயணமிட்டுப்பந்துபோலெழுந்துநீயும் தடாகத்தில்தேககசுத்திதந்தசுத்தி வயணமிட்டுக்கட்டளையைமுடித்துக்கொண்டு மகாயோகிமகாவாசிமகா மெய்ஞ்ஞானி - வியணமிட்டுப்பெரியோர்போல்வேதாந்தத்தை விரித்துமடித் தொருத்தர்சொல்லிப்பணிந்திடாமல் - அயணமிட்டவிதியாளியாய்ச் செய்துக்கொள்ளு அப்போதல்லோவுன்வித்தையரிதென்பாரே 705

அரிதென்பார்கூடுவிட்டுக்கூடுபாய அவுசாரியாடியங்குயிருந்ததாலே பெரிதென்பாரிருபேர்கள் பெண்ணுமாணு மதியற்றுயிருந்து விட்ட பெரியோர்தம்மால் - இரிபென்பார்பற்பமா யெரிந்திட்டாலும் இல்லாதுசமாதிதான்வைத்திட்டாலும் - உரிதென்பாரெண்டுமற்றுத் தன்னாலேதான் ஊதியுடல்கழிந்தாலுமோடுவாங்கே. 706

வாங்குவதுயெந்தவழியுபாயமாக வாங்கிவந்து வெவ்வேறு வைத்துக் கொண்டு - தூங்குவதுவுன்பாரியரியாமற்றான் தோகைதலைவைக் கிடத்தில் பெண்ணைத்தாக்கு - நீங்குவது நீயுறங்குந்தலைமாட்டிற்றான் நிருபளிட சிரசோட்டைத்தானம்பண்ணு ஓங்குவது யேப்பமென்றாலப்பூமிதான் முன்விந்துமவள்விந்து மொன்றாய்த்தானே. 707

ஒன்றானமருந்தையெடுத் தேழாநாளில் ஓரோட்டிலிரத்தமது வொன்றுகெந்தி - குன்றாமல்கருமத்தஞ்சாறுள்ளிட்டுக் கூட்டியரைத் துள்ளோட்டில் தடவிமூடு - வென்றாயேவுலகமெல்லா மிரண்டோட்டாலே விடத்தலையில்நாற்பதுநாள் தலையைவைத்துப் - பின்றாகத்தூங்கை யிலேயிருபோகத்தைப் பிலமானவிஷத்துடனே கலந்துகொள்ளே. 708

கொண்டுவிட்டுக்குலக்கொடியைக்கூடிடாமல் குறைகண்டு போட் டுறங்கையிலேகுட்டிசாத்தி- மண்டைகிட்டத்தலைமாட்டில் பையவந்துமண் டியிட்டுத்தோண்டுமடா பயப்படாமல்-உண்டைகட்டியிருக்குமந்தக்கையை பார்த்துவுன்கையால் பிழிந்தமுக்கிக்கொள்வாயப்பா- விண்டுமெத்தப் பேசாதுகுறளிதானும் விட்டிடப்பா கையென்று விளம்பும்பாரே. 709

விளம்பினத்தையரவணிந்துவுண்டைரெண்டும் விடாமல்லியது வாயின் வொட்டிடாதே - தளங்கிளரியுன் தலைமாட்டிருந்த மண்டை தன்னில்வைப்பால் பிறகோடமாட்டாதப்பா - களங்கமற்று வுன்னோடே வுள்ளதெல்லாங் காரியமாய்ச்சொல்லுமடா கருவைக்கேளு - இளங்காளி அரிவையிளவர் மண்டையோட்டை யேனெடுக்கவந்தாயென் றியம்பிடாதே

இயம்பவேயென்னசொல்லும் குறளியொன்றாலிப்படிபாருன் வீட்டைத் திறந்தேயெங்கும்-பயமன்றி வெளியில்வந்துபார்க்கவென்றால் பிசாசைமுன்னைவிட்டு வப்பாலெளியேறிக்கோ-நயனமென்னநாட்டி லுள்ள பூதப்பிரேதம்நகரியெங்கும் நடமாடுநமன்போலப்பா- வயணமென்ன சொல்லொன்று காரித்துப் பவைக்குமடா அப்போது பிரம்பைத்தானே.711

பிரம்பொறாசாணீளமடங்காசத்தி பெருமரைக்கார்கடலிருக்கும் பத்திரகாளி - கரந்தரித்தகருதாசத்தாளியற்கும் கைப்பத்தியிருந்திந்தக் குட்டிச்சாத்தி - வரந்தரித்தமகாயோகவாணியப்பா வாய்த்துதடா கயறுகட்டவுண்டைரெண்டும் உரந்தரித்துக்கொட்டக்கோ ளதுதானப்பா ஒருசாணுக்கின்னிலத்தில் மிதியாதாமே 712

தாம்கட்டக்கயறுடனே கொட்டக்கோலும் தான்பெற்றபாக்கியமே சாலவித்தை - நாம்கட்டமாட்டமடா உலகைநம்வால் நாதனிலேநீ பொருத்தனானதாலே - எம்குட்டிசாத்தினிக்காய் போவென்றாக்கால் யெங்களுக்குயேவல்செய்ய நீருண்டாச்சே - யெம்குட்டி மென்பானே நாங்கள் கேட்கும்புத்தியென்னசொல்லுமையாபுகலேதெங்கும். 713

புகலேதுமண்டைதனை யெடுக்கவந்த புத்திவென்னபகைவிபரமாகச் செய்தீர் - அகலலெங்கள் வடபத்திரகாளிபூசைக் காமென்று திருடவந்து அகப்பட்டோமே - நிகல்வதென்னவங்குலையால்மாண்பேர்கள்

நிற்பாரேபிசாசுத்துவமாய்த்தானும் - சகலபேர்நாங்களுமப்படியேயான வத்துவந்தானிவளிருவர்தலையோடாமே. 714

ஆமென்றுவங்குலையில்மாளுமுன்னே அவரிருந்ததற்சுரூபமாகக் காணும் - நாமென்றுயிருப்பவற்குத்தலையோட்டைத்தா னாட்டிலிருந் தாலினிமேல் பிறக்கமாட்டோம் - மேமென்றுவந்தேடுத்துத் தரச் சொன்னார்கள் மேவிவந்தோமிருவருக்காய்யென்றுகூறும் - நேமென்றும் கபாலமென்ன செய்யுமென்று நீ கேட்டாலதுவிளம்பும்நேர்மைகேளே. 715

நேர்மையென்னபரவாதுரசங்கெந்திக்கும் நீனிலத்தில்கருமத்தஞ் சாறுஞ் செர்த்தால் - ஊமையென்னநாங்கள் தான்பிசாசுரூப வுபாயமென்ன ஆணோடுவூமையாச்சு - ஆமையென்னபெண்ணோடு ரெண்டுமாச்சு அந்தரசங்கெந்தியூமத்தம்பூசி - சீமையிலேமைப்பிடித்துக் கையிற் போட்டால் தெரியுமடா பிசாசுநிதியென்றேகூறே 716

கூறினதுமல்லாமல்பின்னுமென்ன கூறுமென்றாலுண்டைரெண்டு பிரதாபத்தை - தேறுமடாயென்னவென்றால்கூடுவிட்டுச் சென்று மறுகூடு புகச்செய்யுமென்று - ஏறுமடாகெவுளியாகாசந்தன்னில் யெறியண்டரண்ட மெல்லாந் தாண்டுமென்றுஞ் - சீறுமடா வோருருண்டைவுருமாறிப்போய் சிக்சாலம்பண்ணுமென்றும் செப்பும்பாரே. 717

குறளிக்குப்பூசை

செப்புவதுவந்தவர லாறுமென்ன செப்பென்றால் யென்னவென்று செப்புமானால் - ஒப்பினபெண்வடபத்திரகாளியுண்டை யூமியஞ் செய்தோமதற்குவுலகத்துள்ளே - தப்பினபேய்தவறினபேய்பிசாசை யெல்லாம் சண்ணென்றுயெனக்களித்தாள் கயறுங்கோலம் - இப்புவியிலு மக்களித்தோம்யானுமென்று ஏவல்பணிவிடைசெய்யும் குட்டிச்சாத்தி. 718

சாத்திக்குப் பூசையொன்றுசுக்கிரவாரம் தன்னுடைய சுண்டு விரலிரத்தம்விட்டு நேத்திக்குப்படைப்பு மிட்டுக் கொடுத்துப்போடு நெற்பொரியுமெள்ப்பொரியுந் தூவிப்போடு - கூத்திக்குத் துணையிரண்டு சுடலைமீதில் குடியிருப்போம்கூப்பிட்ட போதுவாபோ - நாத்திக்குக் காத்துக்கோயெதிரில்லாமல் நடவென்றுபட்படென நயனங்கொண்டே. 719

நயனத்தால் பார்த்திடவே போகும்பாரு நாளிலேநான் செய்யுங்கருவைக்கேளு - அயனத்தில்யோட்டில்முன்னே சூதபானுக்கும் பெண்ணுக்கும்தெந்திசாத்தி - வயனத்தால் கருவூமத்தன்சாறுபூசி வைத்த மண்டைவெளிதிறந்து மைக்கூரத்தான் - பகனத்தாற்போலிருக்குஞ் சத்தினீசர் பதினெட்டுப்பேரும்பார்ப்பார்தானே. 720

மைவகை

தான்வந்துபார்ப்பதென்னநீதான் செய்யுந் தலைமண்டைமையதனைச் சாபம்போட - ஏன்வந்தாரெண்றெண்ணிமலைத்திடாதே யிவர்மண்டை பஞ்சுகெட்டமண்டைக்கேதான் - கோன்வந்துசபித்தாலும்பலியாதப்பா கொண்டுதங்கம் வருமாற்றம் பண்ணிக்கொண்டு - நான்வந்தேனென்றாலும் நடவாதப்பா ரண்டுண்டையுன்னிடத்திலிருப் பதாலே. 721

இருப்பதாலுமைமுன்பு அனுபோகத்தில் யிருபோகம்வஸ்தரிந்தநீரே தென்றால் - பொருப்பதாலும்பெரிய ஆதிவஸ்து போகித்ததனாதிவஸ்துப் பொசித்தபோதே - உருப்பதாம்பிசாசுகுட்டிச்சாத்திதானு முன்விழிக்குக் கண்டுபிடித்தடிப்பதாச்சுக் - குருப்பதாம்புயத்தின் மையைவாங்கக்கேளு கூட்டுப்புமேல்த்தலையையேத்திடீரே. 722

ஏத்துரண்டுமேல்மூடிக்கீழேமூடிக்காய் யெரிக்கயெறிதுரும்பேது யியம்பக்கேளு - மூர்த்திகாராம்பசுவெண்ணைகரண்டிநீத்தி மூத்திருவான் றுயிலானால்மெத்தநன்று - தோற்றியது கிடையாட்டால் கன்னிநூலைச் சுத்தியிடுதிரியாக்கியெரியும்போது - பார்த்திருநீமேல் மூடிகீழுயாகப் பாதிவெண்ணெயதற்குப்பாதிதானே. 723

பாதியென்னயாவின்நெய்தான் படிதானானால் பலமிரண்டுக்கும் பாதிப்பதிந்துயேற்று - சேதியென்னகீழ்மேலுமாகும்பாரு திரும்புவது மேற்கீழுங்கீழ்மேலும்பார் - ஆதிமையுமனாதிமையுமிரண்டுமுன்னே அண்டத்தில்| பற்றினதைவழித்துக்கொண்டு - மூதிரையாமிருபோக மூட்டியாட்டு முன்பாதிகொண்டு குறைமைக்குவைத்தாய். 724

வையாட்டாலுன்வித்தைபூட்டியாட்டு வள்ளையிருத்தால்நன்று அன்றுநன்று - செய்பாடடால் குழியானைத்தம்பலந்தான் திகைப்பூடு மின்வெட்டான்சீனக்காரம் - மையாட்டையென்னசொல்வேன்சித்தர்தாமும் வாயூறிநிற்பாரே மைக்குத்தானும் - கையாட்டப்போறவர்களாறோ சொன்னேங் கணபதிக்குப்பூசைபண்ணி மையைவாங்கே 725

வாங்கினால்வாய்பேசா யூமைப்பூதம் வந்துபுத்திகேழ்க்குமப்பா மைக்குத்தானும் - தூங்கினால் மைபோட்டுத் தூங்கிப்பாரு குட்டிவைத்த தணங்களெல்லாம் தோற்றும்தோற்றும் - ஏங்கினாற்போல் விழுந்துத்திரிய வேண்டாம் யெழுந்திருந்து அந்தமச்சம் வெட்டிப்பாரு - தாங்கினாலம்பூதம் நின்றுதாங்கப்போமோ சாங்கமாய்க்கொள்ளையிட்டார் நிதியைத்தானே.

நிதியெடுத்துவைத்துக்கோபின்னும்கேளு நிணிலத்திலுனக்குவந்த குட்டிச்சாத்தி - நிதியெடுக்க அதையளித்துக்கரத்தில்ப்போட்டுத் தான்

பார்த்துவாபோவென் றனுப்பும்போது பதியெடுத்தக்கனகமெல்லாம் பெற்றுக்கொண்டு பக்கத்திலிடிக்குமடாவதுவுமன்றி - துதியெடுத்தப் புதையலுற்ற பூதமெல்லாஞ் சொல்லுமடாவலியன் வந்துவுனக்குத்தானே.

உனக்குவைத்தமுதாக்கள்தேடும்பொன்னை வுன்வசத்திற்கொடுக்கு மட்டும்காத்தேனையா - எனக்குறக்கமில்லையித்தனைநாளுமட்டு மினிப் போறேனென்சாகைக் கிளிப்பாரத்தான் - கனக்கெனக்கு சுமந்து முடியாது சாமி கையேற்றுக்கொள்ளுமுந்தன் கடாரந்தன்னை - தனக்கு வழிகூடு மென்று புதையல்காற்ற சாத்தாவுமையனுவந் தேத்துவாமே. 728

ஏத்துவார்சிறுவர்கையிலிட்டிட்டாலும் ஏவல்முதல்வைப் பெடுப்புக் களவுகன்னம் - பார்த்துவாவென்றுகுட்டி சாத்திதன்னைப் பலகாரம் பால்பழங்கள் சுகந்தபுஷபம் - போற்றுவாரடைக்காய் வெள்ளிலையுனோடு பொரிகடலை தேங்காயும் பூமிமீதில் - ஏற்றவற்றவானமென்ற சகலவஸ்து மெடுத்துவரு முந்தமை கையிருப்பதாலே. 729

இரப்பதால் கூடுவிட்டுக்கூடுபாய விரண்டிலொன்றைசோதிக்க வயணங்கேளு - சருப்பதாங்குளிகைமறு கூட்டிற்பாயுங் கமலம்போல்த் தங்க நிறமுயரத்தூக்கும் - உருப்பதாயிருந்தாக்கைவலுத்துநன்றா யுருக்குளிப்போபேயிருந்தால் குளிகைபோடு - விருப்பதாயில்லாட்டால் குட்டிச்சாத்தி வீசுமடா கூடுவிட்டுக்கூடுதானே. 730

கூடுவிட்டுக்கூடுபுக்ககோடிபூதங் கூப்பிடுமுன்வந்துநின்றுகும் பிட்டாடும் நாடுவிட்டுமறுதீவில் நடக்கும்பேச்சு நவிலுநாழிகையிகை யிலெங்கும்பாரு - பாடுபட்டுவுடல் முறியப்பணிசெய்யென்றால் பத்தியுடன் பட்சம்வைத்துச் செய்யும்பாரு - தேடியிடும்பிள்ளை யடாயூகமெல்லாஞ் செப்பினவாறெப்படி யேவப்படித்தான். 731

அப்படித்தானாகாசமாற்கமோடி அலைகடலெல்லாந்தாண்டியங்கே யேகி - ஒப்படித்தான் முன்சொன்னபடியேயந்த வூர்தோறுமுள்ள அடையாளங்கஞ் - சொல்படியேவாதுசொல்லுங்கண்டுகேட்டுந்துப் போடுதுறவுவைத்துக்கண்டுகொள்ளு-மிப்படித்தானறியா நீ மேலானாலும் லெக்கோடேபோய்பார்த்து அறிந்திடீரே. 732

அறிந்தபடிபூதிவிட்டுப் பலகைமீதில் அவதானமாயிரியு மவனியோற்குத் - தெறிந்தபடி ஆளுயரந்தெரியத்தூக்குந் தெரியாதுபிசாசு வவர்கண்ணுக்கேதான் - முறிந்தபடியிவர் வாயுஸ்தம்பமென்று மொழிவார்களுலகத்தோர் முத்தியென்று - செறிந்தபடி பழுக்காய்ச்சிக் கையிலேந்து தீய்ப்பிடியாதுன்கை மேலது கையாமே. 733

அதுகைதானுலகத்தோர்க்கறிபடாது அந்தரத்திலுனைத்தூக்கிக் கொண்டுசெல்லு - இதுமெய்தானவனியுள்ளோரறியமாட்டா னாரின்னா ரொய்வர்பறந்து போறாரென்பார் - புதுமைதானிதுவென்னமாயமென்பார் பூமியிலேநீமோடி செய்யும்போது - எதுமெய்யாய்ச்செய்யணுமோ அவனை நீசெய் யெடுத்ததொழிலத்தனையுஞ் செய்யும்பாரே. 734

செய்யும்பார்மோடியிலேசிகசாலங்கள் செய்தொழில்களனேகமுண்டு பூதம்பேய்கள் - உய்யும்பார்யேவல்கள்கழிப்புகோடி உயிர்வதைகள் சீவசெந்துஉடல்கள்கோடி - பொய்யும்பார் மெய்யாகும் மெய்யும் பொய்யாம் பூட்டிவிப்பார்கருவிகள் ஸ்தம்பணங்கள்கோடி - எய்யும்பாரிதுவெல்லாஞ் செய்யும் செய்யுமின்னமுண்டுமதீதவித்தையியம்புறோமே. 735

இயம்புறோமண்ணெடுத்துக் கையில்வைத்து இந்தாபார்கெந்த பொடிசெந்தூரம் நீறு - நியம்புறோங்கல்லோடு கையில்வைத்து நிசமாக காசுபணம்விராகன்ருபாய் - தியம்புறோந்துரும்பெடுத்துக் கிள்ளிப் போடத் தேட்காலில்படா அரவுசெய்யான்றும்பி - நயம்புறோமித்தனையும் வாயாற்சொல்ல நயனத்திற்கவ்வாறு காட்டும்பேயே. 736

காட்டுமேகைதட்டி வாயைக்காட்டிக் கடப்பாறை கோலுள்ளே யிருந்துதானும் - மூட்டுமே வெளியில்வரப்பண்ணும்பாரு முள்ளானக் கருவிகல்லுமுழுங்கிறாப்போல் - சாட்டுமேவாயிற்சோதினைக்கொடுத்துத் தன்வயற்றைத்தட்டி வெளியேவரப்பண்ணுங் - கூட்டும்பார்முழுவழி யேகாதினாலே கூர்கருவிகொடிவிஷங்கள்வரப் பண்ணுந்தானே. 737

பண்ணுந்தான்கருவிகொண்டு யிருந்தார்மீதில் பாருபாரென்று வெட்டப்பட்டாவாலே - பண்ணும்பாரத்தனைநயனத்து கால்களற்றது ரத்த ஆறாகித்தானே தோணும் - பண்ணுந்தானென்றுமன்றிப்பண்டுபோலே பிதிர்களுக்கும் நரர்களுக்கும்பிறத்தச்சமாய் - பண்ணுந்தானிருப்பதுபோல் நிசமாய்த்தோன்று மித்தனையும்பாசா சென்பதில்லைதானே. 738

இல்லத்திலிருந்தாப்போல் சிவத்தினுள்ளே யிருந்துகறிசோறு சமைத்திறந்தானென்று - சொல்லத்தானீபோனவாறுபோலே சோறு கறிபலகாரங்கொண்டுமேவும் - அல்லத்தானுன்னையொருதூணினோடே அறக்கட்டிவைத்தாலு மவிழ்த்துக்கொண்டு - மெல்லத்தான் விட்டு விடுமெதுவல்லாமல் வேறொரு தூணிற்கட்டிவிடவுஞ்செய்யே. 739

விடுவதென்னவுன்னைத்தான் கல்லறைக்குள் விட்டுத்தான் போட்டாலும்வெளிகொண்டேறும் - நெடுக்கத்தானில்லாது வியாழவட்ட மதிற்கு மடாசித்திகுட்டிச்சாத்திவித்தை - கெடுவதென்ன வொருகோட்டை

யரிசிச்சோறு கிண்டியேறிட்டிடுவான் சணத்தில்தானே- படுவதென்ன தோணிபடவதனைப்பார்த்து பா வா வாவென்றும் வருத்தும்பாரே. 740

வருத்தும்பார்பரிரதங்கள் கஜங்கள்சேனை வந்தாலுங்காணா்மல் வருவிழிக்கே - திருத்தும்பார்திசைதோறுந்திட்டுதோறுந் சேனையடை யானைபரிவாவென்றாலும் - பொருத்தும்பார்பார்த்தறிசையனைத்துமப்பா பூதமுடன் மாயவித்தைப்புகலக்கேளு - உருத்தும் பார்ஏரிகுளங்கால்வாய் வெட்ட உத்தரவு கொடுத்தாலுமூட்டும்பாரே. 741

பாரப்பாமிருகங்கள் கோடாகோடி பறவையென்றபட்சியிலே கோடாகோடி - சேரப்பாவூர்வனங்கள் கோடாகோடி திறையிலுள்ள மச்சங்கள் கோடாகோடி - ஆரப்பாமலைவளங்கள் கோடாகோடி அங்காடிசரக்கதிலே கோடாகோடி - நேரப்பாவாயாலேமனதினாலே நினைத்ததெல்லாம் நேத்திரத்தில் காட்டும்பாரே. 742

காட்டும்பார் ஏந்திரவித்தைபுகலக்கேளு கண்ணாகிமரமாகிப்பூவும் பூர்த்து - மூட்டுமேபிஞ்சாகிக்காயுமாகி முத்திநல்லகனியாகி வித்துபோலே ஆட்டுமே அளைப்பு வித்தைமறைப்பதாச்சு அப்படியேகனி காயாய் காய்பிஞ்சதாகி - மாட்டிடவே பிஞ்சு பூபூவிலையாய் மாங்கன்றாய்க் கன்றுமற்றுப்பண்டுதானே. 743

பண்டரிசியில்லாமல் சென்னெல்விட்டுப்பால்பொங்கலிட்டு நெருப்புமில்லாமல் - கொண்டகும்பந்தனில் நெல்லும் புனலும்விட்டுக் கூடியடுப்பேற்றியுலைகொதிக்கும்பின்பு - மண்டுமியாய்யாற்கு விடுக்களன்று வரியற்ற அமுதுபடிசோறுமாகி - யுண்டுவிடற்காகுஞ்சென் னெலய்யா யுலையிற்றீவிறகன்றிசெய்யும்பேயே. 744

பேய்குலுக்குந்தலையாட்டம் பெண்கொண்டாடும் பிணிகொடுக்கும் பிணிவிலக்கும்பிணக்கும்பாரு - நாய்குலைக்குங்குலையாது சாவல்கூவும் நடுக்காட்டிற்சிலமனைக் குஞ்சிவிகைதூங்கும் - காய்குலைக்குமிளை குலுக்குமழைமாரிக்கும் கனவெயிற்குங்குடைபிடிக்கும்கலையாலப்பா - தீவிலக்குந்தீப்பிடிக்குமருகாட்டாது சித்திகுட்டிச்சாத்திசெய்யுந் தொழிலிதாமே. 745

தொழிலிலேசிவந்தவுண்டையுருவிற்பூட்டிச் சுபாகமாய்கத்திகொண்டு வெட்டிப்பாரு - எளிதிலேயாகாது வெட்டவப்பா யெமனாலும்வாதை செய்யயென்படாது - வழுதலங்காய் பூசணிக்காய் வாழைக்காயும் மற்றக் காயடக்காய்களெதுவானாலுங்கேள் - பழுதல்வமை பூரிவெட்ட வெட்டறாது பாசவலைமணிகட்டப்படுமேமச்சம். 746

மச்சமுடனின்னிடத்திலிருக்கும்பூவை மகராசகன்னியிங்கே வரணுமென்று - உச்சிதமாம்பூதமொன்றைக்கூவியேவு யொருநொடி யிற்கொண்டுவருமுன்கண்காண - யிச்சமுடன்பின்னுமந்தவூரைக்கூட்டி விட்டுவிட்டுவ்ராதென்றால்வேளைதானே - அச்சமுடனப்படியே வண்டுபோலே அப்பதியில்வைத்ததுவருமையினாலே 747

மையெடுத்துக்கையிலிட்டுவட்டம்போட்டு மதளையென்றபாலகனை வாயால்கேளு - கையெடுத்துக்கும்பிடுவா னென்னவென்றால் கண்காட்சி யனேகமுண்டுன்னுக்குள்ளே - பையெடுத்தப்பன்னாகம்நாகமீதில் பச்சைமால்பண்ணிப்பார் கடலைப்பாரு - செய்யெடுத்தலெட்சியம் பூமர்தேவி திருவடிவாள் மாயந்தெரியுதென்பான். 748

என்பானேனகாரமிட்டு மையைப்பாரு யெமகூடப்பருவதங்கள் மகாமேரெல்லாம் - இன்றாலேநீலகிரிதெரியுதென்பான் யிதோபார்சக்கிர வாளம்வருகுதென்பார் - குன்றானமகமேருகோடிகோடி கொடி முடிகளோடேயல்லோவருகிதென்பான் - நின்றாலேநிடதுகிரிகைலாசங்கன் நேர்சதுரகிரிபோலேகையீதென்பானே. 749

இதெல்லாமிருக்கட்டும் அகாரம்போடு யிந்திரனுமிந்திராணி வெள்ளையானை - சூதானகற்பதருபஞ்சதாரை கவிசிந்தாமணியென்ன அமரரென்ன - ஏதாலேமுப்பத்துமூன்றுகோடி யிமையவருமறுபத்து நாலுகோடி - காதாலேகேட்டதெல்லாமுன்பொய்யானால் கண்ணாரக் கண்டதிர போமென்றுஞ்சொல்வான். 750

சொல்வானேவுகாரமது போடும்போது சொற்கலோகங் களிடயடையாளங்கேள் - வெல்வானேசரசோதிரூபமென்ன வெண்டா மரையில் வீற்றிருக்கும் கொலுதானென்ன - புல்வானேயவனையாநாவில் வைத்த புதுமையென்ன அயனிருக்கும் பதுமமீதில் - அல்வானே ஆயிரத்தெட்டிதழாமென்று அவன்பிர்மதெண்டு மிவனறிவிப்பானே. 751

அறிவிப்பான் இகாரமதுபோடும்போது அலைகடலிலுள்ள வதிசயங்களென்ன - தெறிவிக்குமலங்கையென்ன யேந்திரமென்ன தீவென்னதீவாந்திரங்களென்ன - பிறிவிக்குமுதையகிரியஸ்தமானம் பெருங்கிரியுமாற்றன் கிரிபிறவையென்ன - குறிவிய்க்டகும்வடவையென்ற தீபங் கூறுவானதிசெயங்கண்டேறுவானே. 752

ஏறுவானகராவது போகும்போது யிரதிகளிநேத்திராநாகலோகம் - கூறுவானட்டகெச மெட்டுஞ்சூழ்ந்த கொடிமுடியும்வெட்டும் பார்கருவின்கூட்டம் - நேறுவானட்டமாந்திரிகங்கூட ரிருப்பனா

மணியுடனே ஆதிசேடன் நூறு - நூறுநாராயிரம்விசாலம்போன்ற நுண்மை யெல்லாம் விஸ்தரித்துப்பேசுவோனே. 753

ஓனேதுநீளமென்ன தென்றுஞ்சொல்வார் ஓமாரிமகாமாரி வருண னையுஞ்சொல்வான் - ஊனேதுவுயிரேதுவுடதுஞ்சொல்வான் னுறையவனு மதியவனுமுபாயஞ்சொல்வான் - கானேதுகாடேது பூடுஞ்சொல்வான் கன முனிவர்பதினெண்பேர்புரவுஞ்சொல்வான் - நானேதுநீயேது காணப்போரோம் நமக்குரைத்தமையாலே வுரைத்திட்டேனே. 754

கோல்விபரம்

உரைத்திட்டமைவிபர மிதுநாளப்பா வுண்மையென்றுநினையாதே கணக்கோயில்லை - குரைத்திடடுசொன்னதடாபாடலுள்ளே கொண்ட மட்டுங்கண்டமட்டுங்கூறினேன்யான் - அறைந்திட்டங்காணாது லட்சம் லட்சம் அறையலாம்மையினிட வதிசயங்கள் - கறைந்திட்டேன் என்று சித்தர் கோபித்தாலும் கைபிடித்து அவரையிதஞ் சொல்வேனானே. 755

சொல்வானேமைவிபரமிம்மட்டாச்சுச் சூதானசொல்விபரம் சூட்டக்கேளு - வெல்வானேகோலிருந்தா லுலகையெல்லாம் வேறுமொரு தொழில்வேண்டாம் வித்தைவேண்டாம் - உல்வானேமசானைசத்திக் கிட்டவாடல் வுலாவிருந்தகருநாகதாளிதானும் - சொல்வா னேகருநாக மகுத்துவங்கள் சொற்பெரியசித்தர்கள் தான் மறைக்கருந்தாளி 756

கருந்தாளிவேற்பிறம்பு தன்னையப்பா கையினிலே தானேடுத்துக் கருவைப்போற்றி - வருநாகராசாவும்நானேயிந்த வையகமெள்ளந்த திருமால்தேவி - திருநாகக்கன்னியருளுண்டாமன்று திசைநோக்கி முடிமன்னர்மீதேபோரோம் - பெருநாலுகாரியமும்சித்திமேவும் பிரம்பென்றுதுதிசெய்துப்பிறப்பட்டாயே. 757

பிறப்படவேசெப்பைந்து பந்தோவைந்து தெறிந்தெடுத்துச்சபை நடுவிலாடும்போது - உறப்படவேஓங்காரகாளிசத்தி உத்தண்டகெம் பீறிவுமாயிவீறி - உறைப்படவே அனாசத்தி ஆங்காரிதேவி மூதண்ட பகவதிறீங்காரி வா வா - திறப்படவே ஆ இ ஊ எ ஐ யென்வஞ்சிவகாமி சிவஞானிசிவசாங்காரி. 758

சாங்காரியவளேபுவனாதேவி தயாபாரிதியாதிசையோங்காரி - ஊங்காரிநிர்த்தவீரி ராணிரூபி யோகாளி யோவீரி யோபிடாரி றீங்காறி விரபத்திரிரிடிமாகன்னி நிராதானியம் பிகைமயேசுரிபாரி. பூங்காரிகௌரிமயிடாசேரி புராதனிபுரபுரபுரியென்றோதே. 759

ஓதாயி வேதாயி வாடிவாடி ஒருகோடிவித்தைக்கு முன்னேநில்லு-ஆகாளி ஆங்காரி ஆனந்ததாயி அருவாகிபுருவாகி அம்மம்ம தாயிசிதாயி குமராயிமோடிதேவி-செப்பாயி குப்பாயி தேவிதேவி கோதாயி பாலாயி வாலைப்பெண்ணே குதிகுதி மிதிமிதி ரா ரா வேறே. 760

அராவேரி பகலேறி னந்தலேறி அருளாயி இருளாயி தெருளாபூவே பூவேறிபுனலேறிதீயிலேறி புரமேறிமரமேறி போ போ போ மரமேறிவாலிராட்சதை மாதங்கி மரிமரி புரிபுரி வலீயுலீயு - ஆவேறி அகிலாண்டகோளப்பெண்ணே ஆ இி இ ஏ ஏ எ ன்றோ ஓதே. 761

ஆவென்றும் இயென்றும் ஒஒவென்றும் மன்றென்று மின்றென்றும்மகிலியென்றும் - சீயென்றும் சேயென்றும் ஸ்திராமென்று ஸ்திரிமுகாகுணபதிசத்தியென்று - பேயென்றுயுனையல்லால் வேறேயுண்டோ பிரமராட்சதைபேச்சிப் படையினோடே - தாயென்று தல்லியென்று தம்பியென்று சாத்துமேயுன்னுட நாமந்தானே. 762

தானானவட்டமிருப் பாளும்நீயே சதுர்கோணதேவியானவளும்நீயே - வானானபிறவீட்டில் மாலும்நீயே வன்னிருத்தரகாரிருத்தரியும் நீயே - தேனானமயேஸ்வரியேதேவிநீயே சிரசிலேவட்டமான வம்பாள்நீயே - பானானமதியமுர்த சத்திநீயே பரிவட்டமிட்டபுவனாயிநீயே 763

இட்டபுவனாயிசத்திமாயிதல்லி ரீங்காரவடிவம்மா ரீரீரீ - முட்டிவெளிநிறைபிண்ட வாமதேவி மூலிகராளியமிட்ட மோகி மோகி. அட்டகர்ம அட்டதிசை அலங்காரி ரீரீரீ ஆகாசவான முடிகள்ளாவியப்பால் - தொட்டமயேஸ்வரிசத்தசாகரத்தீதுமே தூமென்றுவருமவுனத்தாயே. 764

மௌனமென்னவாலையலங்காரரூபி மகத்தானமாங்காளி ஓம்சிவாயா - மௌனிகட்குயுகந்தபரிபாலயோகி மாசற்றகெவனமே மதியாய்க் கொண்ட - மௌனமேயோகவித்தைகிறுபாகாரி மகாபூத பாகிரியே மந்திரயோகி - மௌனமேசிவனேயல்லால்மகிதலத்தில் மகாதிரிபுரைசெய்தசிவானந்தியே. 765

சிவாநந்திபூசைசெய்து தியானந்தன்னைத் திருவுருவாய்க்கொள்ளை யிலேசித்தியாச்சு - மயானத்தில் வந்திருந்து கபாலமோடும் வாகானமையுமுன்னேபாடிவித்த - தியானத்தையுன்செவி செபிக்கும்போது செப்பிடுசங்கரியோகியாவாள் - சயானமாயோகிக்குயெல்லாஞ்சுத்தி சார்பானபிரசித்தமாவாள்பாரே. 766

செப்பெடுத்துமூடையிலே சபையைப்பார்த்துச் சிவானத்துபம் மென்று பந்தைமூட்டுக் குப்பென்றுயீமத்தில் பூதமோடிக் கொண்டு தரும்பந்து நூறாயிரங்கள் அற்பத்திலிருந்தபந்து யில்லாதோடும் மல்லவென்று போனபந்து அங்கேதோன்றும் - கொப்பத்திலமைத்தாற் போல் சுங்கரிப்போன் கூத்தாடவைப்பா பந்தாடச்சே. 767

செப்புமந்திரம்

பந்தோடசெப்பைந்து பாத்திப்பாரி பாம்பென்றசாண்பாம்பை யெடுத்துமூட்ட - யெந்தெந்தப்படிதானோ ஆசான்சொன்னால் யியலெல்லா மவ்விடத்தில் காணுங்காணும் - இந்தொன்றுமதிபாயுஞ் செப்புக் காரிடத்தினிலே கைச்சித்திரமெல்லாங் கல்லே - எந்திரமாம்மந்திரமுமேற்ற முள்ளோர் யெழிலானசுதந்திரமுமானகல்லே. 768

கல்லாமலனாதிசித்திதோத்திரத்தைக் கற்றாலுங்குருவிருந்து தொட்டுக்காட்ட - அல்லாம்ல் சித்தியா தப்பாகேளு ஆதிதொடுத்தந்தவரை சகலத்திற்கும் - இல்லாதசித்தினுக்கு மாயாசித்து ஏறிவிளையாடுதற்குங் களையின்மீது - சொல்லாமல்சொல்லியருள் குருவைக்காரு சூட்சத்தில் செப்புபந்து துதிகொண்டாடும். 769

துதிசெப்புமந்திரத்தைசூட்டக்கேளு தோதகத்திகடைந்த செப்புகுறாகுறா - விதிசெப்புவீசுவகர்மனிசைந்தசெப்புவீசெப்பு மாசெப்பு ஆகாசெப்பு - பதிசெப்புகுருசெப்புபந்துசெப்பு பாந்தென்றோன்ம திப்பாடு பாடுபாடு - மதிசெப்புகுதிசெப்பு இரவிசெப்பு மாயமானதை செப்பு வணங்குவீரே. 770

குருமந்திரம்

வணங்கவேபந்துமுந்திரம் ஓம் ஓம் பந்து மாபந்துசத்திபந்து ஈசன்பந்து - இணங்கவேவிதிபந்துமாலோன்பந்து இந்திரபந்தாதிபந்து யிரவிபந்து - குணங்கவேயாடொட்டாமாயாபந்து கூபந்துரீங்காரி மாரிபந்து - உணங்கவேபஞ்சபூதத்தாராட்டு மூம்பந்து ஆம்பந்து றா றா றோவே. 771

றோங்காரிபிரணவகிணேசர்பந்து உம்பட்டுவாயகுருநாதர்பந்து ஆங்காரயானைமுகதேவர்பந்து ஐந்துகாரண்டுகணாயர்பந்து - சிங்கார மூசிகவாசனகாபந்து சிவசிவல்லவாசத்திதேவாயென்று - கங்காகாசிக்கி கீகுங்கூகூவென்று கணபதியைத்தொழுதுபந்து கைமேல்வேண்டே. 772

வேண்டியேகுருமந்திரமுரைக்கக்கேளு. வியன்குருவோமசான நமவென்றே போற்றி - நீண்டசரணாரவிந்தம் சிரசின்மேலே நிழற்குடைய

தாய்ப்பிடித்து தேன்மலர்ஆசான் - தூண்டும்விதிசற்குருவை யுமக்குத்தந் தோம் தொக்குமடம்புபொருளாவி மூன்றுமென்று - ஆண்டிடுவாயின்ன மதுநிறைந்தசோதி ஆசானே ஆம்ஓமென்ற னிட்டிப்பாயே. 773

அனுட்டிக்கச்சகலதொழிலட்டகர்மம் அறுபத்துநாலுவித்தை ஓடியோடும் - குனுட்டித்துக்சிரசுகுட்டிக்கொள்ளச்சொல்லு கூறுவார் சற்குருவுட்குறைவராமல் - நினுட்டித்தசெப்பிடுவித்தைக்குப் பந்து நேமகமும்செய்வார்கள்பாரு - உனுட்டித்துச் சகலமுங்கற்றாறானால் உனக்குமொருமகிமையுரைப்பேன்கேளே. 774

மறவுமை

கேளப்பாபச்சோணான் பச்சைப்பாம்பு கிடைத்துதென்றால் நாலிரண்டு கொணர்ந்ததிலேகேளு - நாளப்பாஓணானிலாமணக்கு நலமான பேய்பீர்க்கு விரையைத்தானும் - பாளப்பாபோகாமல் எரிகாலந்தான் பக்குவமாய்தானெடுத்துக் கூடச்சேர்த்து - வாளப்பாபச்சைப்பாம்ப திலேவைத்து மண்டலத்தில் புதைத்துவைத்துமுளைக்கத்தண்ணீர். 775

தண்ணீர்விட்டுவர்பயிர்போல்செடிகளெல்லாந் தான்தாரணி யோர்திருடாமல் பதனம்பார்த்து - எண்ணியிட்டுமுத்தெடுக்கும் காலம்வந்தா லித்தைவிட்டால் வுருமாற்றம் வேறேயுண்டோ - மண்ணை விட்டுதண்ணி பயிர் வள்த்தான்பச்சைமாலுடனே பச்சோணான்கூடினாலும் ஒண்ணைவிட்டு விட்டானென் றெண்ணவேண்டா முத்ததுபேய்பீர்க்கும் விரைவொன்றாமணக்கே. 776

ஆமணக்கும் பேய்பீர்க்குங்கலசத்திட்டு அறுகளஞ்சிபாஷாணங் கூடயிட்டு - பீமணக்குங்குழீத்தயில மிறக்கிக்கொண்டு பின் பக்கத்தட்டமியில் திங்கள் கூடில் - நாமணக்கும் நாதாக்கள்கையாடாமல் ரகசியமாயெடுத்துவைத்துப் பதனம்பண்ணிச் - சோமணக்கும் நீலகண்ட துருசுகாந்தஞ் சுடுபறையன்கரியுமியிட் டரைப்பாய்மையே. 777

மையென்னநெத்தியிலே திலதம்பூட்ட மாற்றமென்னஒருத்தருக்குந் தெரியாதப்பா - கையென்னயாவவருக்குங் கொடுத்திடாதே காரண குருவிடத்தில்வைத்துப்போற்றிவாநீ - மெய்யென்னவிண்ணுலகுமாற்றமாச்சு வித்தை யெல்லாமாற்றமடா யெதிரிமாற்றம் - அய்யையோயானைப்பூந்து மறைக்கும்சித்த ரதினாலேவுலகமெலாஞ் சண்ணுவாறே. 778

சண்ணுவார்மாற்றமையத்திலதம்போட்டுத் தங்கம்போலுலகமெங்கும் வந்திருந்து பெண்ணினார்தங்களுக்கு தெரிந்திடாமல் பிறபலமாயழகுள்ள

பெண்கள் தன்னைக் - கண்ணினாலனுசரித்துக்கருவும்வாங்கி கைகலந்துயுடல் செய்துகல்விபூட்டிப் - பண்ணுவாரிது தெரியாதனந் தமிந்தப் பாதகத்தைச்சொல்லாதேவெளியில்தானே. 779

வெளியிலேயுருமாற்றம்விஞ்சைகேளு வீரபத்திரமாகாளிவிமலகாளி ஒளிதருவிறா்சனி கபாலிநீலி யுமையுமையாணை மாற்றமைக்குத் தோற்றாமற்றான் - குளிதருமகாமகிமை மறையும்பூதக் கூகாகாளி குணாலுருமாற்றமேசெய் - அளிதருவியஞ்சனாதேவியாமரைமரை அருளானதேவிக்குமறைமறையாமே. 780

மறைமுகடுசிவடுசந்துதாபரங்கள் மருப்பாவையுருமறையமறையமற்று முறைவிரிவுமைக்கருக்கள் தெளிந்திடாமல் மூலிமறைசோலிமறைமூடுமூடு அறையிருக்கும் விண்பூமிதிசையிலுள்ள ஆவிவுரு பூவிலனை வோருங்காணா - திறையிருக்குஞ்சராசரங்கள் தேகமூடு சிறிமூடு ஆகாசவானமூடே. 781

மூடுகருபேப்பூதமெல்லாமூடு மூடிமிடுமடியூதிமூடு மோகிமூடு ஆடுசமுத்திரமூடு அரவமுடு யளிமூடுயழல்மூடு தீபமூடு - ஓடுமரக்கல மூடுகும்பாமூடு உறைமூடுமறைமூடு உள்ளாள்மூடு - தேடுபொருள் சீவசெந்து யெல்லாமூடு தீவுதீவாந்திரங்க ளெல்லாமூடே. 782

மூடியவாயூமையகூட்டம்மட்டம் முதிர்ந்தவளும்பாத்தவருமட்டீரம்மா - தேடியவாய்சத்தியம் தீருமம்மா செயம்படுங்காரியந்தொழில்கள் மட்டீரம்மா - நாடியவர்கருத்துறைகள் மட்டீரம்மா றா றா று று றே யேன்றெத்திப்பாடிப் - பாடியவாய்கீரிவிடப்பண்ணீர்காளி பச்சாயா பச்சொடுக்குயென்றுஓதே. 783

ஓதியேமாற்றமிடவுருமாறிப்போம் ஓங்காரவுருமாற்ற மும்மதாயி - ஆதியேவிநாயசத்தி ஆங்காரித்து ஆயிரத்தெட்டண்டமெல்லா மறைப்பாளாத்தாள் - சூதிலேதிரிவாடாபதுமடங்காய்ச் சொல்லாதே யிந்தவிஞ்சை சித்தியானால் - நாதியேநாதிவஸ்து அட்டகாளி நடக்குமட்டுஞ்சித்தியடாநாடிப்பாரே. 784

நாடிப்பார்மையிருந்தாலாறால்நன்று ராசியமேமந்திரமே சித்தியாக்கிக் கூடிப்பாரண்டரண்ட கோளமெல்லாங் கொண்டுசெல்லு மையினால்கையிலாட்டால் - ஆடிப்பாரொருகோடிகைமறைக்குமப்பா அங்கைவாகினியுருவையேற்றினாக்கால் - சூட்டிப்பாரவள்துயிலாலுன்னி மூடித் தோற்றாமல் மாறவிப்பாள் சூட்சம்பாரே. 785

குளிநரிகற்பம்

சூட்சமடாமற்பாதிசொல்லக்கேளு சொல்லுகின்ற குளிநரி யொன்றடித்துவந்து - பாச்சடாகோரக்கர்வித்துமூலி பயிர்செய்து சடைவிழுந்தபருவமப்பா - வாச்சடாயிடித்துநல்லவேடுகட்டி - வண்டின் மேலூ மத்தம் விரையுஞ்சேர்த்து - மூச்சடாவண்டுக்களெப் பாண்டத்துள்ளே முத்திரமத்தஞ்சாறுகள் ஞவஸ்தே. 786

வத்துவிட்டுவளமுடனேயரைத்துவில்லை வளர்கிராம்பேலமதில் மகரப்பூவும் - முத்தவிட்டசாதிக்காய்க் கூட்டிமூட்டி முத்தமுடன் வட்டு வட்டாய்ச்செய்துகொண்டு - பித்தெடுக்கஅணுவளவாய்மேருமட்டும் பேசாமல்கொடுத்துவாவெகுநாள்வேண்டாம் - உத்தமற்குககுளிநரி போலிருக்குமப்பா ஒருவருடங்கொண்டாலேகற்பந்தானே. 787

கற்பத்திற்காகாது அனுபோகங்கள் காற்றுடனேகடுவெயிலு மாகாதப்பா - சொற்பத்தில் சித்தியடாகற்பந்தானுஞ் சொல்லாதே யாவருக்குந் தோஷம்தோஷம் - உற்பத்தீவுடமை விட்டாலுனக் கென்னாச்சுவுன் சதையையுன்னுயிற்குச்கொடுத்தேநின்றால் - அற்பத்தில் வாதமப்பா விந்தில்ப்பாச்சிலாகாது நல்லெண்ணையாகாதன்றே. 788

ஒன்றானவஸ்துவடாசித்தருக்கு ஒருமண்டைபுலியோடொன் றுண்டாமாகில்- கன்றாமலதைக்கொணர்ந்து குழியைத்தோண்டிக் கபாலத்தை மலத்திவைத்துயெருவைப்போட்டு - நன்றாகக்கோரக்கர் விரையைத்தூவி நதிவிட்டுயிருபோதும்வளர்க்கும்போது - குன்றாம லண்டையிலே வொடுக்கங்கட்டிக் கொண்டுகாத்திருச்சடைகள் கூட்டுமட்டே. 789

மட்டென்னவதிற்கொஞ்சமுன்போல் பண்ணி வாகாகவில்லை தட்டித்தின்பாயாகில் - நாளென்ன ஒருவருடங்கொள்ளும்போது நாதர்கட்டுப் புலியுருவமாறி தோற்றும் - பட்டென்னநீதினமுங்கொள்ளும் போது பாயுமடாபுலியுருவமாகக்காணும் - தொட்டென்னலகிரி விட்டாலொன்றுமில்லை சுகமாகயிருக்கும்பார் சோதிகாணே. 790

சோதியென்னதங்கநிறஞ்சோதிகாணுங்தோகையரைப்புல்காதே எண்ணைத்தள்ளு - சாதினாலானதங்முன்விந்தப்பா தப்பாதுஉமினிக் கோசலங்களெல்லாம் - வாதமாம்பித்தளையிற்றடவிப்பாரு மாட்டடா குடுகுடுக்கைக்கஞ்சாவோடே - பாதமாம்சாயுச்சியபதவிகூடும் பாரிலே நீயுமொருவாதியாச்சே. 791

ஆச்சடாவொ ருசடையைச் சிறுநீர்விட்டு அரைத்துபில்லையாய்ப் பிடித்துவட்டவோட்டில் - ஈச்சடாசீலைசெய்துமுன்புடத்தி விட்டுப் பார்பற்பமடாகிராணிக்கெல்லாம் - பேச்சடாவெல்லத்திற் கொடுத்துப்பாரு பேசாமலோடுமடாநாள்மூன்றுக்குள் - வீச்சடாவயற்றுவலிகுன்மமெல்லாம் வெல்லத்தின் மண்டலந்தான்தின்னப் போமே 792

தின்னத்தான்குட்டமொடுகுறைநோயெல்லாம் தீருமடாநாற்பதுநாள் கொள்ளும்போது - வன்னத்தான்தேன்கூட்டிக்கொள்ளச்சொல்லு மண்டலத்தில் புளியுப்புத்தள்ளிப்போடு - என்னத்தானிவனென்று கெட்டநோயா ளிரதிக்குக்கணவனென்றுயங்கேவந்து - உன்னைத்தான் கும்பிடுவான்சரணஞ்செய்வா னுருமதனநான்குறை நோக்காட்டானே. 793

நோக்காதுதீருமடா கரப்பன்தீரும் அகரவேநூறுவய திருப்பானப்பா சாக்காலமில்லையொருநாளுந்தள்ளு சாப்பாடுமிகவருந்திச் சண்ணுவான் பார் - கூக்காடுபண்ணாதே குலைசெய்யாதே கொடுத்துப்பார் பற்பத்தை நவலோகத்தில் - தீக்காடுகட்டிட்டபேய் மாலங்காள் செம்புவெள்ளி பத்தறையாஞ்சேர்த்துப்பாரே 794

சேர்த்துப்பாரொருசடையை வாங்கிவந்து சிறுநீர்விட்டரைத்து ரசங்கெந்திசேர்த்துப் - பூர்த்துப்பார்வில்லைகட்டி முன்போலப்பா பூரணச்சந்திரன் போலச்செந்தூரிக்கும் - கார்த்துப்பார்திரேகத்திலுள்ள நோய்கள் கரப்பனதையாப்பனென்றமேகவெட்டை தோர்த்துப்பார் போய்விடுஞ்செந்தூரத்தால் சோகைசயபாண்டில்லை சாவுமில்லை. 795

மதவானைமண்டை

இல்லையேசயமில்லையீளையில்லை இகத்தினில்சிலேற்ப மில்லை கோழையில்லை - கொல்லையில்லையிருக்கையிலேசித்தர்வந்து குளிகை விட்டுக்கொண்டு போயிடுவாரப்பா - சொல்லையிலே தலைவெடிக்கும் நோய்களெல்லாஞ் சோலியில்லைத்தீருமடாசுரூபக்கையில் - ஒல்லயிலே செந்தூரங்குடுக்கைப்போயி லூதடாபதினாறுமாற்றதாமே. 796

மாற்றென்னகரடிமண்டைதன்னிற்செய்தால் வயததிகமாற்றதிகம் பிணிகள்தீரும் - கூற்றனென்றயேனொழிந்துபோனானையா கூர்மையா முன்பாகஞ்செய்துபாரு - ஆற்றென்ன அமரிக்கை யாகச்செய்வாய் ஆலையத்துக் கழிவில்லை திங்கம்தங்கம் - மூற்றென்னவயதிளவை யானாலென்ன முட்டடாகோரக்கர் தழையின்போக்கே 797

கருங்கழுதைமண்டை

மூலியென்றதின்னமொன்றுசொல்லக்கேளு முட்டடாமதவானை மண்டையோட்டில் - பாலமதில்யெருப்போட்டுப்பண்போலே பயிசெய்து சடைவிழுந்தபருவம்பார்த்துக் - கோலமென்னகோசலத்தில் கூட்டியாட்டிக் குருவில்லைசடைக்கஞ்சாகொண்டபேர்கள் - வாலைமின்னாரனுபோக மாயிரம்பேர்வாங்காமல்வந்தாலும்விந்துறாதே 798

விந்துறாத்திகபலங் கொடுக்குமப்பா மேலுமென்னமண்டலந்தான் கொண்டபோது - இந்திராவெள்ளியெல்லாம் பகலிற்றோற்றும் இரதிமதனழகு போலிருப்பாய்நீயும் - முந்திராச்செய்தபடி பற்பம் பண்ணி மூட்டடாசெந்தூர மாகத்தானும் நந்திநாதாக்களிரு பாதத்தாணை நாலாயிரம்வியாதியெல்லாம் நாசந்தானே. 799

நாசமடா கருங்கழுதைமண்டையோட்டில் நானிலத்தில் எருபோட்டு முன்போற் செய்து பாசமுடன் வெட்டிவைத்து வில்லையாக்கி பண்டுபோல் கொண்டுவா பாரின்மீதில்- நேசமுடன் சாவில்லை நோயுமில்லை நிறுவாணிமூத்தவள் சானித்தியமாவாள் - போசனமுமிக வேண்டுங்கரிக்கி மைச்செய் பூதலத்தில் பிசாசுமுதல் பூதம்போமே. 800

பூதம்போம் பொன்காணும் புதையல்தோன்றும் புரவியிடபாகத்தில்பயிர் செய்தாலும் - காதங்கள் நூறங்கள் நிமிஷமப்பா கவனமிட காலோச்சல்கடுப்போயில்லை - வாதங்களில்லையிதில் வயித்தியமுண்டு வாசிகலையாது மவுனந்தங்கும் சூதங்களிச்சாற்றில் கட்டும்பாரு துரங்கமென்றகுதிரையிட தலையோடாமே. 801

ஓடுமேகாலவிசையுண்டாகுமப்பா உங்களுக்குநாதாக்களுண்டாக் கத்தான் கூடுமேகூடுகிறதாய்வந்தாலும் கோரக்கர்தழைதனையே கொடுப்பாரோபார் நாடுமேயானால்த்தானீயுங்கேளீர் நாதனிலை யொருத்தனல்லால் வேறெயில்லை வீடுமேபிலத்துதடாமூலாதாரம் வீடுபோய்ச் சேரயிதுயேணிபாரே. 802

ஏணியென்றயென்றந்தைபிண்ணாக்கீசர் ஈசரடி பணிந்தேத்தி நந்திகூறும் - வாணிகலைதெரிந்துரைத்த திவையென்னூறு வழலையறி தெடுத்துரைத்த மச்சன்பாடல் காணபிசகாதட்டிகோடிமட்டுங் கருத்துள் ளைவத்துப்பொருளறிந்து கண்டுதேறி - ஆணியுரையாணி சித்த நூல்களெல்லா மாட்டிவித்தேனருள்பூமிநாதவித்தே. 803

வித்தகத்தோன்பித்தோனேவெளிவிடாதே வேதாந்தமனோன் மணித்தாய்பாதத்தாணை சித்தருக்காமிந்தயெண்ணூற்பெருநூலப்பா சிவஞானந்தங்குகின்றபெரியோற்காகும் மத்தொருத்தரின்னுலைப் பதனம்பண்ணி வைத்தாலுமவற்குமுத்தி வாய்க்கும்வாய்க்கும் பத்தருக்குப்பாடி வைத்த சதமெட்டான பதிவாகும்பெருநூல் மெயஞ்ஞானமுற்றே. 804

மச்சமுனி நாயனாரருளிச்செய்த பெருநூல்பாடல் - முற்றுப்பெற்றது.

ஞானகுருதேசிகன் பாதாரவிந்தமேகெதி குருசாமிதுணை

மனோன்மணிதுணை

வாலைசுப்பிரமணிதுணை

கணபதிதுணை.

போலீஸ்யேட் பென்சன்னதார் அருணாசலமுதலியார் யேட்டுப்பிரதியைக்கொண்டும் பரிசோதித்தது.

****